விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 102 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 24, திங்கட்கிழமை 07.03.2016

### சம்பந்தனை சந்திக்கிறது மக்கள் கருத்தறியும் குழு

கொழும்பு, மார்ச் 7
புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில்பொது மக்களிடம் பக். 27

## உங்கள் விடுதலைக்குப் பாடுபடுவோம் உணவு தவிர்ப்பை உடன் கைவிடுங்கள்

### 14 தமிழ் அரசியல் கைதிகளிடமும் கூட்டமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 7
நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காணாமற்போனோர் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான சபை ஒத்திவைப்புப் பிரேரணை விவாதிக்கப்பட்ட பின்னர், கைதிகளின் விடுதலை தொடர்பில் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு விரைவில் முடிவொன்று எட்டப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
எனவே, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது போராட்டத்தை உடன் கைவிட வேண்டும் எனத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.
இவ்வாறு பக். 29

### இரத்தினபுரியில் நில அதிர்வு

கொழும்பு, மார்ச் 7
இரத்தினபுரி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் நேற்று இரு தடவைகள் சிறிய அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.
அதிகாலை 3.15 மணியளவிலும், பிற்பகல் 2.15 மணியளவிலும்
இந்த பக். 29

# வெள்ளைக் கொடியுடன் வந்த 150 பேரை பஸ்ஸில் கொண்டு சென்றது இராணுவம்

### நேரில் கண்டதாகப் பெண்ணொருவர் ஆணைக்குழுவிடம் இரகசியச் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 7
வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உள்ளிட்ட சுமார் 150 பேரைப் படையினர் பஸ்ஸில் ஏற்றிச் சென்றதைத் தாம் கண்டதாகப் பெண் ஒருவர் சாட்சியம் அளித்துள்ளார்.
கடந்த வாரம் காணாமற்போனோர் குறித்து யாழ்ப்பாணத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்த மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக் குழுவிடமே இது பற்றிய சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டேலீடர்' ஆங்கில ஊடகத்தின் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
பாதுகாப்புக் கருதித் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத பெண் ஒருவர், கோப்பாயில் நடந்த அமர்வின்போது, இறுதிப் போர் பற்றிய சாட்சியத்தை இரகசியமாக அளித்திருந்தார்.
போரின் இறுதிக் கட்டத்தில் 2009 மே 16 ஆம் திகதி நந்திக் கடல் வழியாகப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தோம். அங்கிருந்து நாம் புதுக்குடியிருப்புக்குக் கொண்டு செல்லப்பட்டோம்.
நாம் நந்திக்கடலில் நின்ற போது, நடேசன் மற்றும் பக். 29

"விடுதலைப் புலிகளை முன்னே வருமாறு இராணுவத்தினர் கூறினர். சரணடைந்த விடுதலைப் புலிகள் தனியாகக் கொண்டு செல்லப்படுவதால் எனது கணவர் சரணடைவதற்கு அஞ்சினார்."

## கைதிகளில் மூன்று பேர் கடுமையாகப் பாதிப்பு

### தொடர்கிறது உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 3 பேரின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டபோதும், அவர்கள் மருத்துவ சேவையைப் புறக்கணித்தனர்.
இந்த நிலையில் நேற்றுக் குறித்த கைதிகள் மூவரையும் கட்டாயப் படுத்தி அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாக சிறைச் சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
எனினும் தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் பக். 29

முச்சந்தி முரளி



கண்ணால கண்டவை சொன்னாலும் அவை கேக்கவே போயினம்......

## நாவற்குழியில் அரச காணிக்குள் குடியேறியவர்கள் வெளியேற்றம்

### அதிரடிப்படையினருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியெனத் தெரிவித்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7
நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில், புதிதாக அமைத்த கொட்டில்களை விசேட அதிரடிப் படையினர் அகற்றியதாகவும், அதன் பின்னர் பொலிஸார் தலையிட்டு தங்களை அங்கிருந்து செல்லுமாறு பணித்துக் கையெழுத்து வாங்கியதாகவும் அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸாரின் கருத்தை அறிவதற்காக,
பொலிஸ் ஊடகப் பக். 29

## ஒரு வீட்டுக்கு 21 லட்சம் ரூபாவா? அரச தரப்புக்குள் எழுந்தது எதிர்ப்பு

### மீள்மதிப்பீடு செய்கின்றது உபகுழு

கொழும்பு, மார்ச் 7
வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்காக 21லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டமை தொடர்பில் அரச தரப்புக்குள் எழுந்த எதிர்ப்பையடுத்து, அதனை மீள் மதிப்பீடு செய்வதற்கு அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்த உபகுழு தனது அறிக்கையை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மீள்குடியேற்ற அமைச்சினால், வடக்கு - கிழக்கில்
65 ஆயிரம் வீட்டுத் பக். 29

## 7 கிலோ தங்கத்துடன் கடலில் இருவர் கைது

### இந்தியாவுக்குக் கடத்தியபோது

யாழ்ப்பாணம், மார்ச் 7
இந்தியாவுக்குப் படகில் கடத்தப்பட்டுக்கொண்டிருந்த 7 கிலோ 600 கிராம் தங்க பிஸ்கட்டுகளுடன் இலங்கைக் கடற்பரப்பில் வைத்து இரண்டு பேரைக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.
கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகளுடன் இருவரும் பக். 27

## வடக்கு ஆளுந்தரப்பு முரண்பாடு; நேரில் தலையிடுவார் சம்பந்தன்

### நேற்றைய கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7
வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியினுள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில், தான் நடவடிக்கை எடுப்பதாக - அந்த விவகாரத்தை கையாள்வதாக, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பக். 29

## எவ்வளவு செய்தும் தமிழர்களின் இதயத்தை வெல்ல முடியவில்லை

### தோல்வியை ஒப்புக்கொண்டு குமுறும் ஒரு குரல்

கொழும்பு, மார்ச் 7
பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தபோதிலும் என்னால் வடக்கு, கிழக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியாமல் போனது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.
அத்துடன், மலையகத் தோட்டத் தொழிலாளர்களை கடவுளின் மக்கள் என்றும் அவர் வர்ணித்தார். பக். 29



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கிரிக்கெட் போட்டிகளில் வன்முறையை அனுமதிக்க முடியாது

## குற்றமிழைப்போருக்கு எதிராக இனி கடும் நடவடிக்கை; யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7

நகரப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் போது, மைதானங்களில் எந்தவிதமான வன்செயல்களையும் அனுமதிக்க முடியாது. அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

10 கிலோவுக்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் தாக்கல் செய்த பிணை விண்ணப்ப விசாரணையின்போதே நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் போட்டிகளின் போது மைதானங்களில் எந்தவிதமான வன்செயல்களில்ஈடுபட்டாலும்அதுதண்டனைக்குரிய குற்றமாகும். கிரிக்கெட் போட்டி இடம் பெறும் மைதானத்துக்குள் மதுபோதையில் செல்வது தடை செய்யப்படுகின்றது. மைதானத்துக்குள் செல்பவர்கள் போதைவஸ்து பாவித்துள்ளனரா? என்பது சோதனையிடப்பட்டு, போதைக்கு ஆளாகியிருப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள். - என்று நீதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மது போத்தல்கள், பியர் ரின்களுடன் மைதானத்துக்குள் செல்வது தடை செய்யப்படுகின்றது. மைதானத்துக்குள் குழுக்களாக இயங்கி அநாகரிகமான முறையில் மோதல்களில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றச் செயலாகும்.

மைதானத்தின் வெளி வீதிகள் மற்றும் யாழ்.வீதிகளில் ஒழுங்கற்ற முறையில் பாண்ட் வாத்தியங்கள் அல்லது மேள தாளங்களுடன் முறையற்ற விதத்தில் ஊர்வலம் செல்வது, சட்டவிரோதமாகக் கூடுவது, போக்குவரத்துக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறு விளைவிப்பது, அரச திணைக்களங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகளின் எதிரில் நின்று கூக்குரலிடுவது, கல்லூரி ஆதரவாளர்கள் என்ற போர்வையில் வீதிகளில் ஆட்டம் போடுவது போன்ற அனைத்துக் குற்றச் செயல்களும் தடைசெய்யப்பட்டுள்ளன.

ஒழுங்கு முறையான வாத்தியக் குழுக்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட வாத்திய மேள தாள கோசங்கள் என்பவற்றில் தலையீடு இல்லை. மைதானத்துக்கு வெளியில் உள்ள ஐஸ் கிறீம் வியாபாரிகள், அன்னாசி மற்றும் சிற்றுண்டி வியாபாரிகள் போதை வஸ்து மற்றும் மது விற்பனையில் ஈடுபடக் கூடாது.

இந்த வியாபாரிகள் போதைவஸ்து மற்றும் மது விற்பனையில் ஈடுபடுகின்றனரா? என்று அறிந்து அத்தகையோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வெற்றி தோல்விகளைச் சகிக்க முடியாத ஆதரவாளர்கள் வன்செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் கைது செய்யப்பட்டு கிரிக்கெட் போட்டிகள் முடியும் காலம் வரையில் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

கிரிக்கெட் போட்டிகளில் பங்கு கொள்ளும் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர் குழாம், மாணவர் தலைவர்கள், சாரணர் அமைப்பு, முதலுதவிக் குழுக்கள், பாடசாலைகளின் விசேட அணிகள், பழைய மாணவர் குழாம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று திரண்டு தங்கள் மாணவர்கள், ஆதரவாளர்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட வரும் பொதுமக்கள் விடயத்தில் பொலிஸார் இறுக்கமான பாதுகாப்புநடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

போதை வஸ்து, கஞ்சாப் பாவனை, விற்பனை மற்றும் மதுப்பாவனை என்பவையே மிக மோசமான குற்றச் செயல்களுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கின்றன. - என்று குறிப்பிட்டார்.

இந்தப் பிணை மனுவில் 10 கிலோவுக்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக 18 நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட நபருக்குப் பிணை வழங்கக் கோரி தாக்கல் செய்த மனுவை, அதிவிரைவான பிணைக் கோரிக்கை மனு எனவும், பொலிஸ் விசாரணைகள் முற்றுப் பெறாத சூழ்நிலையில் பிணை மனுவை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்து பிணை மனுவை நீதிபதி நிராகரித்தார்.

யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதால் இந்தச் சூழ்நிலையில் போதை வஸ்தை விற்பனை செய்யும் சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தால், ஒரே இடத்தில் ஒன்று கூடும் மாணவர்களிடையே போதை வஸ்து விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துவிடும் எனச் சுட்டிக்காட்டிய நீதிபதி பிணை மனுவைத் தள்ளுபடி செய்தார்.

வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் இலங்கையின் முக்கிய பாடசாலை களுக்கிடையில் நடைபெறுகின்ற மாபெரும் கிரிக்கெட் போட்டிகளில் இரண்டாவது மாபெரும் கிரிக்கெட் சமர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்கும் இடையில் இந்த வாரம் 3 நாள்கள் நடைபெறவுள்ளது. (ற-ஐ-4)

## ஏ.ரி.எம். மூலமான பண வைப்பு வடக்கிலும் அறிமுகமாகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஏ.ரி.எம். மூலமாக பணம் வைப்புச் செய்யும் சேவையை இலங்கை வங்கி, வடக்கில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் அறிமுகம் செய்கின்றது. முதற் கட்டமாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், வவுனியாக் கிளையிலுமே இந்தச் சேவையை வழங்கும் ஏ.ரி.எம். இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி தெரிவித்ததாவது-

நாடு முழுவதிலும் இவ்வாறான 200 ஏ.ரி.எம். இயந்திரங்கள் புதிதாகப் பொருத்தப்படவுள்ளன. இவற்றினூடான பண வைப்புச் செய்வது மற்றும் பணம் மீளப் பெறுவது ஆகிய இரண்டுநடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். இந்தச் சேவை 24 மணி நேரமும் இயங்கும். வடக்கில் 13 ஏ.ரி.எம். இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன. முதற் கட்டமாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், வவுனியாக் கிளையிலும் இந்த இயந்திரங்களின் சேவை செயற்படுத்தப்படவுள்ளன. பரீட்சார்த்த சேவை வவுனியாவில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த ஏ.ரி.எம். இயந்திரத்தின் ஊடாக, ஆகக் குறைந்த தொகையாக 100 ரூபாவே வைப்புச் செய்ய முடியும். பண வைப்புத் தொகை நூறு ரூபாவின் மடங்கிலேயே ஏ.ரி.எம். இயந்திரத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். மூன்றாம்நபர் ஒருவருக்கு பணம் வைப்புச் செய்பவர் ஆகக் கூடிய 2 லட்சம் ரூபாவை வைப்புச் செய்ய முடியும். கடனட்டை வைத்திருப்பவர் ஒரு மில்லியன் ரூபா வரையில் வைப்புச் செய்ய முடியும். இந்தப் பண வைப்புக்களுக்குரிய பற்றுச் சீட்டுக்கள் யாவும் ஏ.ரி.எம். இயந்திரத்தால் உடனடியாகவே வழங்கப்படும் - என்றார்.

இந்தச் சேவையூடாக, பண வைப்புச் செய்வதற்கு வங்கியில் நீண்ட நேரம் வாடிக்கையாளர்கள் காத்திருக்க வேண்டியதில்லை. அத்துடன் விரும்பிய நேரத்தில் பண வைப்புச் செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் வங்கியின் கிளை ஒன்றில் ஏற்கனவே இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-ஐ-5-ரி4-101)



மின்வழங்கலில் ஏற்படும் தடைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மின்சார சபையினர் மின்வடங்களில் தேங்கும் தூசிகளைத் தண்ணீரால் துப்புரவாக்கி வருகின்றனர். யாழ். வைத்தியசாலை வீதியில் கச்சேரியடியை அண்மித்து நேற்று இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ற-4)

## கடற்றொழிலாளர் சங்க நிர்வாகிகளின் விவரங்களைத் திரட்டும் சீருடையினர்

### தென்மராட்சி மீனவர்கள் அச்சத்தில்

சாவகச்சேரி, மார்ச் 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் நிர்வாகத்தினரின் குடும்ப விவரங்களை சீருடையினரின் சிவில் அலுவலகத்தினர் திரட்டி வருவதுடன் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைப் புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சங்கப் பிரதிநிதிகள் புகைப்படம் எடுக்க மறுப்புத் தெரிவித்த போதிலும், அவர்களை வலுக்கட்டாயமாகக் கதிரைகளில் அமர்த்திப் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியூர் கடற்றொழிலாளர்கள், தென்மராட்சிப் பிரதேச கடலேரியில் தொழிலில் ஈடுபடுவது குறித்து சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்து வரும் நிலையில், சீருடையினர் குடும்ப விவரங்களையும் திரட்டுவதுடன், புகைப்படமும் எடுப்பது குறித்தும் நிர்வாகத்தினர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் கெற்பேலி, கச்சாய், மீசாலை, பெரியமாவடி, கோயில்குடியிருப்பு, தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி கோயிலாக்கண்டி போன்ற கடற்றொழிலாளர் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் மீண்டும் துஷ்பிரயோக முயற்சி

**சிறுமியின் சாதுரியத்தால் தவிர்ப்பு**

வவுனியா, மார்ச் 7

பாலியல் துஷ்பிரயோக முயற்சி ஒன்று மீண்டும் வவுனியாவில் பதிவாகியுள்ளது. நேற்று முன்தினமும் பதின்ம வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும் முயற்சி நடந்துள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர். எனினும் அதற்கு முயன்றவர் எனக் குற்றஞ்சாட்டப்படும் குடும்பஸ்தர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒரு இடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

எனினும் சிறுமி கதறிக் கொண்டு சாதுரியமாக தப்பியோடியதால் சிறுமியின் வீட்டுக்கு தகவல் தெரிந்து முயற்சி தடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த 16 ஆம் திகதி ஒரு மாணவி துஷ்பிரயோகத்தின் பின் படுகொலை செய்யப்பட்டிருந்தார். (ற-ஐ-4)

# 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் உள்ளூர் நிறுவனங்களிடம்

## வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து மீளப் பெறுவதற்கு ஆராய்கிறது அரசு

கொழும்பு, மார்ச் 7

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் 65, 000 வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து மீளப்பெற்று உள்ளூர் கட்டுமாண நிறுவனங்களிடம் வழங்க அரசு ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூர் கட்டுமாண நிறுவனங்கள் குறைந்த செலவில் வீடமைப்புப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் எனத் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு, இலங்கை மேஜர் கட்டுமாணச் சங்கம், கடந்த வாரம் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே இந்தத் தீர்மானத்தை அரசு எடுத்துள்ளது.

அத்துடன், குறித்த வீட்டுத் திட்டத்துக்கான தகுதியான கட்டுமாண நிறுவனங்களை ஒழுங்கமைப்பதற்கு, இலங்கை மேஜர் கட்டுமாணச் சங்கத்தைத் தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார்.

குறித்த திட்டத்தினால் அரசுக்குப் பல்வேறு அழுத்தங்கள் இருந்தன. ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் குறித்த வீட்டுத் திட்டத்தின் கட்டுமாணப் பணிகள் பிரான்ஸ் நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த நிறுவனம் உரும்பிராயில் அமைத்த முதலாவது பிற்றிங் மாதிரி வீட்டைக் கடந்த வெள்ளிக்கிழமை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பார்வையிட்டிருந்தார்.

எனினும் தற்போது, தலா 6,500 வீடுகள் வீதம் இலங்கையிலுள்ள 10 கட்டுமாண நிறுவனங்களிடம் பிரித்து வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதில் 6 நிறுவனங்கள்ஏற்கனவே முன்வந்துள்ளன.

இது தொடர்பில் தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் மற்றும் கட்டுமாணத் தொழில் நிறுவனத்துக்குமிடையில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அதன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில், வடக்கு-கிழக்கில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறை, மூலப்பொருள்களின் விலை அதிகம் என பிரான்ஸ் நிறுவனத்தின் ஆலோசகர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், சூரிய மின்கலம், மலசல கூடம், கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி, நீர்த்தொட்டி, மின் இணைப்பு மற்றும் பொருத்தல் பணிகள், தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு அடுப்பு மற்றும் மின்விசிறி என அனைத்தும் தமது நிறுவனத்தால் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் உள்ளூர் கட்டுமாண நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர், குறித்த வீட்டுத்திட்டத்தின் மதிப்பீடு தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

உள்ளூர் ஒப்பந்த நிறுவனத்தினால் குறித்த திட்டத்தின் ஒரு வீட்டை 15 லட்சம் ரூபா செலவில் அமைத்து வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

(த-வ)

## வில்லிசை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 7


புங்குடுதீவு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மகாசிவராத்திரி விழாவில் யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் சிவராத்திரி மகிமை என்னும் தலைப்பில் வில்லிசை நிகழ்வு நடைபெறும்.

(ற-ஜ-ரி)

Galaxy Star
வெற்றி வாரம் 040
திகதி 06.03.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 01 06 47 60
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,518,180/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 06.03.2016
வெற்றி வாரம் 1951
வர்ணம் ஊதா
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
03 14 35 50
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,811,560 /-

SPOKEN ENGLISH
யாழ்நகரில் திரு.ஷாம்சன் ஆசிரியரின்
Personal Class
தனிப்பட்ட ரீதியில் திரு.ஷாம்சன் ஆசிரியரிடம் ஆங்கிலப் பேச்சுப்பயிற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு.
அடிப்படையில் இருந்து குறுகிய காலப்பகுதியில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசப்பழகுவதற்கான நேரடிப்பயிற்சி.
வயது எல்லை : 18 இற்குமேல் எவரும் இணையமுடியும்!
தனியான வகுப்பு என்பதால், முன்பதிவின் அடிப்படையில் 10 மாணவர்களுக்கு மட்டுமே தனித்தனி நேரம் ஒதுக்கித்தரப்படும்!
பயிற்சியில் இணைவோர் தாம் விரும்பிய நேரத்தினை தெரிவுசெய்யமுடிவதுடன் 19.03.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486




நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் புதிதாகக் குடியமர்ந்தோரின் கொட்டில்களை அகற்றிய விசேட அதிரடிப் படையினர், அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கூறியதுடன், குறித்த அறிவித்தலை நேற்று அங்கு தொங்கவிட்டுள்ளனர். (வ-5)

## 'புதியவள்' குறுந்திரைப்படம் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 7

புதியவள் எனும் பெயரிலான குறுந்திரைப்பட வெளியீடு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தை அண்மித்துள்ள பி.சி.எச். மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு இழப்புக் களைச் சந்தித்த பெண், சமுதாயத்தில்தனித்துவாழும் போது, எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றி லிருந்து எப்படி விடுபடுவது, அவ்வாறு விடுபட்டு எப்படி இந்தச் சமூகத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகிறாள் உள்ளிட்ட பல விடயங்களையும் எடுத்துக்காட்டுவதாக இந்தக் குறும்படம் அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், சட்டத்தரணி சோ.தேவராஜா, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், உளசமூகப் பிரிவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கு.கெளதமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

## வர்த்தக நிலையத்தில் திருட்டு

சாவகச்சேரி,மார்ச் 7

ஏ- 9 வீதியுடன் இணைந்துள்ள வர்த்தக நிலையம் இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்து அரிசி, பால்மா பைக்கற்றுக்கள் போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு எழுதுமட்டுவாழ் சந்தியில் உள்ள வர்த்தக நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையினர் கடந்த வருடம் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தைக்கு அருகில் மூன்று கடைத்தொகுதிகளை அமைத்து வாடகைக்கு வழங்கியிருந்தனர். கடைத் தொகுதியில் அமைக்கப்பட்ட பலசரக்குக் கடையிலேயே குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

10 கிலோ நிறையுடைய அரிசி பைக்கற்றுக்கள் 10, அங்கர் பால்மா 30, நெஸ்ட மோல்ட் பால்மா 4 ஆகியவை திருட்டுப் போயுள்ளன என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் ஓலைக் கொட்டில்கள், தகரக்கொட்டில்கள் போன்றவற்றில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் இதுவரை திருட்டு இடம்பெறவில்லை. நிரந்தர கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த சுருக்குக் கதவின் பூட்டை உடைத்து திருட்டு இடம்பெற்றுள்ளது. இதனால் ஏனைய வர்த்தகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஜ-9)

அறிமுகப்படுத்துகின்றோம்
www.mcqtutor.com
MCQ tutor
பல்தேர்வு வினா பயிற்சியாளர் - இணையவழி சுயபரீட்சைப் பயிற்சிகள்
தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகளின் தொகுப்பு
MCQ tutorதளத்தில் உள்ள வசதிகள்
தினமும் ஒரு பரீட்சை: பதிவு செய்துள்ள மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பாடத்தில் தினமும் ஒரு பல்தேர்வு வினா பரீட்சையினை செய்து பார்க்கலாம்.
உடனடிப் பெறுபேறு : பரீட்சைக்கான நேரம் முடிவடைந்ததும் அல்லது அனைத்து வினாக்களுக்கும் விடை தெரிவு செய்து முடிந்ததும் உடனடியாகவே அந்தப் பரீட்சைக்கான பெறுபேறு திரையில் தோன்றும்.
சரியான பதில்கள்: பரீட்சையின் பெறுபேற்றினைப் பார்த்தபின்னர் ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினையும் தளத்திலே பார்க்கலாம்.
விடைக்கான விளக்கம்: சரியான விடையினைப் பார்த்த பின்னர் அதில் சந்தேகம் ஏதாவது இருப்பின் தேவையான வினாக்களின் விடைக்குரிய விளக்கங்களையும் காணலாம்.
தன்னியக்க நேரக்கணிப்பான்: ஒவ்வொரு பரீட்சைக்கும் அதற்குரிய நியமங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படும். பரீட்சை ஆரம்பமானதும் தன்னியக்க நேரக்கணிப்பான் இயங்கத் தொடங்கி விடும். குறிப்பிட்ட நேரத்துக்குள் பரீட்சை நிறைவுக்கு கொண்டு வரப்படும்.
விரும்பிய நேரத்தில் பரீட்சை: மாணவர்களின் வசதிக்கேற்ப வீட்டில் இருந்தே விரும்பிய நேரத்தில் பரீட்சைகளை மேற்கொள்ளலாம்.
ஒரு பரீட்சைக்கான கட்டணம் ரூபா 9/= மட்டுமே.
விரைவில் ...! G.C.E (O/L) மற்றும் G.C.E (A/L) மாணவர்களுக்கான MCQ பரீட்சைகள்
பதிவுகள் மற்றும் மேலதிக விவரங்களுக்கு:
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 704 7733, 021 221 6222
mcqtutor@gmail.com
www.mcqtutor.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசத்தில் வீதி விளக்குகள் திருத்தம்

## ஆளுநரின் அறிவிப்பையடுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 7
மாகாண ஆளுநரின் தொலைபேசி அறிவிப்பையடுத்து சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்து காணப்பட்ட வீதி விளக்குகள், இலங்கை மின்சார சபையால் திருத்தப்பட்டு புதிய விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.
சாவகச்சேரி பிரதேச சபை இயங்கிய சபையின் உறுப்பினர்களுக்கென நிதி ஒதுக்கப்பட்டு, பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.
விளக்குகள் பொருத்தப்பட்டு 15 தினங்களில் பெரும்பாலான விளக்குகள் பழுதடைந்தன. இந்த நிலையில் கடந்த ஒரு வருடமாக பொதுமக்கள் பிரதேச சபை, பிரதேச செயலகம், இலங்கை மின்சார சபை ஆகியவற்றில் முறையிட்டனர்.
பிரதேச சபை கலைக்கப்பட்ட பின்னர் பிரதேச சபை செயலாளரால், புதிதாக மின்குமிழ்களைக் கொள்வனவு செய்து அவற்றைப் பொருத்துமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் அங்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்பட்டதால் பொருத்தப்படவில்லை.
வீதி விளக்குகள் எரியாத போதிலும் அதற்கான கட்டணம் பிரதேச சபையினால் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையை கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஞானலிங்கம் தலைமையிலான குழுவினர் மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்து முறையிட்டனர்.
ஆளுநர் உடனடியாகப் பிரதேச சபையுடனும் இலங்கை மின்சார சபையயுடனும் தொடர்பு கொண்டு உடனடியாகப் பழுதடைந்த வீதி விளக்குகளைச் சீர் செய்யுமாறு கூறியதையடுத்து நேற்று முன்தினம் தொடக்கம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வீதி விளக்குகள் திருத்தப்பட்டு வருகின்றது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-ஐ-9)

" ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ "
விஸ்வகர்மா சிற்பக் கூடம்
ஆலய நிர்மாண பிம்பலஷணம், காஸியப்ப சிற்ப சாஸ்த்திரம், சிற்பச்செந்நூல், சிற்பரத்தினாகரம், விஸ்வகர்ம குலத்தினரால் வடிவமைக்கப்பட்ட செப்புத் திருமேனிகள், சிலாவிக்கிரகம், கலசங்கள், துவாஜஸ்தம்பம், திருவாசிகள், சோட உபசாரங்கள், தேர்யாகசாலை அலங்காரப் பொருள்கள் முதலான அனைத்து சிற்பப் பொருள்களும் தியான முறைப்படி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு : விஸ்வஸ்ரீ தியாகராஜா ஆச்சாரி ரவிசங்கர்
208 - P1/1, செட்டியார் கொழும்பு - 11
077 900 6584
(69748)
(14,18,20)

Vacancy
யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நட்சத்திர அந்தஸ்துடைய ஹோட்டல் ஒன்றுக்குப் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
STAFF REQUIRED FOR AN UPCOMING STAR CLASS HOTEL IN JAFFNA
* FRONT OFFICE / RECEPTION - FEMALES ARE ENCOURAGED TO APPLY
* CASHIERS
* ACCOUNTANTS
* GUEST RELATION OFFICER - FEMALE (Age Below35 Yrs)
* FOOD & BEVERAGE STAFF
* KITCHEN STAFF
* HOUSE KEEPING STAFF
* GARDENERS
* STEWARDS / HELPERS
* POOL ATTENDANT
05.03.2016 பக்கம் 04 இல் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரி தவறானது. கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
Requirements - English Knowledge, Computer Skills & Pleasant Looking, Forward your CV'S To- info@thethinnai.com
Before 12th March
மேலதிக விவரங்களுக்கு: 076 752 8628

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் ஆசிரியர், யாழ் யோக அரங்க மாணவி, நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் சேவகி, சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின் முன்னணித் தலைவி. கரவெட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் செல்லம்மா தம்பதிகளின் புதல்வி
திருமதி நவமணி ராஜ்குமார்
BA(Hons)Tamil Sp.1st Class. P.G.D.E
M.Phil in Tamil, M.Ed(1st Class)
அவர்கள் அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தினால் முதுமாணிப்பட்டம் M.Ed (1st Class - Batchtop) வழங்கப்பட்டதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். அத்தோடு விழா எடுத்துக் கௌரவிக்கவுமுள்ளோம்.
வாழ்த்தி மகிழ்வோர்:
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியமும்
Best wishes
(69873)(11,17,18)

அறிவித்தல்
யாழ்ப்பாணம், கோண்டாவில், கோண்டாவில் மேற்கு, கே.கே.எஸ் வீதி என்னுமிடத்தைச் சேர்ந்த பாலக்கிருஷ்ணன் கைம்பெண் சத்தியபாமா ஆகிய நான் தெரியப்படுத்துவதாவது யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறையில் அமைந்துள்ள முத்தட்டு நிலப்பரப்பு 6 குளி 0.96 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தில் எனக்கு சீவிய உரித்துள்ளது. மேற்படி ஆதனத்தை எவரேனும் எனது மகளிடம் விலைக்கு கொள்வனவு செய்திருப்பின் அவ்வுறுதியை கையுதிர்க்குமாறு தெரிவிக்கின்றேன். இல்லையேல் என்னால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
திருமதி சத்தியபாமா பாலக்கிருஷ்ணன்,
கே.கே.எஸ் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
021 222 3604
(1,17,18,20)

# உழவு இயந்திரச் சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 7
உரிய அனுமதிப்பத்திரமின்றி மணல் கொண்டு சென்ற உழவு இயந்திர சாரதிக்கு யாழ். நீதிவான் மன்றால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.
ஏ.வி.வீதி கொழும்புத்துறையைச் சேர்ந்த குறித்த உழவு இயந்திரத்தின் சாரதி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவர் இதே போன்ற குற்றச்சாட்டுக்கு இதற்கு முன்னரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து மேற்படி உத்தரவை பிறப்பித்த பதில் நீதிவான் க.அரியநாயகம் மீண்டும் இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபட்டால் வாகனம் பறிமுதல் செய்யப்படும் என எச்சரிக்கை செய்தார். (ற-ஐ-103)

வீடு வாடகைக்குண்டு
உரும்பிராய் சந்திக்கு மிக அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர் குடும்பம் விரும்பத்தக்கது
(தி.29560)(12,18,20)
077 440 3001, 021 223 0691

கடை வாடகைக்கு
சுன்னாகம் ரயில் நிலையம், வைரவர் கோயில் முன்பாக அமைந்துள்ள இரண்டு கட்டட தொகுதிகள் நிலம் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட (சகல வியாபார வைத்திய சேவைக்கு பயன்படுத்தக்கூடிய) கடை வாடகைக்கு உடன் கொடுக்கப்படும்.
குறிப்பு: உணவகத்திற்குத் தேவையான சகல தளபாடங்களும் பாத்திரங்களும் உடன் விற்பனைக்கு உண்டு.
(68549)(12,18,20)
தொடர்பு: 076 7043 186

# 'மொழி' என்பது சமுதாயத்தை இணைக்கும் மாயச் சங்கிலி

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
மொழி என்பது இயற்கை அளித்த அறிவுக்கொடை. சமுதாயத்தை இணைக்கும் மாயச் சங்கிலி. சிந்தனையை நிலை பெறச் செய்யும் சீரிய சாதனம். மொழி என்பது ஓர் இனத்தின் இனிய உயிர்.- இவ்வாறு கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை தெரிவித்தார்.
சங்கத்தின் 22 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமை உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பாவேந்தன் பாரதிதாசன் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றார். எனவே மொழி நசிந்தால் அந்த இனம் வரலாற்று இடுகாட்டில் புதையுண்டு மறையும்.
எண்ணமலர்களைத்தொகுத்து அளிக்கும் இந்த மொழி நாசமாகி விட்டால் அந்த அரியமலர் கால நெடுங் கணக்கில் மூழ்கி மறைந்து விடும். எனவே தான் தமிழ்ச் சங்கம் இவற்றை எல்லாம் எண்ணியே எங்கும்; எதிலும் தமிழை வளர்த்து பாதுகாக்க வேண்டும் என்பதற்காக கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. - என்றார். இந்த நிகழ்வில் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் தமிழ் வளர்ச்சி கருதி சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ற-ஐ-ரி)

# எரிபொருள் விலை குறைப்பால் விறகு விற்பனையில் மந்த நிலை

யாழ்ப்பாணம்,மார்ச் 7
எரிவாயு, மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விறகு விற்பனையில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. விறகு காலைகளில் விறகு தேங்கிய நிலையிலிருப்பதால் விறகு கொத்தி வாழ்க்கை நடத்தி வருகின்ற தொழிலாளர்கள் போதிய வருமானமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த காலங்களில் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலை அதிகரித்திருந்ததால் குடா நாட்டில் வசிக்கும் பெரும் பாலான மக்கள் சமையல் தேவைகளுக்கு விறகை மட்டும் பயன்படுத்தி வந்தனர். இதனால் விறகு காலைகளில் விறகு விற்பனை 'ஓகோ' என்று இடம்பெற்று வந்ததுடன் விறகு கொத்தும் தொழிலாளர்களும் நிம்மதியாக வாழ்க்கை நடத்தி வந்தனர்.
தற்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசு பாவனையாளரின் நலன் கருதி எரிவாயு, மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலையைக் கணிசமான அளவு குறைந்துள்ளமையால் அதிகமான மக்கள் சமையலுக்கு இவற்றையே பயன்படுத்துகிறார்கள்.
அதனால் விறகு விற்பனையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விறகு காலைகளில் கொத்து விறகு பெருமளவில் தேங்கிக்கிடக்கின்றது. விறகு கொத்தி வாழ்ந்து வரும் தொழிலாளர் வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் அன்றாடச் சீவியத்துக்கே திண்டாடுகிறார்கள்.
இதே வேளை- விறகின் விலையைக் குறைக்க எவரும் முன்வராதமை குறித்து பாவனையாளர் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-115)

# சர்வதேச மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7
வடமாகாண சுகாதார அமைச்சு மகளிர் விவகாரப் பிரிவால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தின விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீர சிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
'நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள்' என்னும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச் சர் க.வி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந் தினர்களாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக சேவைகள், புனர்வாழ்வு நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகளும் மற்றும் மகளிர் விவகார வடமாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கமும், கௌரவவிருந்தினராக யாழ்ப்பாணத்தின் இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜனும் கலந்துகொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வில் இரண்டு பெண்ணிய செயற்பாட்டாளர்களின் உரைகளும், வடமாகாண சுகாதார அமைச்சால் பெண்கள் தொடர்பான சமூக விழிப்பு ணர்வு குறுந்திரைப்படம் தயாரித்தல் போட்டியில் வெற்றி பெற்ற குறுந்திரைப்படங்களுக்கு பரிசில் வழங்கலும் காட்சிப்படுத்தலும் இடம்பெறும்.
மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சினால் 3 குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன அவையும் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீரிமலை - நகுலேஸ்வரம்

## அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில்

# தேர்த்திருவிழாவும் மகா சிவராத்திரி உற்சவமும்

### அருளாசிச் செய்தி




யாழ்ப்பாணம், கீரிமலை, அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறு வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங் கேயி ணைந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இத்தலம் புனிதப் பிறவி எடுத்த மனித குலம் வணங்கவேண்டிய ஒன்றாகும்.

வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவருட் கடாட்ஷம் அனை வருக்கும் கிடைக்க வேண்டும் என்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கிறோம். இன்று நிகழும் இந்தத் தேர்த்திருவிழா சிறப்புற எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்

### சிறப்புற பிரார்த்திக்கின்றோம்



ஈழத்திருநாட்டின் வரலாற்றில் முதன் மை மிக்க தலமாக விளங்குவது கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோயில். இத் திருக்கோயிலின் மேன்மைக்கு இலக் கணமாக விளங்குவது கண்டகி தீர்த்தம். பாவ வினைகளைப் போக்கி மோட்சம் நல்கும் சிவசேக்ஷ்திரம் எனப் பல பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெறுவது சிறப்புக்குரிய விடயமாகும்.

இராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் தளராத முயற்சியால் ஆலயம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டு இன்று ஆலய உட்பிரகாரம் முழுவதும் புதிய கோயிலாகக் கட்டப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இறை நியதிப்படி யாவும் நடந்து முடிந்தது. எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து எனது வாழ்த்துரையைச் சமர்ப்பிக் கின்றேன்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

### சிவராத்திரியின் மகிமை

மாசித்திங்கள் தேய்பிறை 14 ஆம் நாள் சதுர்த்தசி தினத்தில் கொண்டாடப்படும் விரதம் சிவராத்திரி ஆகும்.

இது ஆணவவலியின் கொடுமையை விளக்குவதாகும். படைத்தல் கடவுள் பிரம்மா ஆணவம் கொண்டு நானே பெரியவன் என்றார் அதனால் ஆவணையில் துயிலும் திருமாலிடம் சென்று அவரை எழுப்பினார்.

இதனால் திருமாலும் ஆணவம் கொண்டு போர் செய்தனர். இதனால் தேவர்கள் யாவரும் கலங்கினர். தேவர்கள் சிவனிடம் முறையிட சிவன் சோதி வடிவாகத் தோன்றிய தினமே இது வாகும். இவ்வாறு சிவன் தோன்றிய தலம் அண்ணாமலை என்பர்.

**தேரேறி வருவாய் என் தெய்வமே**

சீர்மிகு கீரிமலைப்பதியில்
திருநடம் புரியும் எம் சிவனே
ஊர்புகழ் உந்தன் அருள் கண்டு
உலகே வியக்கும் நிலையினிலே
நேர்வளர் நற்சிவராத்திரி முன்
நெடுந்தேர் ஏறி வலம் வந்தே
கூர்மைசேர் அருள்நலம் காட்டியுமே
குவலயத் தென்றும் ஒளி தருவாய்

சு. குகதேவன் தெல்லிப்பளை.

- **07.03.2016** திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் சிவராத்திரி நான்கு சாமப் பூஜைகளும்

  அதிகாலை 4.30 மணிக்கு விசேட அபிஷேக அலங்கார பூஜைகள்
  அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
  காலை 9.00 மணிக்கு இரதோற்சவ ஆரோகணம்

  பிற்பகல் 3.00 மணிக்கு இரதவரோஹணம் (பச்சை சாத்தி இறக்குதல்)
  இரவு நான்கு சாம பூஜையும், தம்பபூஜை, நடைபெற்று விஷேடமாக,

  நள்ளிரவு 12.00 மணிக்கு இலிங்கோற்பவ பஞ்சமுகார்ச்சனை விஷேட பூஜை அதனைத் தொடர்ந்து சோமஸ்கந்தர் இடபாரூடராக கற்பூர ஜோதியுடன் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

- **08.03.2016** செவ்வாய்க்கிழமை உதயத்தில் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம்,

  பிற்பகல் 2.00 மணிக்கு எம் பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருளுதல், விஷேட பூஜையும் கொடியிறக்கமும் நிகழும்

- **09.03.2016** புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகி நடராஜப் பெருமானின் திருநடனக் காட்சியும் இடம் பெறும்.

### சிவாலய வரலாறு

கீரிமலை நகுலேஸ்வர சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி வரலாறு அற்புதமான வரலாற்றைக் கொண்டது. நம் ஈழத் தருத்தலங்களில் பஞ்ச ஈஸ்வரங்கள் எனப்படுவது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ் வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் என்பன. தெற்கு நகுலேஸ்வர சிவாலயம் சிதைவடைந்து இருந்த காலத்தில் அதனைப் புதுப்பித்து புனருத்தாரணம் நடைபெற வேண்டும் என 1876ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி சைவ மக்களில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தனது கையொப் பத்துடன் விஞ்ஞாபனம் செய்தார்.

நகுலேஸ்வரம் என்னும் கோயில் யாழ்ப்பாணத்தின் வட புலத்திலே புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கிறது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் மிக்கது. நகுலமுனி, நளன், ஸ்ரீ ராவணன் முதலிய பலராலும் பூசிக்கப்பட்ட தலம். இஷ்டசித்திகள் கொடுக்கும் தலம்.இது போர்த்துக்கேயர் காலத்தையது. இதன் பெருமை சூதசங்கிதையிலும், பஞ்சபுராணத்திலும் சுருக்கமாகவும், தட்சண கைலாய புராணத்திலே விரிவாகவும் கொண்டது என நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் உரை செய்த (நகுலேஸ்வர மாண்மியம்) என்னும் நூலுக்கு சுன்னாகம் அ.குமாரசாமி குருக்களின் அறிவுரையிலும் காணப்படுகின்றது. இத்தனை மகிமை வாய்ந்த நகுலேஸ்வரத் திருத்தலமானது வேத விற்பன்னர் கார்த்திகேய குருக்களினதும் அவரது புதல்வர்களாகிய ஸ்ரீமத் கா.சபாபதிக் குருக் களினதும் ஸ்ரீமத் கா.தியாகராஜக் குருக்களினதும் பெருமுயற்சியால் 1878ஆம் ஆண்டு மீண்டும் இச் சிவாலயம் கட்டப் பட்டது. நகுலேஸ்வர சிவாலயத்தைத் தமது தந்தையார் 1947இல் சிவபதமடைந்த பின்னர் 1948 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நகுலேஸ்வர ஆதீன மேலாளராக நகுலேஸ்வர அனுக்கிரகம் பெற்ற ராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் விளங்குகின்றார். இங்கு சிவராத்திரி உற்சவம் வருடப்பிறப்பு உற்சவம், தீர்த்தோற்சவம் மிகச் சிறப்பு வாய்ந்தது.சைவ உலகில் வாழும் அடியார்கள் தமது பிதிர் வழிபாட்டுக்கும் பாவவிமோசனத்துக்கும் உகந்ததாக உள்ளடங்கிய தீர்த்தத்தில் தீர்த்தம் ஆடுவதற்கு ஆடி அமாவாசையில் எண்ணி றைந்த பல்லாயிரவர் பங்கு கொண்டு நகுலேஸ்வர பெருமானை வழிபாடு செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்று நம் நாட்டில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களுக்கு சாந்தியும், சமாதானமும் ஏற்பட ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானை தரிசித்து வழிபடுவோமாக.

### குருக்களின் அருளாசியுரை





திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேருமிரு சிகரமாய் திகழுமீழத்
துரப்பெருமாமுகமெனும் யாழ்ப்பாணம் தன்னில் உத்தரத்திற் கீரிமலை
- உறைந்து நாளும்.
விருப்பமரு நகுலேஸ்வரரருளைக் கொண்டு மேவிய வங்கர் கோயில்
- விளங்கு வாய்ந்த
திருப்பணிகள் செய்பவரும் செய்விப்போரும் திரவியங்களீ பவரும் சிறந்து வாழீ

**"நமஸ்சம்பவேச மயோபவேச நமஸ்சங்காராயச நமஸ்சிவாயச"**

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங் களுக்குக் காரணமானவரும் கண்டகி தீர்த்தம், தலம், மூர்த்தியும் ஒருங்கே அமையப்பெற்றதும் புராணகாலச் சிறப்புப் பெற்றதுமான, பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றானது கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர் பெற்ற திவ்ய தலத்தில் நித்தியசான்னித்தியத்துடன் உறைந்திருக் கின்ற நகுலேஸ்வரப் பெருமானின் திருவருளாலும் இலங்கை நாட்டில் உள்ள சைவ அன்பர்கள், புலம் பெயர்ந்து வாழும் சைவ அன்பர்கள் அனைவரினதும் பேராதரவோடும் பெருமுயற்சியினாலும் இவ் ஆலயமானது அதி சிறந்த சிற்பாகம முறைப்படி புதிய மண்டபங்கள் அமைத்து வர்ண வேலைகளுடன் கலையம்சத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.எல்லா சைவ அன்பர்களின் பேருதவியோடு மிக விரைவில் இராஜகோபுரம் அமைய இறை திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.வடமொழி, தக்ஷிண கைலாசமான்மியம், மத்ஸிய புராணம், ராமாயணம், மகாபாரதம் மற்றும் பல தமிழ் நூல்களும் இத்தலத்தின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன.

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமானின் இவ்வாலயத்தில் இரவு பகல் தொண்டாற்றிய தொண்டர்களுக்கும், எமது நாட்டு மக்களுக்கும் புலம்பெயர் வாழ் மக்களுக்கும் அரசாங்கத் துறையினருக்கும்,உலகமக்களுக்கும் பேரருள் கிடைத்து பேரானந்த பெரு வாழ்வு வாழ எனது அருளாசியை வழங்குகின்றேன்.

இன்று நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரர் தேரேறி வந்து எல்லோருக்கும் இன்னருள் பாலிப்பாராக.

"சர்வே ஜனா சுகினோ பவந்து"

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

**குறிப்பு: பக்தர்கள் கண்டகி தீர்த்தத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தீர்த்தத்தை தங்கள் திருக்கரங்களால் சிவராத்திரி தினத்தன்று சகஸ்ரலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.**

ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்

**மஹோற்சவ குருக்கள்:**
**சிவஸ்ரீ நகுலேஸ்வர குமாரசுவாமிச் சிவாச்சாரியார் (நகுலேஸ்வரர் ஆதீனம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## யாழ். நகரில் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் அண்மையில் நடைபெற்ற சாரணர் ஜம்போறியால் தாமதப்படுத்தப்பட்டிருந்தன.

விரைவில் அனைத்துக் கட்டாக்காலிகளும் பிடிக்கப்பட்டு, ஏலத்தில் விற்கப்படவுள்ளது என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

யாழ் நகரப்பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால், பல்வேறு விபத்துக்களும்,போக்குவரத்து இடையூறுகளும் ஏற்பட்டு வருகின்றன.

நகரத்தில் மக்களுக்குப் பாரிய இடையூறாக மாறியுள்ள கட்டாகாலிகளை, இல்லாது செய்வது தொடர்பான திட்டம், அண்மையில் யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கைகளாக நகரில் கட்டாக் காலிகளாகத் திரியும் அனைத்து மாடுகளையும் கைப்பற்றி அடையாளப் படுத்துவதற்காக முற்றவெளி பகுதிக்கு அருகில் இடமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற ஜம்போறி சாரணர் மாநாட்டின் காரணத்தால் மாடுகளைப் பிடித்துக் கட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. அத்துடன் தற்போது திண்மக் கழிவகற்றல் தொடர்பான விவகாரம் தொடர்பிலேயே அதிகளவு கவனம் செலுத்தப்பட்டமையினால், கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை.

விரைவில் பொலிஸாருடன் இணைந்து குறித்த கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் செயன்முறைகள் மேற்கொள்ளப்படும். என்றார்.

முன்னதாக யாழ்.மாநகர சபையினர், நகரில் பிடிக்கப்பட்டு முற்றவெளியில் காட்சிப்படுத்தப்படும் மாடுகள் அனைத்தும் 7 நாள்களுக்குள் உரியவர்களால் உரிமை கோரப்படாத விடத்துப் பொது அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு மறுநாள் ஏலத்தில் விற்கப்படும்.

எனினும் பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு உரிமை கோருபவர்கள் மீது எதுவிதமான நீதிமன்றச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

மாறாக, மாடுகள் கைப்பற்றப்பட்ட தினம்முதல், மாநகர சபையால் பராமரிக்கப்பட்ட தினம் வரையில் ஏற்பட்ட செலவுகளுக்கான சந்தா அறவீட்டுடன் தண்டப்பணம் விதிக்கப்பட்டு உரியவர்களிடம் மாடுகள் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி5)

# இளம் விவசாயிகள் கழகங்கள் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பம்

அச்சுவேலி,மார்ச் 7

யாழ்ப்பாணத்தில் இளம் விவசாயிகள் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட விவசாயத் திணைக்களம் மற்றும் பிரிதேச விவசாயப் போதனாசிரியர்களின் கண்காணிப்பின் கீழ்க் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் அல்லது கிராம மட்டத்தில் இந்த இளம் விவசாயிகள் கழகங்கள் செயற்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை பத்துக்கு மேற்பட்ட இளம் விவசாயிகள் கழகங்கள் அங்குராார்ப்பணம் செய்யப்பட்டு பேராதனை தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

30 வருடங்களுக்கு முன்னர் இளைஞர் விவசாயக் கழகங்கள் செயற்பட்டன. அவற்றின் ஊடாக இளைஞர்கள் விவசாயத் துறையில் ஆர்வத்தோடு ஈடுபட்ட நிலையில், படித்த வாலிபர் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள், மகளிர் விவசாய குடியேற்றத் திட்டங்கள் தோற்றம் பெற்றதோடு இளைஞர் மட்டத்தில் "விவசாய மன்னர்"களும் உருவாக்கப்பட்டனர். படித்த இளைஞர், யுவதிகள் அரச வேலைவாய்ப்பை எதிர்பாராமல் விவசாயத்தில் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு சாதனை படைத்தனர்.

குறித்த இளைஞர் விவசாயக் கழகங்களுக்கு சமமான நிலையில் நல்லாட்சி அரசினால் இளம் விவசாயக்கழகங்கள் உருவாக்கப்படுகின்றன.

18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இளம் விவசாயிகள் கழகத்தில்உறுப்பினர்களாகஇணைந்து கொள்ளலாம். குறைந்தது 10 பேர் சேர்ந்து இளைஞர் கழகத்தை உருவாக்கலாம். 30 பேர் வரை ஒரு கழகத்தில் உறுப்புரிமை பெறலாம்.

"இளம் விவசாயிகள் கழகங்களை அமைக்க விரும்புபவர்கள் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் அல்லது தமது பகுதிவிவசாயப்போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு கழகங்களை அங்குராா்ப்பணம் செய்யலாம்" என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

இளைஞர்,யுவதிகளை நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய விவசாய முயற்சியில் ஈடுபடுத்தல். அதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையை ஒழித்தல். தொழில் நுட்பத்திறனுடன் கூடிய விவசாய முயற்சியில் ஈடு படுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.

விவசாயத்துக்கான உதவிகள் ஒத்துழைப்புக்களை வழங்கி இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமை கூட்டுறவு தலைமைத்துவம் ஒன்றுகூடும் பண்பு என்பவற்றை மேம்படுத்தல் என்ற நோக்கங்களை நிறைவுசெய்யும்வகையில் அவற்றின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இளம் விவசாயிகள் கழகத்துக்கான பொதுமைப்படுத்தப்பட்ட யாப்பும் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் செயற்படுவதற்கான வழிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன. (ற-ஜ-11)

# பலாலி ஆசிரியர் கலாசாலையை விரைவில் மீளத்திறக்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்வைத்த தீர்மானத்தை, இலங்கை ஆசிரியர் சங்கம் வரவேற்பதோடு, அதனை விரைவில் இயக்க முன்வர வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்டச்செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதில் பலாலி ஆசிரியர் கலாசாலை விடயம் பற்றிப் பேசப்பட்டது.

1947 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பலாலி ஆசிரிய கலாசாலையானது, 59 ஏக்கர் நிலப்பரப்பில் 13 துறைகளை உள்ளடக்கிய மிகப்பெரிய ஆசிரியர் கலாசாலையாக இருந்தது.

ஆனால் போர்ச் சூழ்நிலை காரணமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைக்கப்பட்டுபின்னர்திருநெல்வேலியில் ஒரேயொரு பாடநெறியுடன் மிகச்சிறிய நிலப்பரப்பிலேயே இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. பலாலி ஆசிரியர் கலாசாலை மீளவும் அதே நிலப்பரப்பில் மீளவும் திறக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இந்த நிலையில் இன்றைய நல்லாட்சி அரசானது படையினர்வசமுள்ளபலாலிஆசிரியர்கலாசாலையைமீளவும்வெகு விரைவில் இயக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ற-ஜ-4)

# வட வரணி முன்பள்ளி புதிய கட்டடம் திறப்பு

வரணி, மார்ச் 7

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வடவரணி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மிருசுவில் வடக்கு கிராம அலுவலரும், முன்பு இந்தப் பிரிவில் கிராம அலுவலராகக் கடமை புரிந்தவருமான அ.பிரதீபன் கலந்து கொண்டு வைபவரீதியாகப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடம் நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-122)

# பசுமாடு வெட்டியவர் இறைச்சியுடன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம்- ஐந்து சந்திப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பசுமாடு ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் -ஐந்து சந்திப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கொல்களம் அல்லாத இடத்தில் வெட்டியதுடன், பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நேற்றைய தினம் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம்- ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த 45 வயதை உடையவர் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து 41கிலோ இறைச்சியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட இறைச்சியுடன் சந்தேக நபரையும்நீதிவான்முன்முற்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஜ-4-101)

# வவுனியா, நீத்தியநகர் கிராமத்தில் யானைகளால் பெரும் அழிவுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா,மார்ச் 7

வவுனியா- செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நித்தியநகர் கிராமத்தில் விவசாய நிலங்களும், பயிர்களும் யானைகளின் தாக்குதல்கள் காரணமாக நாசமாவதுடன் குறித்த யானைகள் கிராம மக்களின் வீடுகளையும் தாக்கி அழித்து வருகின்றன என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். குறித்த கிராமத்துக்கு அரசு மின்சார வேலி அமைத்துத் தரவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் நித்தியநகர் கிராமத்தை விட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் உள்ளூரிலும், இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்திருந்தனர். பின்னர் 2000 ஆம் ஆண்டுக்குப் பின் மீண்டும் தமது ஊரில் மீள் குடியமர்ந்த அவர்கள் விவசாயத் தொழிலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததன் பின்னரே குறித்த கிராமத்துக்குள் யானைகள் புகுகின்றன என்றும் அவை பயிர்கள், தோட்டங்களை அழித்து நாசம் செய்வது மட்டுமல்லாமல், தங்களது குடிசைகளையும் இடித்து அழிக்கின்றன என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயம் முக்கியம் என ஜனாதிபதி தெரிவிக்கிறார். ஆனால் மற்றைய இடங்களுக்கு உதவி வழங்கப்படுவதைப் போல் விவசாயத்துக்கு எந்தவிதமான உதவிகளும் எங்களது கிராமத்துக்கு வழங்கப்படுவதில்லை.

யானைத் தாக்குதலுக்கு அரசோ அல்லது வேறு திணைக்களங்களோ எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்வதில்லை. பிற்பகல் நான்கு மணிக்கே யானைகள் கிராமத்துக்குள் வந்துவிடுகிறன. அப்படி வரும் யானைகள் எங்களைத் துரத்துகின்றன. வீட்டுக்களுக்குள் ஓடினால் வீட்டை உடைக்கின்றன. யானையால் விளைவிக்கப்படும் சேதங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் அரச அதிகாரிகள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். வாக்குறுதிகளை மாத்திரம் வழங்குவார்கள். பாதிக்கப்பட்ட எங்கள் கிராமத்துக்கு நட்ட ஈடு எதுவும் வழங்கப்படுவதில்லை.

நாங்கள் எங்களது கைக்குழந்தைகளுடன் கிராமத்தில் வசித்து வருகிறோம். யானைகளின் தாக்குதல் அதிகரித்திருக்கும் நிலையில் எங்களால் கிராமத்தில் வாழமுடியாத நிலைமையே உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எங்கள் கிராமத்துக்கு மின்சாரவேலி அமைத்து தந்தால் யானைகளின் வருகை குறைவடையும் என்றனர்.

இது தொடர்பாக வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:

யானைகள் கிராமத்துக்குள் வராது இருப்பதற்கான யானை வெடிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் குறித்த கிராமத்துக்கான நிரந்தர மின்சார வேலிகள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

அத்தோடு செட்டிகுளம் பிர தேச செயலகத்துக்குள்ளேயே வனவிலங்குத் திணைக்களம் ஒன்றை அமைத்து அந்தத் திணைக்களத்தின் மூலமும் குறித்த பிரச்சினை தொடர்பான சில நடவடிக்கைகள் இடம்பெற உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணப்படுத்தப்படாத நிலையில் 97 இந்திய வீட்டுத் திட்ட வீடுகள்

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 7
இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் இன்னமும் 97 வீடுகள் பூரணப்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்திய அரசின் நிதி உதவியுடன் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இந்திய வீட்டுத் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 150 வீடுகள் முன்னோடி வீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அந்த வீடுகள் யாவும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
அதன் பின்னர் 6 ஆயிரத்து 154 வீடுகள் மூன்று கட்டங்களாக யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்டன. அவற்றில் 5 ஆயிரத்து 851 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 303 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
97 வீடுகள் இன்னமும் பூரணப்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளன என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
இதனை விட திருத்தத்தில் 228 வீடுகள் உள்வாங்கப்பட்டிருந்தன. அதில் 84 வீடுகள் மாத்திரமே திருத்தி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 144 வீடுகளுக்கும் உரிய பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று மாவட்டச் செயலக புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# போதையில் இடையூறு 10 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ். நகரப்பகுதியில் பொது இடத்தில் வைத்து மதுபானம் அருந்தியதுடன் மதுபோதையில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 10 பேர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்கள் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதையடுத்து அவர்கள் ஒவ்வொருவரையும் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பதில் நீதிவான் க.அரிய நாயகம் உத்தரவிட்டார். (ற-ஜ-103)

# அறநெறிப் பாடசாலைகளுக்கு உடுவிலில் ஒன்றியம் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கி வரும் அறநெறிப் பாடசாலைகளுக்கு ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை உடுவில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதில் அறநெறிப்பாடசாலைப்பொறுப்பாசிரியர்கள், அறநெறிப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
அறநெறிப்பாடசாலை ஒன்றியத்தின் இந்த வருடத்துக்கான உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
அதன் தலைவராக பரமேஸ்வரன், செயலாளராக செல்வி வேதிகா, பொருளாளராக பரமநாதன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ரமேஸ், திருமதி கணேசபிள்ளை, செல்வி தாரணி, செல்வி சசிகலா, திருஞானசம்பந்தர், அகிலன், செல்வி வேணு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இதேவேளை நாட்டிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலைகளில் சேவையடிப்படையில் எந்த வித வேதனமுமின்றி சேவையாற்றி வரும் ஆசிரியர்களுக்கு, இந்த வருடம் முதல் ஊக்குவிப்புத் தொகையாக 4 ஆயிரத்து 400 ரூபா வழங்கப்பட உள்ளது என்று இந்து சமய கலாசாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.
கடந்த காலங்களில் அறநெறிப்பாடசாலை களில் போதித்து வந்த ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபா வருடத்துக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்போது இந்தத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.
அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் சமய அறிவை விருத்தி செய்யும்பொருட்டு அவர்களது புத்தகக் கொடுப்பனவுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று உடுவில் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ற-ஜ)

# பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழில் நாளை இருண்ட நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 7
சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து நாளை செவ்வாய்க்கிழமை இருண்ட நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ். பரமேஸ்வராச் சந்தியில் (பல்கலைக்கழகச் சந்தி) காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை கறுப்பு உடைகளை அணிந்து யாழ்ப்பாண மாவட்டப் பெண்களும் ஆண்களும் இணைந்து அமைதியான மக்கள் எழுச்சி ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று பெண்கள் செயற்பாட்டுக்கான வலையமைப்பு தெரிவித்துள்ளது.
அந்த அமைப்பு இது பற்றித் தெரிவித்துள்ளதாவது-
யாழ்ப்பாணத்தில் கடந்த 2011 இலிருந்து 2015 வரை 5 வருடங்களுக்குள் 17 பாலியல் வன்முறைகளும், பாலியல் வன்முறையுடனான கொலைகளும் நடைபெற்றுள்ளன.
மேலும் வடமாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் தொடர்ந்து பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறையும் கொலையும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது.
இத்தகைய நிலை தொடராமல் இருக்கவும், பெண்களை இழிவுபடுத்துகின்ற, மற்றும் அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாதொழிக்க பெண்களுக்கான தினமாகிய மார்ச் 8 ஆம் திகதியையும், இந்த மாதம் முழுவதையும் நாம் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இருண்ட நாள்களாக பிரகடனப்படுத்துகின்றோம்
"நாம் ஒருபோதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எமது சமூகத்தில் நிகழ அனுமதிக்க மாட்டோம்", "பெண்களுக்கு எதிரான வன்முறையாளர்களாக நாங்கள் இருக்க மாட்டோம்", "பெண்களுக்கு எதிரான வன்முறையாளராக எமது ஆண்கள் மாற அனுமதிக்க மாட்டோம்";, ''பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நீதி கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம்" என்பதைக் காட்ட எமது வீடுகளிலும், கடைகளிலும் அலுவலகங்களிலும் மார்ச் 8 ஆம் திகதியில் கறுப்புக் கொடிகளை ஏற்ற வேண்டும்.
அன்றைய தினம் கறுப்பு உடைகள், கறுப்புப் பட்டிகளை அணிந்து பெண்களுக்கு நடைபெறும் அநீதிகளை எதிர்த்து, இனிவரும் நாள்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்.
மற்றும் நாளை நடைபெறும் கவனவீர்ப்புப் பேரணியில் சகலரும் இணைந்து கொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தப் பாடுபடுவோம் - என்றும் தெரிவித்துள்ளது. (ற-ஜ-ரி)

# சின்மயா மிசனில் மகா சிவராத்திரி

யாழ்ப்பாணம்,மார்ச் 7
யாழ். சின்மயா மிசன், சின்மயாஞானவேல் ஆச்சிரமத்தில் மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை இரவு நான்கு சாமப் பூசைகளுடன் வழிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவின் சத்சங்கம் மற்றும் வேறு பல நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ற-ஜ-ரி)

# சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7
நாலுகால்மடம் ஞானவைரவர் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.
நான்கு காலப் பூசைகளுடன் ஞானவைரவப் பெருமான் கிராமவீதி உலா வரும் நிகழ்வும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி)

# நீண்ட காலம் திருத்தப்படாதுள்ள அளவெட்டி தெற்கு மதவடி வீதி

## நிதி இல்லாததால் திருத்தவில்லை என்கிறார் வலி. வடக்கு பிரதேச சபைச் செயலாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 7
அளவெட்டி தெற்கு ஜே.219 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மதவடி வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் குறித்த பிரதேச மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேச சபைச் செயலாளரிடம் கேட்டபோது அதற்கு அதிகளவு நிதி வேண்டும். தற்போது எம்மிடம் போதுமான நிதி இல்லை என்றும் பதில் வழங்கினார்.
அளவெட்டி தெற்கு ஜே.219 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மதவடி வீதி நீண்டகாலமாகப் புனரமைப்பு பணிகள் செய்யப்படாமல் உள்ளது.
எனவே வீதியைப் பயன்படுத்தும் மக்கள் குண்டும் குழியுமாக உள்ள வீதியில் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்யும் நிலை காணப்படுகின்றது.
இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தபோது-
வீதிவழியாக மாரிகாலங்களில் பெருவெள்ளம் பாய்ந்தோடுவதால் வருடாவருடம் மண் அரிப்பு ஏற்படுவதுடன், போக்குவரத்தும் கடினமாகவுள்ளது.
குறித்த வீதி விடயம் தொடர்பில் பிரதேச சபையினர், இதற்குச் சீமெந்தினாலான கொங்கிறீட் வீதியமைக்க வேண்டும் எனவும், இதற்கு நிதி இல்லை எனவும் தெரிவித்தனர்.
எனினும் இதே காலப்பகுதியில் வேறு பல வீதிகள் திருத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த வீதி அளவெட்டி, வல்லை பிரதான வீதியுடன் இணைவதுடன், பிரதான வீதியிலிருந்து 6 அடிக்கு மேல் தாழ்ந்துள்ள வீதியாக உள்ளதால் இந்த வீதி இணையும் பிரதான சந்திக்கு 6 அடி ஏற வேண்டும்.
இந்த இடம் பள்ளமும் கற்களும் நிறைந்ததாக உள்ளதால் பாடசாலை மாணவர்கள் முதியவர்கள் மிகவும் சிரமப்படும் நிலைகள் காணப்படுகின்றன.
எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.- என்றனர்.
இது தொடர்பில் பிரதேச சபைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது
மக்கள் கூறினால் நீங்கள் பிரசுரியுங்கள். ஏன் எம்மிடம் கேட்கின்றீர்கள்?. இதற்கெல்லாம் அதிகளவு நிதி வேண்டும். எம்மிடம் போதுமான நிதி இல்லை. எப்போது புனரமைக்கப்படும் என்று கூறமுடியாது. - என்று கூறி தொடர்பை துண்டித்தார். (ற-ஜ-ரி5,36)

# நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி, மார்ச் 7
சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அதில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவராக க.தர்சன், உபதலைவராக சி.சயந்தராணி, செயலாளராக ச.கோகுலதர்சன், உதவிச்செயலாளராக துதுஷிதரன், பொருளாளராக செ.லத்தீபன், கணக்காய்வாளராக கு.தீபன் ஆகியோரும், ஆறுபேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் வைத்தியசாலையை தரமுயர்த்த ரூ.1,200 மில். தேவை

## வட மாகாண சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 7

மாங்குளம் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்து அதனை வட மாகாணத்தின் முதன்மை வைத்தியசாலையாக மாற்றுவதற்கான திட்டம் தயார் நிலையில் உள்ளது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.- இவ்வாறு வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி யூட் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாங்குளம் பிரதேசமே வட மாகாணத்தின் மையப் பகுதியாக விளங்குகின்றது.

இந்தப் பிரதேசத்திலும், அதனைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் வசிக்கும் சுமார் இரண்டாயிரம் குடும்பங்களினதும் சகல வைத்திய தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரேயொரு ஆதார வைத்தியசாலையாக மாங் குளம் வைத்தியசாலை காணப்படுகின்றது.

இந்த வைத்தியசாலை 1942 ஆம் ஆண்டு ஓர் மருந்து வழங்கும் நிலையமாக ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் படிப்படியாக தரம் உயர்ந்தது. போரின் பின்னர் மக்களுடைய சுகாதார, வைத்திய தேவைகள் கருதி ஆதார வைத்தியசாலையாக மாற்றப்பட்டது.

ஆனால், வைத்தியசாலையில் இன்று வரையில் போதிய அடிப்படை வசதிகள் எவையும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் மையப் பகுதியான மாங்குளம் பிரதேசத்தில் ஒரேயொரு ஆதார வைத்திய சாலையே உள்ளது. அந்த வைத்தியசாலை அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் இயங்கி வருகின்றது என்று பிரதேசவாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி யூட்டிடம் கேட்டபோது- அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மாங்குளம் வைத்திய சாலையில் மின் பிறப்பாக்கி உட்பட்ட சில அடிப்படைக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் உடன் கவனம் செலுத்தப்படும். மாங்குளம் வைத்தியசாலையை பெரிய அளவில் அபிவிருத்திசெய்து அதனை வடக்கு மாகாணத்தின் முதன்மை வைத்தியசாலையாக மாற்றுவதற்கான திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, அது தயார் நிலையில் உள்ளது.

> “சுமார் இரண்டாயிரம் குடும்பங்களது சகல வைத்திய தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரேயொரு ஆதார வைத்தியசாலையாக மாங்குளம் வைத்தியசாலை காணப்படுகின்றது. ஆயினும் இந்த வைத்திய அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் இயங்கி வருகின்றது என்று பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.”

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

ஆய்வுகூடம், சத்திர சிகிச்சைக் கூடம், பிண அறை மட்டுமன்றி, மாற்று வலுவுள்ளோர் பராமரிப்பு, விபத்து சிகிச்சைப் பிரிவு போன்ற பல வசதிகள் உள்ளடங்கியதாக குறித்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் வட மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக பலரின் கவனத்துக்கும்கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதன் பயனாக திட்டத்தின் பிரதியை தற்போது பிரதமர் செயலகம் கோரியுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் முன் வைத்து அதற்குரிய நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றுஎதிர்பார்ப்பு இருக்கின்றது. அவ்வாறு நிதிஉதவிகிடைத்தால் அதனூடாக வைத்தியசாலை தரம் உயர்த்த முடியும்- என்றும் அவர் மேலும்தெரிவித்தார். (ற-ஜ-5-21-10)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க விசேட செயலணி

## வவுனியாவில் உருவாக்கம்

வவுனியா,மார்ச் 7

அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த வவுனியாவில் விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று வடக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வடமாகாண சிறுவர் பாதுகாப்பு, நன்னடத்தை அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தச் செயலணி உருவாக்கப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்தமைக்குரிய காரணங்கள், அதனைத் தடுக்க மேற்கொள்ளக் கூடிய பொறிமுறைகள் மற்றும் துஷ்பிரயோகத்துக் குள்ளானவர்களின் மறுவாழ்வு போன்ற பல விடயங்கள் குறித்து துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகள், கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கி மாவட்ட மட்ட செயலணி அமைக்கப்பட்டது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுக்கள் தங்களுடைய கடமைகளை சரிவர செய்ய வேண்டும் என்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரால் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.பி.நடராஜா, மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், துறைசார் திணைக்களங்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

# இந்திய வியாபாரி கைது

இந்திய புடைவை வியாபாரியால் தனது வியாபார நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்து மல்லாகத்திலுள்ள புடைவைக்கடை வியாபாரி ஒருவர், வீடுகளுக்குச் சென்று புடைவை வியாபாரத்தில் ஈடு பட்ட இந்திய புடைவை வியாபாரிக்கு எதிராக முறையிட்டுள்ளார். அத னால் குறித்த இந்திய வியாபாரி கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழைப் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

மல்லாகம் பகுதியில் கடந்த புதன்கிழமை கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் வாடகைச் சைக்கிள் ஒன்றைப் பெற்று வீடுகளுக்குச் சென்று குறைந்த விலையில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்துள்ளார். அந்த முறைப்பாட்டின் காரணமாக இந்திய வியாபாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ற-ஜ-4,10?)

# தமிழரின் பாவனையற்ற காணிகளில் சிங்கள மக்களுக்கு வீடமைக்க திட்டம்

## கொக்குத்தொடுவாயில் முன்னெடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது



முல்லைத்தீவு, மார்ச் 7

கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் மக்கள் பாவனையற்றிருந்த காணியில் சிங்களக் குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் அமைக்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் நில அளவைத் திணைக்களம் மற்றும் வீட்டுத் திட்ட அதிகாரிகள் இணைந்து அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருந்தனர். எனினும் பொதுமக்களின் தலையீட்டால் அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவில் வசிக்கும் 25 சிங்கள குடும்பங்களின் வதிவிடத்துக்கு காணி இல்லாததால் கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் மக்கள் பாவனையற்றிருந்த காணியில் அவர்களுக்கான வீட்டுத்திட்டம் அமைக்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் நில அளவைத் திணைக்களம் மற்றும் வீட்டுத்திட்ட அதிகாரிகள் இணைந்து அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த காணிகளுக்கு சொந்தமான மக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று நிலைமையை அவதானித்ததோடு நிலஅளவையிட வந்தவர்களை திருப்பி அனுப்பியிருந்தனர்.

முல்லைத்தீவில் பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்களின் உறுதிக் காணிகளை அபகரித்து, சிங்கள மக்களுக்கு வீட்டுத் திட்டம் அமைப்பதற்கு வழங்குவதை ஏற்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் வாழ்ந்த குறித்த 25 குடும்பங்களுக்கும் வீட்டு வசதியை வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை. அதற்காக ஆண்டாண்டு காலமாக பரம்பரையாக பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று போரின் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக உள்ளவர்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வீட்டுத் திட்டம் அமைப்பதை ஏற்க முடியாது.

இதனையே நாம் குறித்த அளவீட்டுப் பணிக்காக வந்த உத்தியோகத்தர்களுக்குத் தெளிவாக கூறி அந்தப் பணியைத் தடுத்தோம். அவ்வாறு காணி அற்றவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்குவதானால் அரச காணிகளில் வழங்கலாம் அதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கு உடனடியாக கொண்டு சென்றுள்ளோம். எனவே, அரச அதிபர் நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றோம். அவ்வாறு தீர்வு கிட்டாத சந்தர்ப்பத்தில் எமது கட்சியின் தலைவர் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டால் இனங்களுக்கு இடையில் விரிசல் ஏற்படும்

## சட்ட நிபுணரான கோமின் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7
இலங்கை போன்ற சிறிய நாட்டில் சமஷ்டி ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டால் இனங்களுக்கு இடையில் விரிசல் ஏற்படும். அது தீவிரமடைந்து நாடு பிளவுபடும். இவ்வாறு ஜாதிகஹெல உறுமயவின் முன்னாள் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரும், அரசமைப்பு மற்றும் குற்றவியல் தொடர்பான சட்ட நிபுணருமான கோமின் தயாசிறி ஞாயிறு சிங்கள வாரஇதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித் துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-


> இலங்கை சிறிய நாடு. இங்கு சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டால் இனங்களுக்கிடையிலான விரிசல் மேலும் தீவிரமடைந்து நாடு பிளவுபட்டுவிடும்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் போது அந்த நாட்டுக்கு சமஷ்டி முறை அரசமைப்பு ஒன்றை அறிமுகம் செய்து விட்டே சுதந்திரம் வழங்கியிருந்தனர். ஏனெனில் இந்தியா பல்வேறு மொழிகள் பேசப்படும் பெரும் நிலப் பரப்பைக் கொண்ட நாடாகும். அந்த நாட்டுக்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது.
ஆனால் இலங்கை சிறிய நாடு. இங்கு சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டால் இனங்களுக்கிடையிலான விரிசல் மேலும் தீவிரமடைந்து நாடு பிளவுபட்டுவிடும்.
விடுதலைப் புலிகளுடனான போரின் பின்னர் ஏற்பட்டுள்ள அமைதிச்சூழ்நிலை வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கே பெரிதும் பயன்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் விருப்பத்துக்குரிய கட்சிக்கு வாக்களித்து தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்.
அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வருவதில்பொதுமக்கள்எதுவிதஎதிர்பார்ப்பையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. ஆனால் ஒருசில அரசியல் தலைவர்கள் தங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சமஷ்டி ஆட்சியைவலியுறுத்திக்கொண்டிருக்கின்றனர்.
ஆனால்அரசமைப்பின்பிரகாரம்சமஷ்டிமுறையிலான அதிகாரப் பகிர்வு ஒருபோதும் சாத்தியமற்றது என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# வடக்கில் இருந்து விரட்டப்பட்ட சிங்களவர் பற்றி பேசுவதில்லை

## அல்லே குணவன்ச தேரர் சீறுகின்றார்

கொழும்பு, மார்ச் 7
வடக்கிலிருந்து போர்க்காலத்தில் விரட்டியடிக்கப்பட்ட 25 ஆயிரம் சிங்களவர்கள் பற்றி எவருமே பேசுவதில்லை. மாறாக சமஷ்டி குறித்துப் பேசி, நாட்டை மீண்டும் பிளவடையச் செய்யவே முயற்சிக்கின்றனர் என்று தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் அல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், வட மாகாண சபையின் முதலமைச்சரும் சமஷ்டி ஆட்சி முறைமையைக் கோருகின்றனர். பிரிவினைவாத நோக்கங்களை அடையும் நோக்கிலேயே சமஷ்டி முறைமையைக்கோரி வருகின்றனர்.
நாட்டைப்பிளவடையச் செய்யும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறான முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மக்கள் ஆதரவற்ற சிலர், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள இவ்வாறு கருத்து வெளியிட்டு வருகின்றனர்.
வடக்கு - கிழக்கு மக்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்குத்தனியான பிரச்சினைகள் இருக்கும் என்று நான் கருதவில்லை. போர்க் காலத்தில் விரட்டியடிக்கப்பட்ட 25 ஆயிரம் சிங்களவர்கள் பற்றி இவர்கள் எவரும் பேசுவதில்லை.
சமாதானம்,நல்லிணக்கம் பற்றிப் பேசும் அரசின் தலைவர்கள் வடக்குத் தலைவர்களின் சமஷ்டி முறைமை குறித்த நிலைப்பாட்டுக்கு நேரடியான பதிலை வழங்க வேண்டும். என்றார். (ற-ஐ-5)



வட்டவளை-றொசல்ல கிளிஸ்டன் தோட்டத்தில் ஸ்ரீ ஞான கணேசர் ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார். நிகழ்வின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க, திலும் அமுனுகம மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (ற-ஐ)



# இடதுசாரி அணிகளின் தோளில் தொங்குகின்றார் மகிந்த ராஜபக்ச

## வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 7
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் இடதுசாரி அணிகளின் தோளில் தொங்கி கொண்டிருக்கின்றார் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான நாடாளுமன்றஉறுப்பினர்வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.
மகிந்த ராஜபக்சவுடன் நிகழ்வு ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார பங்கேற்றிருந்தார். இதன் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.
மகிந்த ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகத்தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் இருந்தே, தான் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளதாக வாசுதேவ கூறியுள்ளார்.
நாங்கள் ராஜபக்சவின் தோளில் தொங்கவில்லை. மகிந்த ராஜபக்சதான்,எங்கள் தோள்மீது தொங்கிக் கொண்டு இருக்கின்றார். உண்மையும் அதுதான். இல்லாவிட்டால் மகிந்த ராஜபக்ச என்பவர் இருந்திருக்க மாட்டார். மகிந்தவுக்கு முன்னரே நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தோம் என்று வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

# அமைச்சர்களின் தயவில் மீள பாதாளக்குழுக்கள்

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 7
கூட்டு எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப்பாதாள உலகக் குழுக்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.கட்டுகம்பொல பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை அடக்குவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. நாடு முழுவதும் பாதாள உலகக்குழுக்கள் பரவி வருகின்றன. தேர்தல் நடைபெற்ற காலத்திலும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பாதாள உலகக்கூட்டத்தினரின் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அமைச்சர்களின் தயவில் மீண்டும் பாதாள உலகத்தினர் தலைதூக்கி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

# ரோல்ஸ் சாப்பிட்ட சிறுவன் சாவு

கொழும்பு, மார்ச் 7
ரோல்ஸ் சாப்பிட்ட சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சம்பவம் வெலிகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.
கடந்த புதன் கிழமை தாய், தந்தை உட்பட மூன்று பிள்ளைகள் தாம் உட்கொண்ட ரோல்ஸ் நஞ்சானதால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவ்வாறான நிலையிலேயே குறித்த சிறுவன் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளான் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
மாத்தறை மாவட்டம் - வெலிகம, பண்டாரவத்தை பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் இந்தச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கடந்த புதன்கிழமை அவர்கள் ரோல்ஸ் சாப்பிட்டதன் பின்னர் வயிற்றோட்டம், மயக்கம் போன்றன ஏற்பட்டுள்ளன. இவர்களை வெலிகம வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் 10 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் அவர்கள் குடி தண்ணீராகப் பயன்படுத்தும் கிணற்று நீர் நஞ்சாகியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-5)

# இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 7
2015 ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதாரத்தரப்படுத்தலின் பிரகாரம் இலங்கையின் பொருளாதார நிலை வீழ்ச்சியை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
போர் முடிவுற்றதன் பின்னர் மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஏறுமுகத்தில் இருந்தது. வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் நாணயக்கையிருப்பு, கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் என்பன வருடாந்தம் அதிகரித்துக் கொண்டு வந்தன. இதன் காரணமாக ஆசியாவில் வளர்ச்சியடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலையில் இருந்தது.
ஆட்சி மாற்றத்தின் பின்னர், நல்லாட்சி அரசின் பதவிக் காலத்தில் கடந்து போன வருடம் குறித்த பொருளாதாரத்தரப்படுத்தலில் இலங்கை கடுமையான சரிவைச் சந்தித்துள்ளது.
வெளிநாட்டுச்சொத்துக்கள் மற்றும்நாணயக்கையிருப்பும்குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன.
அத்துடன் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஆற்றலையும் இலங்கை படிப்படியாக இழந்து கொண்டுள்ளது என்று,குறித்த தரப்படுத்தல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாகஇலங்கை வெளிநாட்டுக்கடன்களைப்பெறுவதிலும் சிக்கல்கள் ஏற்படலாம். அதன் மூலமாக பெரிய பொருளாதார நெருக்கடியொன்றை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகள் விடுதலை சாத்தியம்?

வரும் ஏப்ரலில் தமிழ் நாட்டில் மாநில சட்ட சபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக சிறையில் இருந்துவரும் தமிழ்க் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கான முயற்சியில் முதல்வர் ஜெயலலிதாவின் அ.இ.தி.மு.கழக அரசு இறங்கியிருப்பது அரசியல் மட்டத்தில் அங்கு பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தேர்தல் நடைபெறவிருக்கும் தருணம் பார்த்து இந்த விடயத்தை ஜெயலலிதா முன்னெடுத்திருப்பதானது தேர்தலில் சுயலாபம் கருதிய செயல் என்று தி.மு. கவினரும் ஏனையவர்களும் உடனடியாக கருத்து வெளியிட்டிருந்தபோதிலும், அதனை எதிர்த்து அதாவது சிறையில் உள்ள கைதிகளின் விடுதலைக்கு எதிராக மூச்சுவிட முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

ராஜீவ்காந்தி கொர்லைவழக்கில் தண்டனைபெற்று சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் விடயம், தமிழ் நாட்டில் மக்கள் உணர்வுடன் பிணைந்து போயுள்ள விடயமாக இருப்பதால், இந்த நிலைமை. பொதுவில் இந்தமாதிரி விடயங்கள் தேர்தல் பரப்புரையில் பயன்படுத்தப்படுவது தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்படுவதில்லை. அவ்வாறு பயன்படுத்தும் கட்சியின் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவும் கூடும்.

ஆனால், தேர்தல் காலம் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே ஜெயலலிதா கைதிகளை விடுவிப்பது தொடர்பாக மத்திய அரசுக்கு கடிதம் எழுதி தீர்மானம் எடுக்கும்படி கேட்டிருப்பது ஜெயலலிதாவின் அரசியல் தந்திரத்தை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது என்று கூறலாம். இந்த விடயம் குறித்து தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ் தலைவர்களும்கூட ஆரம்பத்தில் ஆத்திரம் கொண்டாலும், இப்போது ஆசுவாசமடைந்து நீதிமன்றம் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று கூறும் அளவுக்கு இறங்கி வந்துள்ளார்கள்.

கைதிகளின் விடுதலை தொடர்பாக தமிழக அரசின் கடிதம் குறித்து ஆராய்வதாக மத்திய அரசும் பதில் எழுதியிருக்கிறது.

சிறையில் இருந்துவரும் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி முதலிய ஏழுபேர் அனேகமாக விரைவில் விடுதலையாகும் சாத்தியம் இருப்பதாக தமிழ்நாடு செய்திகள் கூறுகின்றன. இந்தக் கைதிகளின் நடத்தை தொடர்பாக வேலூர் சிறை நிர்வாகம் நல்லவிதமாகச் சான்றிதழ்கள் வழங்கியிருப்பதும் சுட்டிக்காட்டப் படுகின்றது. இவர்களைத் தவிர்ந்த ஏனையவர்களும் விடுவிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவர்களில் சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட மூவர் உட்பட அனைவரும் 25 வருடங்களுக்கு மேல் சிறையில் வாடி இருக்கிறார்கள் என்பதை அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்கள் என்றும் நம்பப்படுகின்றது.

கைதிகளின் விடுதலை விடயம் மத்திய பாரதீய ஜனதா அரசுக்கு அதிக பிரச்சினையாக இருக்காது. ஆனால் தமிழ் நாடு காங்கிரஸுக்கும் அதனோடு இணைந்துள்ள கட்சிகளுக்கும் தேர்தலில் பாதகமாகவே அமையும் என்ற கருத்து நிலவுகின்றது.

இப்போது கைதிகள் எப்படியோ விடுதலையாகும் சூழ்நிலையொன்று ஏற்பட்டுள்ள நிலையில் சரியாகவோ, தவறாகவோ முதல்வர் ஜெயலலிதா கைதிகளின் விடுதலை விடயத்தை கிளப்பியிருப்பது அவரது கட்சியின் நிலையை மக்கள் மத்தியில் உயர்த்திக் காட்டுவதாகவே இருக்கும்.

கைதிகள் விடுதலையாவதும் விடுதலையாகாமல் போவதும் அவருக்குப் பிரச்சினையல்ல. தேர்தல் காலத்தில் அதனைச் சரியாகவே இலக்கு வைத்து காய் நகர்த்தியிருக்கிறார் என்பது மட்டும் தெளிவு. எவ்வாறேனும் இந்திய சிறையில் வாடும் இலங்கைத் தமிழ்க் கைதிகள் விடுதலையாவார்களானால், எம் மக்களுக்கு அது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவே இருக்கும்.

## சிறப்பு நீதிமன்ற விவகாரத்தால்

# மங்கள–மைத்திரி முரண்பாடு

கஜிவசி

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் போர்க் குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றத்தை நியமிக்கும்போது வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்குவது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு விரிசலாக வளர்ந்துள்ளது.

சிறப்பு நீதிமன்றத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணை யாளர்களை உள்ளடக்க வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டில் அரசுத் தலைவரும், அது அவ ரது தனிப்பட்ட கருத்து வெளிநாட்டு நீதிபதிகளும் விசாரணையாளர்களும் நிச்சயம் உள்ளடக்கப்படுவார்கள் என்பதே அரசின் நிலைப்பாடு என்பதில் வெளியுறவுத்துறை அமைச்சரும் உறுதியாக இருப்பதால் இருவருக்கும் இடையில் விரிசல் பெருத்துள்ளது.

பெப்ரவரி 25ஆம் திகதி அமெரிக்கத் தலைநகர் வோசிங்ரனில், அந்த நாட்டின் முக்கிய கொள்கை வகுப்பாளர்களிடையே உரையாற்றிய வெளியுறவுத்துறை அமைச்சர், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், அரசுத்தலைவர் தெரிவிப்பது அவரது சொந்த – தனிப்பட்ட – கருத்து என்று பதிலிறுத்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின்படி போர்க் குற்ற விசாரணை நடவடிக்கைகள் சர்வதேச பங்களிப்புக் குத்திறந்தே இருக்கும் என்று அவர் தெளிவாகத் தெரிவித்தார்.

### மங்களவின் நிலைப்பாடு

கணக்கில்லாத சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட இலங்கையின் நவீன வரலாற்றை அவதானிக் கின்ற ஒருவர், எங்களை எது பின்னோக்கி இழுத்துப் பிடித்தது, முரண்பாட்டுப் பாதையிலேயே எது எங்களை மீண்டும் மீண்டும் சுற்றவிட்டது, இந்த மாதிரி மோசமான நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதிலிருந்து எது எங்களைத் தடுத்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அது, மோசமான எங்கள் அரசியல் பண்புதான். கடந்த காலங்களில் அதுவேதான் பின்பற்றப்பட்டது. ஒரு தரப்பு, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்படும்போதெல்லாம் மறுதரப்பு அதற்கு எதிராகச் செயற்படும். எதிர்பாரதவிதமாக, விடுதலைப் புலிகளின் வெளியேற்றலுடன், இன்று, பிரச்சினைகளுக்கு வன்முறை ஒரு தீர்வு என்று நாட்டில் எவருமே நம்பவில்லை. அமைதிக்கான விருப்பமும் மீண்டும் ஒரு போர் ஏற்படாமல் இருப்பதற்கான விரும்பமும் மிகத் தெளிவானவை. நாட்டு மக்கள் தமது வாழ்வின் ஒவ்வொரு

> சிறப்பு நீதிமன்றத்தை நியமிக்கும் போது வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களையும் உள்ளடக்குவது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவுக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு விரிசலாக வளர்ந்துள்ளது.


அடியிலும் இந்த அமைதி நீடித்திருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். பணக்காரர்களில் இருந்து ஏழை வரை, வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் மத்தியில் வாழும் எவரும் அதனையே விரும்புகின்றனர். எல்லோருமே அளவுக்கதிகமாகத் துன்பப்பட்டுவிட்டார்கள். இப்படித் தனது உரையில் தெரிவித்திருந்தார் அமைச்சர் மங்கள சமரவீர. அதனால் தற்போதைய தேசிய ஒருமைப்பாட்டு அரசு, பழைய காலம் மீண்டும் இல்லை என்ற கொள்கையுடன் செயற்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தைத் தவறவிட அரசு ஒருபோதும் விரும்பவில்லை என்றும் அவர் அழுத்தமாகச் சொன்னார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தின் அடிப்படையிலான விசாரணைகளின் போது சர்வதேச பங்களிப்புக்கு இலங்கை திறந்தே இருக்கிறது– என்றார். சர்வதேச நீதிபதிகள், தடயவியல் வல்லுநர்கள் மற்றும் தேவையான தொழில்சார் தகைமையுடையவர்களை ஏற்றுக் கொள்வதில் தயக்கமில்லை என்றார். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சில வகையில் உறுதிப்பாட்டை வழங்குவதற்கு அது அவசியம் என்றும் கூறினார்.

இன்னும் ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குள் உருவாக்கப்படவுள்ள சிறப்பு நீதிமன்றம் நம்பகத்தன்மை உள்ளதாக இருப்பதுடன் மட்டுமல்லாது பாதிக்கப்பட்டவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றதாகவும் இருக்க வேண்டும் என்பதற்கான எல்லா வழிவகைகளையும் அரசு ஆராய்கிறது என்றும் தெரிவித்தார்.

ஆனால், அரச தலைவர் சிறிசேன, சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பை அடியோடு நிராகரித்திருக்கிறாரே என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. பதிலளித்த அவர்,

அரச தலைவர் தெரிவித்தது அவரது சொந்த – தனிப்பட்ட – கருத்து. இந்த விவகாரம் எப்படிக் கையாளப்படவேண்டும் என்பது தொடர்பாக இலங்கையில் பல்வேறு அபிப்பிராயங்கள், கருத்துக்கள் உள்ளன. நேர்மையாகச் சொன்னால், நாங்கள்கூட சர்வதேச பங்களிப்பை ஏற்றுக்கொள்கிறோம். நாடாளுமன்றத்தில் உள்ள சில தேசியவாதக் கட்சிகள்கூட இதற்கு உடன்பட்டிருக்கின்றன. நம்பகத்தன்மையுடன் இந்த விசாரணை நடக்க வேண்டும் என்றால், சிறப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.நா. மனித உரிமைகள் சபையில், குறிப்பாக கடந்த செப்ரெம்பரில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில், எங்களுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை. மனித உரிமைகள் மீறல் தொடர்பில் மட்டும்தான் அவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறார்கள்.



பட வேண்டும் என்பது நாடு முழுவதும் பரவலாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. முன்னைய அரசினால் கடந்த 10 ஆண்டுகளில் அரசியல்மயப்படுத்தப்பட்டமையால் நீதித்துறை தனது நம்பகத்தன்மையை இழந்திருப்பது இதற்குக் காரணம். புதிய நீதிமன்றம் நேர்மையான முறையில் – வெளிப்படையாக – நீதியையும் பொறுப்புக்கூறலையும் வழங்கும் என்ற உறுதிப்பாடு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையாக இருக்கிறது. அதனால் சர்வதேசப் பங்களிப்பைப் பற்றிக் கவனத்தில் எடுத்துக் கொள்வதற்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம்–என்றார் வெளியுறவுத் துறை அமைச்சர்.

அவரது கருத்து உலக ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பரவலாகப் பெற்றது. வெளியுறவுத்துறை அமைச்சர் அரசுத் தலைவருடன் முரண்படுகிறார் என்று அவை கூறின. இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்பதற்கு அரசுத் தலைவர் மாளிகை முடிவு செய்தது.

**அரசுத் தலைவரின் நிலைப்பாடு**

கடந்த ஜனவரி மாதத்தில் பிபிசியின் சந்தேசிய சிங்கள மொழிச் சேவைக்கு வழங்கிய செவ்வியில், வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்கள் போர்க்குற்ற விசாரணைகளின்போது தேவையில்லை என்று அரசுத் தலைவர் தெரிவித்திருந்தார். வெளிநாட்டு வல்லுநர்களை அழைக்க வேண்டிய தேவை நாட்டுக்கு இல்லை என்பது அவரது வாதமாக இருந்தது.

இந்த விவகாரத்தில் சர்வதேச பங்களிப்பை நான் ஒரு போதும் ஏற்கப் போவதில்லை. எமது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வல்லுநர்கள், சிறப்புப் புலமையாளர்கள், அறிவாளிகள் எமது நாட்டிலேயே போதியளவில் இருக் கிறார்கள். இந்த விசாரணை கட்டாயம் உள்நாட்டிலானதாகவும் உள்ளூர் முறைகளிலானதாகவும் உள்நாட்டுச் சட்டங்களை மீறாததாகவும் இருக்கவேண்டும். இந்த விடயத்தில் நாட்டின் நீதிப்பொறிமுறையையும் அதன் அதிகாரிகளையும் நம்புகிறேன். இலங்கை அரசு அக்கறைப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் கவலைகொள்ளத் தேவையில்லை. இத்தகைய விடயங்கள் உடனடியாகவோ அவசர அவசரமாகவோ மேற்கொள்ளப் படக்கூடியதல்ல. நாங்கள் எமது இலக்கு நோக்கி சில அடைவுகளை எட்டியிருக்கிறோம்; இது நீதிமன்றம் அமைப்பது) ஒரு படிப்படியான செயல்முறை.

இப்படி சந்தேசியவுக்குத் தெரிவித்திருந்தார் அரசுத் தலைவர். 2015ஆம் ஆண்டு வெளியான ஐ.நா. அறிக்கை இராணுவத்தைக் குற்றஞ்சாட்டினாலும் குற்றங்களுக்கு எவர் பொறுப்பானவர்கள் என்ற பெயர் விவரங்களை அது வெளியிடவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். அத்தகைய குற்றங்கள் நிகழ்ந்தனதானா என்பதை முடிவு செய்யவேண்டியது மிக முக்கியம் என்று அவர் தெரிவித்திருந்தார். இராணுவத்தினர் அப்படிக் குற்றஞ் சாட்டப்படுவார்களாக இருந்தால் எமது கவனம் எல்லாம் அவர்களை அதிலி ருந்து விடு விப்பதில்தான் இருக்கும். எவராவது குற்றமிழைத்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதேநேரம் நடந்தவற்றுக்காக மொத்த இராணுவத்தையும் குற்றவாளியாக்குவது தவறு என்றார் மைத்திரிபால சிறிசேன.

**விரிவாகும் விரிசல்**

இந்த நிலையில், அரசுத் தலைவரின் இந்தக் கருத்து அவரது சொந்தக் கருத்து என்று வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்திருந்தமை பாரதூரமானது என்று அரசுத் தலைவரின் ஆலோசகர்கள் அவருக்குச் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கேள்வி எழுப்பப்படவேண்டும் என்றும் அவர்கள் தூண்டினர். அதனடிப்படையில் வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் விளக்கம் கேட்டுக் கடிதம் எழுதப்பட்டது. ஆனால் அது அவரால் ஏற்றுக்கொள்ளப் பட்டதா என்பது பற்றித் தகவல் இல்லை. அப்படி அவர் அதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் விரைவில் அரசுத் தலைவர் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி மற் றொரு அறிக்கையை வெளியிடுவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இவையெல்லாம், அரசுத் தலைவருக்கும் வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் இடையில் உறவுகள் நன்றாக இல்லை என்பதை வெளிச்சமிடுகின்றன. இதன் விளைவு அண்மையில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒஸ்ரியா மற்றும் ஜேர்மனிக்கு அரசுத் தலைவர் மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணத்தின்போது அதைக் காணமுடிந்தது. மைத்திரிபால சிறிசேன ஜேர்மன் அரசுத் தலைவரைச் சந்திப்பதற்கு முன்பாக, அந்த நாட்டு வெளிறவுத்துறை அமைச்சருடன் தான் நடத்திய பேச்சில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் மங்கள அரசுத் தலைவர் மைத்திரிக்கு எடுத்துக் கூறவில்லை. இது வழமையாக நடைபெற்றிருக்க வேண்டியதொன்று.

அங்கு நடந்த மற்றொரு சம்பவமும் இருவருக்கும் இடையிலான இடைவெளியைத் துல்லியமாக வெளிப்படுத்தின. அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தங்கியிருந்த நட்சத்திர விடுதிக்கு வந்திருந்த இரு நபர்களைக் கண்டு அரசுத் தலைவரின் பரிவாரங்கள் கடும் ஆச்சரியப்பட்டுப் போயின. அவர்கள் ஏன் அங்கு வந்திருக்கிறார்கள் என்று குழப்பமடைந்தன. தங்களுக்குத் தெரியாமல் அரசுத் தலைவர்தான் அவர்களை அழைத்திருப்பாரோ என்ற எண்ணமே குழப்பத்துக்குக் காரணம். அவர்கள் வேறு எவருமல்லர், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.ஜே.இமானுவேல் அடிகளாரும் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனுமேயாவார்கள். அரச தலைவரும் அவர்களை அழைக்கவில்லை என்பதை அவரது பரிவாரங்கள் ஒருவாறு அறிந்து கொண்டன. அதன் பின்னர்தான், அந்த இருவரும் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் அழைப்பின் பேரிலேயே விடுதிக்கு வந்திருந்தனர் என்று அரசுத் தலைவரின் பரிவாரங்கள் தெரிந்து கொண்டன.

இவற்றின் பின்னணியில் வெளியுறவுத் துறை அமைச்சில் ஒரு உள்துறை அமைச்சரை சுதந்திரக் கட்சியிலிருந்து உடனடியாக நியமிக்குமாறு அரசுத் தலைவருக்கு கனதியான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.

*(மூலம்: சிலோன் ருடே பத்திரிகையின் சிலோன் பொலிரிக்ஸ் பத்தி*

## வீதியில் நிழல்களின் கீழ் வாழும் மக்களுக்கு விடிவுகாலம் எப்போது?

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில்லாலை வடக்கு ஜே/148, ஜே/149 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பகுதியில் வன்னியிலிருந்து மீள்குடியமர்ந்துள்ள 33 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் மன்னாரில் தொடங்கி மாத்தளன் வரைக்கும் இரண்டு தடியுடனும் ஒரு தறப்பாலுடனும் 30க்கு மேற்பட்ட இடங்களில் தற்காலிகமாகக் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

2009 மே மாதத்துக்குப் பின்னர் வவுனியா, மன்னார் காடுகளை அழித்து அமைக்கப்பட்ட கொட்டகை தறப்பால் கூடாரத்தில் கொட்டும் வெயிலின் கொடுமையால் மரநிழல்களைத் தேடி சிலகாலம் வாழ்ந்தனர். ஊருக்குப் போய் நிரந்தரமான வீட்டில் நிம்மதியாக வாழலாம் என நினைத்தனர். இங்கே வந்தது 05.11.2009. ஓரிரு மாதங்கள் கழித்து 12 தகரக் கூரைத் தகடும் வழங்கப்பட்டது.

இன்றுவரை 7 வருடங்கள் ஆகியும் இவர்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பல்முறை பிரதேச செயலகம் சென்று முறையிட்டோம். வீட்டுத்திட்டம் வந்தால் முன்னுரிமை அடிப்படையில் தருவதாக உறுதியளித்த போதிலும் ஆமை வேகத்திலே எமது வீட்டுத்திட்ட நடைமுறை காலம் கடந்து போய்க்கொண்டிருக்கின்றது. மழை காலத்தில் குளிரினாலும் கோடை காலத்தில் வெயிலின் கொடுமையாலும், தகரத்தின் வெப்பத்தாலும் மூட்டு வருத்தத்தாலும், மூளைக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டு சிறுவர் முதல் பெரியவர் வரை அடிக்கடி மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்று வருவதைக் காணக்கூடியவாறு உள்ளது.

போர் வடுக்களின் வலிகளைச் சுமந்த, கணவனை இழந்த (பிரிந்த) பெண்களும் விசேட தேவையுடைய சிறுவர்களும்கூட ஏனையோருடன் சேர்ந்து இந்த வெக்கையைத் தாங்க முடியாமல் பகல் நேரங்களில் மரத்தடி நிழலே கதியென்று கிடக்கவேண்டியிருக்கிறது. முதியவர்கள், சிறுவர்கள் படும் அவலமும் சொல்லுந்தரமன்று. இந்தப் பிரதேச மக்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு இவர்களுக்கான இயல்பான நிலையை உருவாக்குவதற்கு வீட்டுத் திட்டத்தை வழங்க உரிய அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

வ.இ.செல்வகுமார், பண்டத்தரிப்பு

## புண்ணிய காலங்களில் வேறுபாடு

22.02.2016இல் உதயன் பத்திரிகையில் வெளிவந்த 'மன்மத வருடத்து மஹோதயமும் மாசி மகமும்' என்ற கட்டுரையில் ஆசிரியர் சிந்திக்கத்தக்க ஆன்மிக விடயங்களை எழுதியிருந்தார் வாழ்த்துக்கள். அத்துடன் அஷ்டகிரககூடம் 1962இல் நிகழ்ந்ததாக எமக்கு ஞாபகப்படுத்தியதற்கும் நன்றி. மேலும் இந்த மஹோதயம் 1962, 1992, 2016 ஆகிய வருடங்களில் நிகழ்ந்துள்ளதாக எழுதி இருந்தார். வாக்கிய பஞ்சாங்கத்தின் அடிப்படையில் 6.2.1989இலும் மஹோர்தயம் நிகழ்ந்துள்ளமை கவனிக்கத்தக்கது. எனினும் 5.2.1992 இல் நிகழ்ந்த மஹோதயத்திலும் பார்க்க 1989இல் நிகழ்ந்த இந்த விசேடம் அன்று, அமாவாசைத் திதி பகல் 1.07 மணி வரையும் திருவோணம் பகல் 12.22 மணி வரையும், வியதீபாத யோகம் பகல் 11.40 மணிவரையும் வியாபித்துள்ளமை இந்தப் புண்ணிய காலத்துக்கு சிறப்பாகும். ஆனால் 03.02.1992இல் நிகழ்ந்த மஹோதயத்தின்போது அன்று இரவு 9.50 மணி வரையும், திருவோண நட்சத்திரம் இரவு 12.30 வரையும் இருக்கும்போது வியதீபாத யோகம் மட்டும் (உதயவியாபகம் இன்றி) காலை 9.30 மணிக்கு மேலேயே கூடுகின்றது. இதனால் இந்தத் தினம் கோதயம் எனும் சிறப்பை இழந்து விடுகிறது. பஞ்சாங்க நிர்ணயம் சூரியோதய காலத்தில் அமாவாசை முற்பகுதியும் திருவோண நட்சத்திரம் நடுப்பாகமும் வியதீபாத யோகத்தின் பிற்பகுதியும் அமைவதே மஹோதயம் என்பதாகும்) இதன்படி 1989இல் நிகழ்ந்த மஹோதயம் சிறப்பைப் பெறுகிறது. மேலும் 1989 இல் நிகழ்ந்த பின் 3 வருடம் கழித்து மீண்டும் 1992 இல் நிகழ்வது என்பது சற்றுச் சிந்திக்க வைக்கின்றது. எனினும் நிகழ்ந்து முடிந்த இந்தப் புண்ணிய காலங்களின் கால வேறுபாடுகள் பற்றி எவரையும் (பஞ்சாங்கம்/கட்டுரையாளர்) குறை எண்ணும் நோக்கமின்றி மக்களின் சந்தேக நிவர்த்தியாகவே குறிப்பிட்டுள்ளேன்.

சிவஸ்ரீ கி.சதாசிவசர்மா, மட்டுவில்

## தொலைபேசியும் மின்சாரமும்

நேரடியாகச் சென்று சில விடயங்களைச் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில், தொலைபேசியினூடாக அந்த விடயங்களைச் செய்கின்றோம். மின்வெட்டு உள்ள நேரங்களில் மின்சார சபையின் தொலைபேசி இலக்கங்களாகிய 021-2024444, 021-2222609 வேலை செய்வதில்லை. அவர்களது தொலைபேசி மின்சாரமில்லாது விட்டால் இயங்காதா? இதற்கான காரணத்தை மின்சார சபையினர் அறியத் தருவார்களா?

இ.இராஜேந்திரா ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கொழும்பில் சோதனைச் சாவடிகள்

## தொடர் துப்பாக்கிச் சூட்டுக்கு முற்று வைக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 7

தொடர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் பெரும் பீதிக்குள்ளாகியுள்ள தலைநகர் கொழும்பில், நேற்று முதல் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு நகரில் மாத்திரம் 110 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐந்து நாள்களில் ஆறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தென்பகுதியில் பதிவாகியுள்ளன. அதில் இருவர் உயிரிழந்ததுடன் நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகினர். பாதாள உலக கோஷ்டியினர் மீளத் தலையெடுத்திருப்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

> "கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் 102 மொபைல் வீதித் தடைகள் ஏற்படுத்தி ஆள்கள் மற்றும் வாகனங்களைச் சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை விட, 10 தொலைபேசி பிரிவுகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

அதற்கமைய, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் 102 மொபைல் வீதித் தடைகள் ஏற்படுத்தி ஆள்கள் மற்றும் வாகனங்களைச் சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, 10 தொலைபேசி பிரிவுகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக 8 அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் இவை செயற்படுத்தப்படுகின்றன.

ஏதாவது சம்பவங்கள் இடம்பெற்றால், குறித்த தொலைபேசி பிரிவைக் கண்காணிக்கும் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு அந்த இடத்துக்குப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை அழைப்பதற்கு முடியும். இதன் ஊடாக தலைநகரில் பாதாள உலகக் கோஷ்டியின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-5)

## மகிந்தவின் கோட்டைக்குள் நடந்த விழாவில் மைத்திரி

கொழும்பு, மார்ச் 7

நாரஹேன்பிட்ட அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற சமயப் பாடசாலையின் 78 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் பின்னர், மகிந்த ராஜபக்ச அபயராம விகாரையிலிருந்தே தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார். மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினரும் இங்கிருந்தே அரசுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை – ஊடக சந்திப்புக்களை நடத்தி வந்திருந்தனர்.

அபயராம விகாரையை அரசியல் நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரசியல் நடவடிக்கைக்கு விகாரையைப் பயன்படுத்தக் கூடாது என்று நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது. இதன் பின்னர், மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் அபயராம விகாரைக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டனர்.

இந்த நிலையில் சமயப் பாடசாலையின் 78 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைக்கப்பட்டிருந்தார். அதேபோன்று மகிந்த ராஜபக்சவும் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால், மகிந்த ராஜபக்ச நேற்றைய நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

பரகும்பா அரசனின் பின்னர் நாட்டை ஒன்றுபடுத்திய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வெலமிடியாவே குசலதம்ம தேரர் கூறியுள்ளார்.

பாதாளக் கோஷ்டியினரை இந்த நாட்டில் இல்லாதொழிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவாவே தேரர் இந்த நிகழ்வின் போது வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-ஐ-5)

## எட்காவை எதிர்க்கும் மகிந்த தரப்பு இந்தியத் தூதுவர் சின்ஹா ஏமாற்றம்

கொழும்பு, மார்ச் 7

இந்தியா – இலங்கை இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு (எட்கா) மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி எதிர்ப்பு வெளியிடுவது குறித்து இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா ஆச்சரியமும் ஏமாற்றமும் வெளியிட்டுள்ளார்.

எட்கா உடன்பாட்டுக்கு, எதிர்ப்புகள் வலுத்து வரும் நிலையில், இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இந்தியத் தூதுவர் உரையாற்றியபோது எவரையும் பெயர் சுட்டி உரையாற்றவில்லை. ஆனாலும், அவர் மறைமுகமாக – சூட்சுமமாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை சாடும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

பேராசிரியர் ஒருவர் என்று குறிப்பிட்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர், ஜி.எல்.பீரிசையும், இந்தியத் தூதுவர் கடுமையாக விமர்சித்தார்.

அவர் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது, இந்த உடன்பாட்டுக்கு இணக்கம் தெரிவித்தார் என்றும் தற்போது அவர் அதனை எதிர்க்கின்றார் என்றும் வை.கே.சின்ஹா சுட்டிக்காட்டியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், முன்னர் இதற்கு ஆதரவு தெரிவித்ததாகவும், தற்போது அதனை எதிர்ப்பதாகவும் சின்ஹா குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

## பொருத்தமற்ற துறைகளில் 88 ஆயிரத்து 609 பட்டதாரிகள்

கொழும்பு, மார்ச் 7

கடந்த ஆட்சிக் காலத்தில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளில் 88 ஆயிரத்து 609 பேர், அவர்களுக்குப் பொருத்தமற்ற துறைகளில் பணியாற்றி வருகின்றனர். அதனால் அவர்கள் மூலம் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய சேவை உரிய முறையில் கிடைக்காமல் போகின்றது என்று தொழில்புரியும் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த அரசின் காலத்தில் பட்டதாரிகள் அரச சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர். 2012 ஆம் நாடளாவிய ரீதியில் ஒரேதடவையில் 50 ஆயிரம் பேர் வரையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாறு இணைக்கப்பட்டவர்கள் அதற்கு முன்னர் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் என 88 ஆயிரத்து 609 பேர், அவர்களுக்குப் பொருத்தமற்ற அரச துறையில் இருக்கின்றனர். இவர்கள் இவ்வாறு இருப்பதன் காரணமாக, அவர்களிடமிருந்து உரிய சேவை நாட்டுக்கு கிடைக்க வில்லை. இந்தப் பட்டதாரிகளை அரசு பொருத்தமான துறையில் இணைக்க நடவடிக்கை எடுக்காவிடின், இவர்களிடமிருந்து நாட்டுக்கு வினைத்திறன் மிக்க சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போய்விடும் எனவும் தொழில்புரியும் பட்டதாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்பொழுதுவரை இலங்கையில் அரச சேவை ஊழியர்கள் மாத்திரம் 13 லட்சத்து 2 ஆயிரத்து 258 பேர் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-5)

## மீண்டும் மைத்திரிபால சுகாதார அமைச்சர்

கொழும்பு, மார்ச் 7

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் நேரடிக் கண்காணிப்புக்குள் சுகாதார அமைச்சு கொண்டுவரப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வரும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, நாடு திரும்பு வரையில் ஜனாதிபதியே இந்த அமைச்சை மேற்பார்வை செய்யவுள்ளார்.

மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் சுகாதார அமைச்சராகவே, மைத்திரிபால சிறிசேனா செயற்பட்டிருந்தார். (ற-ஐ-5)

## இரண்டு தடவைகள் பதவியேற்ற பொன்சேகா

கொழும்பு, மார்ச் 7

பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இரண்டுதடவைகள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரத் பொன்சேகா கடந்த மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி முன்னிலையில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்றிருந்தார். சுப நேரத்தில் அவரது பதவியேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதலில் மத்திய, வடமத்திய, ஊவா மாகாண அபிவிருத்தி அமைச்சராக அவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், மூன்று மாகாணங்களுக்கான அமைச்சரவை பொறுப்புள்ள, அமைச்சராக பொன்சேகா நியமிக்கப்பட்டால், ஏனைய மாகாணங்களுக்கும் தனியான அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதையடுத்து, சிக்கலை உணர்ந்த ஜனாதிபதியும், பிரதமரும், சரத் பொன்சேகாவுக்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பதவியை வழங்க முடிவு செய்தனர். இதையடுத்து, அவர் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

சரத் பொன்சேகா இரண்டாவது தடவையாக பதவிப் பிரமாணம் செய்த போது, சுபநேரம் கடந்து விட்டதாகவும், ராகு காலத்திலேயே அவர் பதவியேற்றார் என்று கொழும்பு ஆங்கில இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ற-ஐ-5)

## சொத்து விவரம் சமர்ப்பிக்காத வேட்பாளருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மார்ச் 7

கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தனிப்பட்ட சொத்து விவரங்களை ஒப்படைக்காதவர்களுக்கு எதிராக இந்த மாத இறுதியின் பின்னர் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தீர்மானித்துள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


இந்த மாத இறுதிக்குள் வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும்பட்சத்தில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை– மக்கள் பிரதிநிதிகளாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தங்களது தனிப்பட்ட சொத்து விவரங்களை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஒப்படைக்காவிடின், அவர்களது பிரஜாவுரிமையை நீக்குவதற்கான யோசனையொன்று தேர்தல்கள் ஆணைக் குழுவால் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தற்பொழுது காணப்படும் சட்டத்துக்கு ஏற்ப, சொத்து விவரங்களை ஒப்படைக்கத் தவறும் உறுப்பினர்களுக்கு வழங்க முடியுமான உயர்ந்த பட்ச தண்டனை 100 ரூபா அபராதம் மட்டுமேயாகும். இதனை மாற்றியே இந்தப் புதிய யோசனை முன்வைக்கப்படவுள்ளது. இந்த யோசனை கட்சி செயலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட தன் பின்னர், அவர்கள் அதற்கு உடன்பட்டால், அந்த யோசனையைச் சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நைஜீரியாவில் லகோஸ்– லகூனில் வசிக்கும் மக்கோகோ மீன்பிடி சமுதாயத்தினர் தண்ணீருக்கு மேல் பாடசாலை ஒன்றை அமைத்துள்ளனர். குறித்த சமூகத்தினர் தமக்கான கிராமம் ஒன்றை பல நூறு வருடங்களுக்கு முன்னர் உருவாக்கியுள்ளனர். இவர்களின் வதிவிடங்கள் தண்ணீரின் மேல் மரவீடுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சமூகத்தினரின் கல்வியைக் கருத்திற் கொண்டு இந்தப் பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது. நகரமயமாதலும், மோசமான காலநிலையும் மக்கோகோ மீன்பிடி சமூகத்தினரை தனிமைப்படுத்தியுள்ளது. மரவீடுகளில் வசிக்கும் சிறுவர்கள், படகுகளில் பாடசாலைக்கு செல்கின்றனர். இந்தப் பாடசாலை குறித்த சமூகத்தினருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நைஜீரிய வடிவமைப்பாளர் ஒருவரினால் இங்கு நிலவும் காலநிலையைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. புயல் , வெள்ளப்பெருக்கு, 4 மாதங்கள் பெய்யும் தொடர் மழைக்கு தாக்கு பிடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

# ஐ.எஸ்ஸுக்கு சீருடைகள் ஸ்பெயினில் பறிமுதல்

மட்ரித், மார்ச் 7



ஸ்பெயினில் போராளிகளின் 20 ஆயிரம் சீருடைகள், ஐ.எஸ். அல்நூஸ்ரா அமைப்புகளுக்கு வழங்கத் தயாராகியுள்ள நிலையில் அவற்றை ஸ்பெயின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இந்தத் தகவலை ஸ்பெயினின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

வர்த்தக முகவர்கள் மூலம் போராளிகளுக்கு சீருடைகள் கடத்தப்படத் தாயாராக இருந்தன. இவை ஐ.எஸ் ஸுக்கும், ஐ.எஸ் இன் இணை அமைப்பான அல்–நஸ்ராவுக்கும் கடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளை, பொலிஸாரின் அதிரடிச் சோதனையில் கைப்பற்றப்பட்டன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை கப்பலில் ஏற்றப்படுவதற்காக பழைய உடுப்புக்கள் எனும் போர்வையில் கன்ரைனர்களில் அடைக்கப்பட்டிருந்தன. சீருடைகள் வேறு உடைகளுடன் பொதி செய்யபட்டிருந்தது.

இந்தக் கடத்தலில் தொடர்புடையதாகக் கருதப்படும் 7 நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மேலும், ஐ.எஸ். அமைப்புக்கு நிதி ரீதியாகவும், வேறு ஆதரவுகளையும் வழங்குவதாக சந்தேகிக்கப்படும் குழுக்களும் கைது செய்யப்பட்டனர். (ஐ-ரி4)

## நயகரா நீர் வீழ்ச்சி மூடப்படவுள்ளது

வொஷிங்டன், மார்ச் 7

அமெரிக்க எல்லையில் அமைந்துள்ள நயகரா நீர் வீழ்ச்சி திருத்தவேலை காரணமாக சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்படவுள்ளது என வொஷிங்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

115 ஆண்டுகள் பழைமையான இந்தப் பாலம் துருப்பிடித்துள்ளது. இந்தப் பாலம் 1900 - 1901 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடிவமைக்கப்பட்டதாகும். அதன் பின்னர், 1969 , 1980, 2004, மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் திருத்த வேலைகள் இடம்பெற்றன.

தற்போது நீர்நிலை வற்றியிருப்பதால் திருத்தவேலைகளுக்கு உகந்த காலமாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்தனர். திருத்த வேலைகளுக்காக பல மில்லியன் டொலர் செலவு திட்டமிடப்பட்டுள்ளது.

மூடப்படும் கால அளவு குறித்து தெரிவிக்கப்படவில்லை. 3 - 7 வருடங்களாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் இருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நீர்வீழ்ச்சி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



# வெளிநாடுகளிடம் கடனுதவி முயற்சியில் சவூதி அரேபியா

ரியாத், மார்ச் 7

சவூதி அரேபியா 10 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாட்டில் இருந்து கடனுதவியாக பெற இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 10 வருட காலத்தில் இவ்வாறான பெரிய தொகை கடன் வழங்கப்பட்டதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சவூதி அரசு உலக வங்கிகளுடன் கடன் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பில் தொகை தொடர்பான அளவு குறிப்பிடப்படவில்லை. ஆனால், சவூதி வட்டாரத் தகவலின் படி 10 பில்லியனோ அல்லது அதற்கு அதிகமான தொகையோ கடனாக எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதியின் நிதி அமைச்சு தெரிவிக்கையில், இந்தத் தொகை உடனடியாக திருப்பிச் செலுத்த முடியாது என்பதை அதிர்ச்சியான கடன் வேண்டுகோளாக முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

எண்ணெய் விலைச் சரிவில் இருந்து மீள்வதற்கும், பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் இந்த கடன் தொகை தேவைப்படுவதாக நிதி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு சவூதியில் வரவு–செலவுத் திட்டத்தில் 100 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடி நிலையைச் சரி செய்ய அன்றாட பாவனைப் பெற்றோலின் விலையை ஏற்கனவே 40 சென்றுகளால் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் சவூதி அரசு, நாட்டு மக்கள் கொள்வனவு செய்யும் பொருள்களில் விலை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், வரியிலும், புகைத்தல் பொருள்கள், குளிர் பானங்கள் என்பவற்றில் வரி ஏய்ப்பு செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2014 ஆம் ஆண்டில் மத்தியில் இருந்த எண்ணெய் விலை சரிய ஆரம்பித்தது. இதனால் எண்ணெய் வளநாடுகள் பலவும் கடனுக்குள் தள்ளப்பட்டன. அவற்றில் சில நாடுகள் தமது வளத்துக்கிணங்க உச்சக் கடன் தொகைகளைப் பெற்றுள்ளனர். கட்டார் 5 பில்லியன் அமெரிக்க டொலரும், ஓமான் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரும் கடன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# செவ்வாய்க் கிரகத்துக்கு 2021 இல் சீன விண்கலம்

பெய்ஜிங், மார்ச் 7

2021 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு சீனா விண்கலம் அனுப்பவிருக்கிறது.


சீனா தற்போது அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. ரயில்வேத் துறையில் வியத்தகு சாதனை படைத்துள்ளது. அதிவேக புல்லட் ரயில்களை இயக்குவதில் ஜப்பான் போன்ற நாடுகளை விஞ்சி நிற்கிறது.

அதே வேளையில் விண்வெளித் துறையிலும் அடியெடுத்து வைத்து அங்கும் முன்னேறி வருகிறது. அண்மையில் சந்திரனுக்கு ஆளில்லா விண்கலத்தை அனுப்பி ஆய்வு மேற்கொண்டது.

இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகள் செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலத்தை அனுப்பி ஆய்வு மேற்கொண்டுள்ளன. அதே போன்று சீனாவும் அங்கு விண்கலம் அனுப்பும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்தத் தகவலை சீன விண்வெளி ஆய்வு மைய தலைமை அதிகாரி யே பெய் ஜியான் தெரிவித்தார். எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்ப முடிவு செய்துள்ளோம். சீன கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட 100 ஆவது ஆண்டான 2021 இல் அந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கும் என்றார். (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 'நெருப்பு நீர்வீழ்ச்சி' என அழைக்கப்படும் நீர்வீழ்ச்சி உள்ளது. யோசிமீட் பூங்காவில் வருடத்துக்கு ஒரு முறை, 2 வாரங்களுக்கு 'ஹோர்ஸரயில்' என அழைக்கப்படும் நீர்வீழ்ச்சி நெருப்பு வீழ்ச்சி போன்று காட்சியளிக்கும். இதற்குக் காரணம் இதன் அமைவிடமாகும். பெப்ரவரி மாதத்தின் 2 வாரங்களுக்கு சூரிய அஸ்தமனத்தின் போது கதிர் வீச்சில் ஒளித்தெறிப்பு காரணமாக இந்த விநோதம் இடம்பெறுகிறது. இந்த நீர் வீழ்ச்சி 2 ஆயிரம் அடி உயரமாகும். இதனை பல சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் பார்த்து வருகின்றனர். (ஐ-ரி4)

# சிறுவர்களை வேட்டையாடும் கும்பல்

மலாவி,மார்ச் 7
ஆபிரிக்க நாடான மலாவியில் அல்பினோ சிறுவர்களை சட்டவிரோதக் கும்பல் வேட்டையாடி வருவது உலக அளவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
மலாவியில் அல்பினோ சிறுவர்களை கடத்துவதும், கொலை செய்வதும் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் மட்டும் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 34 பேர் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.
கடந்த 2 மாதங்களாக அல்பினோ நபர்கள் இருவரைப் படுகொலை செய்துள்ளனர், மேலும் 5 நபர்களைக் கடத்தியும் சென்றுள்ளனர்.
அண்மையில் துண்டிக்கப்பட்ட நிலையில் 9 வயதுச் சிறுவனின் தலை மட்டும் கண்டெடுக்கப்பட்ட நிலையில் துரித நடவடிக்கை எடுக்கக் கோரி சர்வதேச மன்னிப்பு சபை மலாவி அரசை கேட்டுள்ளது.
9 வயதுச் சிறுவனின் துண்டிக்கப்பட்ட தலையை மீட்டதை அடுத்து,53 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் கைகள் இரண்டும் துண்டிக்கப்பட்ட உடலையும் மீட்டுள்ளனர்.
இந்த வழக்குகளில் எதிலும் இதுவரை குற்றவாளிகளைப் பொலிஸாரால் கைது செய்யவோ இனம்காணவோ முடியவில்லை.
அல்பினீசத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு பாதுகாப்பு தர வேண்டும் என சர்வதேச மன்னிப்பு சபையின் ஆபிரிக்க இயக்குநர் கேட்டுள்ளார்.
இதனிடையே, சக மனிதர்களை வேட்டையாடும் அந்தக் கும்பலைக் கண்டதும் சுடுமாறு மலாவியின் உயர் பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.
அல்பினீசத்துடன் பிறந்தவர்களின் உடல் உறுப்புகளுக்கு விசேட சக்தி இருப்பதாகவும் நம்பப்படுகிறது.
குறிப்பாக, அல்பினோ மக்களின் உடல் உறுப்புகளை சில பிரத்தியேக சடங்குகளில் பயன்படுத்தினால் செழிப்பை வழங்கும் என பாரம்பரிய மருத்துவத்தை கடைப்பிடித்து வருபவர்கள் நம்புகின்றனர்.
தான்ஸானியா பகுதியில் தான் அல்பினோ மக்களின் உடல் உறுப்புகளுக்கு அதிக விலை தரப்படுவதாகக் கூறப்படுகிறது.
தான்ஸானியாவில் அல்பினோ உடல் உறுப்புகளுக்கு 50,000 பவுண்டு வரை விலை பேசப்படுவதாகவும் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.



அல்பினீசம் என்பது தோலில் இருக்கும் நிறமி பகுதி முற்றிலும் அல்லது பகுதியளவு இல்லாமற்போகும் ஒரு மரபியல் நிலையாகும். (ஐ-ரி4)

# சாதனைப் பதிவில் கோழி முட்டை



பெர்லின்,மார்ச் 7
ஜேர்மனியில் கோழி ஒன்று விதிவிலக்காக அளவில் பெரிய முட்டையை இட்டுள்ளது. உலகில் கோழிகள் இட்ட பெரிய முட்டை வரிசையில் இதுவும் ஒன்று. கோழி வளப்பவர்களான குந்தர் மற்றும் இங்கிரிட் மேயின் ஆகியோர் இந்த முட்டையை கண்டெடுத்துள்ளனர்.
6.5 அவுன்ஸ் நிறையில், சாதாரண முட்டையை விட 3 மடங்கு இது பெரியதாகும். இந்த முட்டை உலக சாதனைப் பட்டியலில் 2 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. கின்னஸ் சாதனைப்பதிவின் தகவல் படி 1956 ஆம் ஆண்டு வின்லாந்தில் இடப்பட்ட முட்டை முதலிடத்தை வகித்துள்ளது. அந்த முட்டையின் நிறை 16 அவுன்ஸுகளாகும். ஜேர்மனியில் உள்ள பெரிய எனும் சாதனைப் பதிவையும் இது நிகழ்த்தியுள்ளது. இந்த முட்டையை அருங் காட்சியகத்துக்கு வழங்க உரிமையாளர் விருப்பம் தெரிவித்ததை அடுத்து, பிரவுண்ஸ்வைக்கிலுள்ள மாநில இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் இந்த முட்டை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

## பிரான்ஸுடன் இணையும் ஜேர்மனி

பாரிஸ், மார்ச்7
அகதிகளின் பிரச்சினையைத் தீர்க்க ஜேர்மனியும் பிரான்ஸும் இணைந்து செயற்படவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலண்டே தெரிவித்துள்ளார்.
பிரான்ஸ் நாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலாவைச் சந்தித்த பிரான்ஸ் ஜனாதிபதி அவருடன் சிரிய அகதிகள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இது தொடர்பில் தனது கருத்துக்களை முன்வைத்த பிரான்ஸ் பிரதமர் மனுவல் வோல்லஸ், அகதிகளை மேலும் நாட்டினுள் அனுமதிக்க நாம் தயாராக இல்லை. இதற்கு முன்னதாக 30 ஆயிரம் அகதிகளை அனுமதிப்பதாக பிரான்ஸ் தெரிவித்தது. ஆனால், இனியும் அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்க நாம் தயாராக இல்லை என அவர் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பின் போது வறுமையை ஒழித்தல், சிரிய பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் முக்கிய அங்கம் வகித்தன. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதி ஹோலண்டே, அகதிகள் விவகாரத்தில் இருநாடுகளும் ஒரு சிக்கலை எதிர்கொண்டு வருகின்றன. அதனால் இருநாடுகளும் கூட்டாக இணைந்து செயற்படும் என்று கூறியுள்ளார்.
கடந்த வருடம் ஜேர்மனி 1.1 மில்லியன் அகதிகளை நாட்டுக்குள் அனுமதித்தது. நாட்டின் வளப்பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு அகதிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியுள்ளதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானப் பேச்சு வேண்டாம்
### தலிபான்கள் அறிவிப்பு




குண்டூஸ், மார்ச் 7
தலிபான்கள் சமாதானப் பேச்சில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்துள்ளனர். சமாதானப் பேச்சில் கலந்து கொள்வதாக வெளியிடப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.
ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா, அமெரிக்க நாட்டு பிரதிநிதிகள் சமாதானப் பேச்சில் ஈடுபடத் தயாராக இருந்தனர். இந்த பேச்சு மூலம் காரணமற்ற வன்முறையை முடிவுக்கு கொண்டுவரும் இலக்குடன் திட்டமிடப்பட்டிருந்தது என அமெரிக்க பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்தனர்.
அடுத்த வாரம் பேச்சு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆப்கானின் இஸ்லாமிய அமீரகம் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் தலிபான்கள், பேச்சைத் தவிர்ப்பதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.
மேலும், கறுப்புப் பட்டியலில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டதும், அப்பாவிக் கைதிகள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதுவரை பயனற்ற பேச்சில் நாம் பங்கெடுக்க மாட்டோம். எமக்கான முடிவு இந்தப் பேச்சில் கிட்டாது.
இஸ்லாமியக்குழுக்களுக்கு ஆதரவாக அவர்கள் செயற்படப் போவதில்லை. மாறாக எமக்கு எதிரான அழுத்தத்தை அவர்கள் அதிகரிப்பார்கள் என தலிபான்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் மாநில அரசு, தலிபான்களைப் பேச்சுக்கு அழைப்பதாகவும், இல்லாவிட்டால் தொடர்ச்சியாகப் போர் புரிந்து மக்களை கொன்று நாட்டை அழிக்கும் முயற்சியில் ஈடுபடலாம் எனும் தெரிவை முன்வைத்துள்ளதாகவும் அறிவித்துள்ளது. (ரி4)

# அருள்மிகு பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## இன்று (07.03.2016) திங்கட்கிழமை

**தீர்த்தோற்சவம் நாளை (08.03.2016) செவ்வாய்க்கிழமை**



### ஆலய வரலாறு

ஈழத் திருநாட்டில் சைவத் தமிழ்ப் பண்பாட்டை முறையாகப் பேணிப் பெருமை பெற்று விளங்கும் கிராமங்களுள் ஒன்றாகத் திகழ்வது திருநெல்வேலியாகும். பசு வதைக்கு அஞ்சி பரதேசம் போன ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை போன்ற சான்றோர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியும் இதுவாகும்.

இக் கிராமத்தின் புனிதப் பிரதேசமாக மிளிரச் செய்யும் ஆலயங்களுள் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். அக்காலத்து கிராம மக்களின் பாவனைக்கென மூன்று பொதுக் கிணறுகள் தோண்டப்பட்டன. அவற்றில் முதலில் தோன்றிய கிணறு இதுவாதலால் இது பழங்கிணற்றடி ஆயிற்று என கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

பழங் கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆகம விதிப்படியான முதலாவது கும்பாபிஷேகம் 08.06.1966 இல் நடைபெற்றது.

மேலும் இக்கோயில் இரண்டாவது கும்பாபிஷேகம் 18.05.1983 இல் நடைபெற்றதாக அறியக் கிடக்கின்றது. அடுத்த கும்பாபிஷேகம் 1995 இல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனாலும் அது இராணுவக் கெடுபிடிகள் காரணமாக ஏற்பட்ட நாட்டின் அமைதியின்மையால் நடைபெறவில்லை.

மற்றும் இக் கோயிலில் 1981 ஆம் ஆண்டிலும் 1982ஆம் ஆண்டிலும் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது.

இவ்வாறு அலங்கார உற்சவம் நடைபெற்ற இக் கோயிலில் முதன் முதலாக 1985இல் கொடியேறி மஹோற்சவம் இடம்பெற்றது. இம் மஹோற் சவத்தையும் கஜமுக சூர சங்கார விழாவையும் ஆரம்பித்து வைத்த பெருமை நாகரத்தினம் அவர்களையே சாரும். இப் பெரியாரின் தொடர்ந்த அரும்பெரும் முயற்சியால் வீரகத்தி விநாயகருக்கு ஓர் அழகிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது.1989 இல் தேர்முட்டி அமைப்பதற்கும் அத்திபாரம் இடப்பட்டு மிகவும் குறுகிய காலத்தில் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றது.

பின்னர் 1994 ஆம் ஆண்டில் வீரகத்தி விநாயகருக்கு திருமஞ்சம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 04.03.1994 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. பின்னர் 04.03.1997 இல் கைலாச வாகனம் ஒன்று செய்யப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது.

இவ்வாலயத்துக்கென சித்திரத்தேர். சப்பரம்.மஞ்சம் மற்றும் வாகனங்கள் அனைத்தையும் நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலய அதிபர் ஆ.ஜீவரத்தினம் அவர்களின் நெறிப்படுத்தலில் சிற்பக் கலைஞர்களால் இந்த கைலாச வாகனமும் உருவாக்கப்பட்டது.

இவ்வாறாக வளர்ச்சி பெற்ற இவ் விநாயகப் பெருமான் ஆலயத்தினைத் தரிசிக்க வரும் அடியார்களின் தாகத்தினைத் தீர்க்கும் பொருட்டு திருநெல்வேலி கலா மன்றத்தினர் ஆலயத்தில் தேரோடும் வீதியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து குளிர்பான வகைகளை வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு சிறப்புக்கள் பல பெற்று வளர்ந்து வரும் பழங்கிணற்றடி விநாயகர் இன்று தேர்த்திருவிழாவில் திருவீதி உலா வந்து மக்களுக்கு நல்லருள் பாலிப்பாராக.

### உயர்நனித் தேர் உலாவருவாய்



வளம்பல பல்கும் பழம் பதியான
வளர்புகழ் திருநெல்வேலிப் பதிப்
பழங்கிணற்றடியில் கோயில் கொண்டருளிப்
பக்தரைப் பாதுகாத் தருளும்
முழுவதிர்முன்றில் விநாயகப் பெருமான்
முன்னின்று தொண்டுகள் புரிவோர்
எழுபிறப்பினிலும் இன்புடன் வாழ
இனியனே உனைத்தினம் தொழுவோம்.

திருவிழாப் பொலிவில் திக்கெலாம் மகிழத்
தெய்வீகச் சூழலும் சிறக்கப்
பெருமனமுடைய அடியவர் கூட்டம்
பிள்ளையார் பெருமையைப் பேசி
வருடத்தில் ஒருநாள் வடம்பிடித் திழுத்தால்
வளரும் நம் நலங்களே என்று
ஒருமனமாக உன்வடம் பிடிக்க
உயர்நனித் தேர் உலா வருவாய்

வீரகத்தி விநாயகன் தாளினை
விரும்பித் தொழும் அடியவர் தமக்கு
நேரும் துன்ப துயரங்கள் நீங்கி
நித்திய இன்பமே கிடைக்கும்
ஊரினிற் சிறந்த திருநெல்வேலிப்பதி
உறைகின்ற விநாயகா உன்னைத்
தேரினிற் கண்டோம் திருவெலாம் பெற்றோம்
தெய்வீக வாழ்வினா லுயர்ந்தோம்.

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**
**தமிழ்த்துறைத் தலைவர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

**★★★★★★★★★★★★★★ தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் ★★★★★★★★★★★★★★**

**சூரியா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

**தாஸ் ஸ்ரோர்ஸ்**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**நியூகரன் பான்சி கவுஸ்**
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.

**ஐங்கரன் களஞ்சியம்**
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.

**நியூ கலைவாணி அரிசி ஆலை**
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**Oli Alakan**
www.olialakan.com
olialakan@yahoo.com
T.P: 077 958 7256 / 021 492 1711
Adiyapatham Road Thirunelveli. Jaffna.

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
No. 21 Palaly Road,
Thirunelvely
T.P NO.021 221 2595
E.mail:- selvahel@gmail.com
Show Room: No. 18, Palaly Road,
Thirunelvely.
Hot Line: 077 711 3884/ 077 764 2771

**Arrivoly**
Phone Shop & Net Cafe
No: 27, Palaly Road,
Thirunelvely Junction, Jaffna.
T.P: 021 222 0066
E-mail: rubanto@gmail.com

**KARAN TEXTILES**
Palaly Road,
Thirunelvely Junction.
T.P. 021 222 2697 /077 419 6946
Email: sathur90@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டர் நாள் தொறும் துதிசெய

# திருக்கேதீச்சர

# மகா சிவராத்திரி

மன்மத ஆண்டு மாசித்திங்கள் 24 ஆம் நாள் (07.03
(அபிடேகம்) பூசை, அர்ச்சனை நிகழ்வுகளும், சிறப்பு நிக

## திருக்கேதீச்சர வரலாறு

திருமூல நாயனாரால் சிவபூமி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கையில் பழமையும் பெருமையும் உடைய சிவத்தலங்களுள் சிறப்பு வாய்ந்தது திருக்கேதீஸ்வரமாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாய் அமையப்பெற்ற திருத்தலமாகும்.

பெருந்தவமுடையோரான கேது, மாயன், மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் போன்ற தவமுடையோர் தம் குறை தீர்த்து மீண்ட வரலாறு கொண்ட பழமை வாய்ந்தது.

கேது பூசித்த தலமாதலால் கேதீச்சரமாயிற்றென ஆய்வாளர் கூறுவர். இக்கோயில் மாதோட்ட நன்நகரில் அமைந்துள்ளது. அதாவது சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா என்பவர் பிள்ளைப்பேறு இன்றி திருக்கேதீச்சர பாலாவித் தீர்த்தத்தில் நீராடி கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடி பிள்ளைப்பேறு பெற்றார். பின் இத்தலத்தில் வாழத் தலைப்பட்டு அவ்விடத்தைப் பெருநகராக்கினார். துவட்டாவினால் உருவாக்கியமையால் அவ்விடம் துவட்டா எனவும், பெருநகரானபடியால் மாதுவட்டா எனவும் பின் மருவி மாதோட்டம் எனவும் பெயர் பெற்றது.

இத் தலத்திலமைந்த பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோருக்குக் காயாவில் கடனாற்றும் புண்ணியம் கிட்டுமெனவும் நீராடுவோருக்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் இத்தீர்த்தத்தின் மகிமையாகும்.

பழங்குடியினராகிய நாகர் வழிபட்ட தலமாதலால் நாகநாதர் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இது சைவத்தின் தொன்மையை யும் பழமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

மற்றும் சோழ, பாண்டிய மன்னர்களும் பல திருப்பணிகளை இத் திருக்கோயிலுக்காற்றிய பெருமையும் வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய, நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையும் கொண்ட திருத்தலமாகும்.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமையும் உடையதாகும். அதுமட்டுமன்றி நாவுக்கரசு நாயனாரின் திருத்தாண்டகத்திலும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருப்பது தொன்மைச் சிறப்பிற்குச் சான்றாகும்.

இத் திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்கள் இருந்தமையையும் அவை சிற்பம், கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றலுள்ள கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் இருந்தமையினை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பத்தாம் பதினொராம் நூற்றாண்டில் இக்கோயில் சோழ மன்னர்களால் இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்டது. வெளிநாட்டவர்களான ஒல்லாந்த போர்த்துக்கீசரால் இவ்வாலயம் தகர்க்கப்பட்டு சிற்பங்கள் சிதைவடைந்தன.

அழிவுற்று சிதைவடைந்த இவ்விடத்தை யாழ்ப்பாணத்து விடிவெள்ளி ஆறுமுகநாவலர் வாங்கி பெருமையும் புகழும் நிலைக்க வேண்டுமென ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். அதனை நிறைவே கொழும்பு தம்பையா முதலியார், சுபைதார் வைத்திலிங்கம் , மாத்தளை ஆசைப்பிள்ளை ஆகியே நிறைவேறாத நிலையில் 1890 இல் அரச அதிபர் மூலமாக நிலம் கோயிலுடைமையாக்கப்பட்டு கோயிலுக் அமைக்கப்பட்டு முதலாவது தலைவராக சிவபாத சுந்தரமும் செயலாளராக சிற்றம்பலமும் இருந்து இச்சல பொது உடமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இச்சபை மூலம் பல பல பெரியார்களின் அருந்தவ முயற்சிகளால் சிறு சிறு கோயில்களாக உ கும்பாபிஷேகம் 28.06.1903 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

இக்கோயிலில் மூலக் கருவறையிலிருந்த சிவலிங்கம் காசியிலிருந்து வருவிக்கப்பட்டதென இ கூறுகின்றது.

1948ஆம் ஆண்டு இத் திருவிடத்தில் சைவப்பெரு மாநாடொன்று கூட்டப்பட்டது. இந்த மாந பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் ஆலயத்தில் உருவாக்கப்பட்ட சபையே இன்று உலகளாவிய பெருன திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையாகும்.

இந்த திருக்கோயில் 1952இலும் 1960 ஆம் ஆண்டிலும் திருவுருவங்கள் நிறுவப்பட்டு இருமு இடம்பெற்றது. வழிபடவரும் அடியார் நலன்கருதி திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், ...தன் சத்திர கதிர்காமர் தொண்டர் மடம், பூநகரி மடம், அடியார்மடம், நீர்ப்பாசன மடம், சிவபூசைமடம், நரசிங் மணிமண்டபம், நாவலர்மடம், அம்மா சத்திரம், மகாசிவராத்திரி மடம், திருப்பதி மடம், கௌரீசர் மடம், திருக மடம், நகரத்தார் மடம் எனப் பல்வேறு திருமடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு வெகு சிறப்புடன் கும்பாபிஷேகம் நடைபெற்று 1990 வரை நித்திய நைமித்திய பெரு நடைபெற்றது. 1990இற்குப் பின்பு பூசையோ பெருவிழாக்களோ நடைபெற முடியாத நிலையில் சிறப்படைந்து இன்று பாலஸ்தாபன நிலையில் இருக்கும் இக்கோயில் சிவலிங்க திருநீராட்டுடன் சிவ இருப்பது யாவரும் அறிந்ததே.




**முருகன் உணவகம் & கூல்பார்**

சுத்தமான சைவ
உணவுவகைகள்
ஓடருக்கும்
சமைத்துக்கொடுக்கப்படும்.

**4 ஆம் கட்டை, பூநகரி.**



**LUXMY MULTY CENTRE**

**லக்ஸ்மி மல்ரி சென்ரர்**

* Fancy goods
* Stationaries
* Plastics & etc.
* Footwear
* Furnitures

Mannar Road,
Nachikkuda Junction, Mulangawil.
021 228 3113



**சரணியா நகைப்பூங்கா**

அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தினத்தில்
ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்.

மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
Tel:077 446 2539



**கண்ணகி ஹாட்வெயார்**

பெயின்ற் வகைகள், இரும்புப்
பொருள்கள், பைப் வகைகள்,
மாபிள்வகைகள் என்பவற்றை
தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

4 ஆம் கட்டை, பூநகரி. Tel: 077 044 5037



**அபான்ஸ் காட்சி அறை**

நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்
அபான்ஸ் தயாரிப்புக்களான
LED Television, Fridge மற்றும்
ஏனைய பொருள்களையும் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே.021 577 6151



**N.R.Mobile & Electronic**

Mannar Road,
Nachchikuda Junction.
தொடர்பு:
077 314 8941



**சந்நிதி முருகன் எலக்றிக்கல்ஸ்**

சகல விதமான எலக்ரோனிக் பொருள்கள்
மற்றும் வீட்டு வயறிங் பைப் லைன் சாமான்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

இல.09, முழங்காவில், நாச்சிக்குடாச்சந்தி, கிளிநொச்சி.
Tel: 077 229 7248



**வெற்றியுடையவன் பல்பொருள் வாணிபம்**

முகவர்: CAUSEWAY PAINTS &OIL MART
ஏகமுகவர்: Western Union (Moving Money For Better)

நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.
077 698 9934


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பவருள் செய் கேதீச்சரமதுதானே

# ர ஆலயத்தில்

# விழா சிறப்பிதழ்

03.2016) திங்கட்கிழமை திருக்குடத் திருமுழுக்கு
நிகழ்ச்சிகளும் அலங்கார மண்டபத்தில் இடம்பெறும்

ங்கி சைவ சமயிகளின் றவேற்ற முயன்றவர்கள் கியோராவார். அதுவும் லுக்கென ஒரு சபையும் ச்சபை 10.02.1951 இல்

க உருவாகி முதலாவது

ன இராமேச்சர வரலாறு

மாநாட்டைத் தொடர்ந்து ருமையுடன் திகழ்கின்ற

முறை கும்பாபிஷேகம் த்திரக் டேசியா மடம், சிங்க மடம், மாதுவட்ட திருக்குறிப்புத் தொண்டர்

பெருவிழாக்கள் சிறப்பாக லிருந்து பின்னரும் சிவராத்திரி கொண்டாட



**மகாலிங்கப் பெருமானுக்கு வழமைபோல் பாலாவித் தீர்த்தத் திருமுழுக்கு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**

- நான்கு யாமங்களிலும் திருமுழுக்கும் பூசைகளும் இடம் பெறும்.
- நள்ளிரவு 12.15 இற்கு இலிங்கோற்பவ பூசை இடம் பெறும்.

**சிவனடியார்கள் திரண்டு வாரீர் எம் பெருமானின் அருளைப் பெறுக.**

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை.


## தர்சிகா ஸ்ரூடியோ



வீடியோ & போட்டோ
Album Designing
Album making
021 320 4973
077 281 2453


கௌரி இணை திருக்கேதீச்சர நாதரின்
மகா சிவராத்திரி தினம் நடைபெற
சிறப்புற வாழ்த்துகிறோம்.

வைத்திய கலாநிதி
**மு. கதிர்காமநாதன்**
தலைவர் - இந்து ஆலயங்களின் ஒன்றியம்
மன்னார் மாவட்டம்


## பல்பொருள் வாணிபம்



சகலவிதமான
மளிகைப்
பொருள்களும் மிகவும்
தரமாகவும்
மலிவான விலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

SELVAM BRO`S
GRAND BAZAAR MANNAR.
023 222 2196

## லக்ஷ்சுமி உணவகம்



சகலவிதமான உணவு
வகைகளையும்
தரமாகவும் சுகாதார
முறைப்படியும்
பெற்றுக்கொள்ளலாம்.

நாச்சிக்குடா சந்தி, முழங்காவில். தொ.பே.: 076 711 4914

## Jothy Book Centre
*Mannar*

சகல விதமான
அப்பியாசக் கொப்பிகளையும்
பாடசாலை உபகரணங்களையும் தரமாகவும்
நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்.



தொடர்பு:
023 222 2052

## Malar Stores



No .04, Market Building,
Mannar.
G.யோகநாதன்
Tel: 023 222 2046


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலய மகா சிவராத்திரி விழா சிறப்பிதழ் - 07.03.2016

உ
சிவமயம்

## "தொண்டர் நாள்தொறுந் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே"



அணு முதல் அண்டசராசரங்கள் வரை வியாபித்திருக்கும் பரம்பொருளின் பாதார விந்தங்களை முதலில் வணங்குகின்றேன். வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் மூர்த்தி - தலம்- தீர்த்தம் என்னும் முப்பெருஞ் சிறப்புக்களையும் கொண்டு 2600 ஆண்டுகளுக்கும் மேற்பட்டுச் சைவ மக்களின் புராதன அடையாளமாகவும் திகழ்வது திருக்கேதீச்சரத் திருத்தலமாகும்.

இத் திருத்தலத்தை இராம - இராவண யுத்தம் (பொ.ஆ.மு. 7292 - Dr.Vartak'sbook "swayambhu" & Astronomical Dating of the Ramayan ) முடிவடைந்து திரும்பிச் செல்லும் வழியில் ஸ்ரீ இராம பிரானும், மகாபாரத யுத்தம் முடிவடைந்த பின் அர்ஜுனன் மகாதீர்த்தம் என்றும் அழைக்கப்பட்ட திருக் கேதீச்சரத்துக்கும் தல யாத்திரை செய்ததற்கான வரலாற்றுப் பதிவுகளும் காணப்படுகின்றன.

இத் திருத்தலத்தின் திருப்பணிகளின் வரலாற்றை நோக்கும் போது, பொது ஆண்டுக்கு முன் (பொ.ஆ.மு) 5ஆம் நூற் றாண்டில் கலிங்கதேச இராஜகுமாரனாகிய விஜயன், பொ.ஆ.பி 11 ஆம் நூற்றாண்டில் இராசேந்திரச்சோழ மன்னனும், பொ.ஆ.பி. 13 ஆம் நூற்றாண்டில் முதலாம் சுந்தரபாண்டிய மன்னனும் இக்கோயிலில் திருப்பணிகளைச் செய்தனர் என்பது வரலாறு.

அதன்பின் 15ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த போர்த்துக்கீசப் பறங்கிகளால் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் திருக்கேதீச்சரத் திருக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டு திருக்கோயிற் கற்களையும் சிற்பங்களையும் கொண்டு கிறிஸ்தவ தேவாலயமொன்றைக் கட்டினர் என்பதும் மறு(றை)க்க முடியாத வரலாற்று வலி.

இவ்வாறு தரைமட்டமாக்கப்பட்ட திருக்கேதீச்சர திருக்கோயிலின் வரலாறு இறையருளாலும் 1872 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் அவர்களின் பெரு முயற்சியாலும் மக்களுக்கு வெளிக்கொணரப்பட்டு திருக்கோயில் நிலத்தை மீளப்பெற்றுக் கோயிலை மீளவும் அமைப்பதற்கான முயற்சிகளை தாமே முன்னின்று ஆரம்பித்தனர். ஆனால் நாவலர் பெருமான் இறைவன் திருவடி நிழலை அடைந்து 14 ஆண்டுகளின் பின்பு விஜய வருடம் கார்த்திகை 30ஆம் நாள் 1893, (13-12-1893) அவிட்ட நட்சத்திர நன்னாளில் (ஏலத்தொகை ரூபா 3100/=) இ திருவாளர் ராம.அரு.அரு.பழனியப்பச் செட்டியார் அவர்களின் கைங்கரியத்தாலும் யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களின் கைங்கரியத்தாலும் கோயில் நிலம் சைவப் பெருமக்கள் கைக்கு மீண்டும் கிடைத்தது.

இதன் பின்பு முதல் திருப்பணியாக திரு.சி.த.மு.பசுபதிச் செட்டியார் அவர்கள், மண்மாரி பொழிந்து மூடிய பழைய கோயிலிருந்த இடத்தை அகழ்ந்து கண்டுபிடித்ததுடன் புதிய சிவாலயத்தையும் கட்டுவித்து சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் (28.06.1903) ஆயிலிய நட்சத்திரமும் வளர்பிறைச் சதுர்த்தசி திதியும் கூடிய நன்னாளில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். 1948ஆம் ஆண்டிலேயே உத்தியோக பூர்வமாக திருக்கேதீச்சர புனருத்தாரண சபை அமைக்கப்பட்டது. இச் சபையினரின் பெருமுயற்சியால் நந்தன வருடம் ஆகஸ்ட் 1952, சர்வாரி வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (31.10.1960) ஆகிய ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இத் திருப்பணிகளில் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களின் பங்கு அளப்பரியது. அவரின் வழியில் சைவமணி இ.நமசி வாயம், மனிதநேய மாமணி வி.கயிலாயபிள்ளை போன்றவர்கள் செய்த அளப்பரிய திருப்பணிக் கைங்கரியங்களையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்போது இந்திய அரசின் பெரும்பங்களிப்புடன் ரூபா 320 மில்லியனுக்கு மேற்பட்ட செலவில் மாமல்புரத்து சிற்பக் கலைஞர்களால் சிறப்பாக உருவாக்கப்பட்ட சிற்பக்கற்களால் உட்பிர கார மண்டபம் நிர்மாணிக்கும் திருப்பணி இறையருளால் நடைபெற்று வருகிறது.

இவ்வாறான வரலாற்றைக் கொண்டு விளங்கும் திருக்கோயிலும் திருப்பணிச் சபையும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் தொடர்ந்து அயராது கௌரியம்பாள் உடனுறை கேதீச்சரப் பெருமான் அருளுடன் அளப்பரும் சிவத்தொண்டாற்றி வருகின்றனர். காலத்துக்குக் காலம் திருக்கோயிலின் தெய்வீகப் பழமை மாறாதவாறு திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இத் திருப்பணிச் சபையானது இறைவன் திருவருளாலும் உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்களின் எழுச்சியாலும் மிகப்பெரும் திருப்பணிகளை நிறைவேற்ற எம்பெருமானின் அருள்வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

மன்மத வருடம் மாசித்திங்கள் 24ஆம் நாள் இன்று திங்கட்கிழமை மகாசிவராத்திரிப் பெருவிழா வழமைபோல் இத்திருத் தலத்தில் நடைபெறும். பாலாலய குடமுழுக்கு (பாலஸ்தாபனம்) நடந்திருப்பதால், பகலில் நான்கு வேளைகளும், இரவில் நான்கு சாமங்களிலும் (மூன்றாம் சாமத்தில் நள்ளிரவு 12:15 மணிக்கு இலங்கோற்பவர் பூசை உட்பட) இடம்பெறும் என் பதனையும் அடியார் பெருமக்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
**தலைவர்**
**திருக்கேதீச்சர ஆலய**
**திருப்பணிச் சபை**

**மா.தவயோகராஜா**
**தலைவர் திருக்கேதீச்சர**
**ஆலய நம்பிக்கைப்**
**பொறுப்பாளர் சபை**

## சிவராத்திரி விரதம் நோற்று சிவனருள் கிடைக்க வாழ்த்துகிறேன்

மாசி 24ஆம் நாள் (07.03.2016) திங்கட்கிழமை வருகின்ற சிவராத்திரி விரதமானது பல சிறப்புக்களை உடையதாக விளங்குகின்றது. இந்த ஆண்டு சிவராத்திரி அன்று திரயோதசி திதியும் நடுநிசியில் சதுர்த்தசி திதியும் கூடி திங்கட்கிழமை வருவதானல் இந்த வருடம் சிவனை நினைத்து அவரவர் வழமைபோல் விரதம் இருந்தால் 3 கோடி சிவராத்திரி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என பல பெரும் சிவாச்சாரியார்கள் உத்தரகாரணாகமத்தை ஆதாரமாக வைத்து கூறியுள்ளார்கள்.

சிவன் அடியார்கள் அனைவரும் ஆசார சீலராய் சிவவழிபாட்டை நடத்துவதோடு பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத்தில் நடைபெறுகின்ற சிவராத்திரி விஷேட அபிடேக, பூஜை வழிபாடுகள், தீர்த்தக்காவடி என்பனவற்றில் பங்குபற்றி சிறப்புடன் வாழ உதயன் பத்திரிகை வாயிலாக வாழ்த்தி ஆசிகள் கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ தி. கருணானந்தக்குருக்கள் (பிரதம குரு)**
**திருக்கேதீச்சரம்.**



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சி பலன்கள்





### மிதுனம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்து (08.01.2016-25.07.2017) மிதுன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி கீழே விவரிக்கப்படுகிறது)*

**விவசாயிகளே!**
ஒரே விதமான பயிர்களைப் பயிரிடாமல் மாற்றுப் பயிர்களைப் பயிரிட முயற்சி செய்யுங்கள். பாதிப் பணம் கொடுத்து முடிக்கப்படாமலிருந்த நிலத்தை மீதிப் பணம் தந்து கிரயம் செய்வீர்கள்.

**வியாபாரிகளே!**
நீங்கள் போடும் கணக்குத் தப்பாது. பற்று வரவு உயரும். புது ஒப்பந்தங்கள் வரும். பழைய பாக்கிகளும் கிடைக்கும். பெரிய நிறுவனங்களுடன் போட்டிபோட்டு அதிக இலாபம் ஈட்டுவீர்கள். உங்களுடன் பங்குதாரர்களாக பலரும் முயற்சி செய்வார்கள். உங்கள் கருத்துக்களுக்கு, புதிய முயற்சிகளுக்கு மறுப்புத் தெரிவிக்காத நல்லவர் பங்குதாரராக வர வாய்ப்பிருக்கிறது.
கல்வித் தகுதியில் சிறந்த அனுபவமிக்க வேலையாள்கள் அமைவார்கள். வி.ஐ.பி.களும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள்.

**உத்தியோகத்தர்களே!**
தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். அலுவலகத்தில் புதிய முடிவுகள், முக்கிய முடிவுகள் எடுப்பதில் உங்களுடைய பங்கு அதிகமாக இருக்கும். உங்களைப் பற்றித் தொடரப்பட்ட அவதூறு வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு தடையின்றிக் கிடைக்கும்.

**கேதுவின் பலன்கள்:**
இதுவரையில் உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் அமர்ந்து வேலைச்சுமையையும், மரியாதைக் குறைவான சம்பவங்களால் தலைக்குனிவையும், உத்தியோகத்தில் நிம்மதியற்ற போக்கையும் தந்துகொண்டிருந்த கேதுபகவான் இப்போது ராசிக்கு ஒன்பதாமிடத்தில் வந்தமர்வதால் தொலைநோக்குச் சிந்தனை அதிகமாகும். வீரியத்தை விட காரியம் தான் முக்கியம் என்பதை உணர்வீர்கள்.
பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதை உணரும் சூட்சும புத்தி உண்டாகும். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீட்டு மனை வாங்குவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் விடயத்தில் கொடுத்த வாக்குறுதியைக் கடைசி நேரத்தில் நிறைவேற்றிவிடுவீர்கள். உங்களிடம் இருக்கும் சின்னச் சின்ன பலவீனங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள்.
சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். கோவில் விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிதுர்வழி சொத்துப் பிரச்சினை விஸ்வரூபமெடுக்கும். உங்கள் அறியாமலேயே ஒருவித படபடப்பு வந்துசெல்லும். தன்னம்பிக்கை குறையும்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் சப்தம-ஜீவனாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால் மனைவி உங்களுடைய குறை, நிறைகளைச் சுட்டிக் காட்டினால் அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள். திருமண முயற்சிகள் சற்று தாமதமாகி முடியும். வி.ஐ.பி.களின் அறிமுகம் உண்டு. வங்கிக் காசோலையில் முன்னரே கையப்பமிட்டு வைக்காதீர்கள்.
ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் மற்றவர்கள் விவகாரத்தில் தலையிட்டு வம்பில் சிக்கிக் கொள்ளாதீர்கள். திடீரென்று அறிமுகமாகுபவர்களை நம்பி வீட்டுக்குள் அழைத்து வர வேண்டாம். உங்கள் அதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் மதிப்பு, மரியாதை கூடும் என்றாலும் எதிர்ப்புக்களும் இருந்து கொண்டேயிருக்கும். ஏறிக் கொண்டே போகும் கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள்.
வியாபார ரகசியங்கள் எவர் மூலம் கசிகிறது என்பதை அறிந்து அதற்கேற்ப செயற்படுவீர்கள். அரசால் கெடுபிடிகள் வந்து செல்லும். பழைய வாடிக்கையாளர்களும் தேடி வருவார்கள். பாக்கிகளை வசூல் செய்ய புதிய ஆள்களை நியமனம் செய்வீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

(தொடரும்)

மகாலிங்கம் அருள்குமரன்

# இதை நான் சொல்லித்தானாக வேண்டும்....

மருத்துவர் சத்தியமூர்த்தி அவர்கள் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர்களிலிருந்து பரிசாரகர்கள்வரை நோயாளர்களுடனான அணுகு முறையில் இதுவரை கண்டிராத மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.
கடந்த இரண்டு மாத காலமாக வைத்திய சாலையின் மருத்துவ விடுதிகளுடனும், சிறுவர் விடுதியுடனும் தொடர்புபட வேண் டிய நிலை...
சுகயீனத்துக்காக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட போது...
வைத்தியசாலையின் பழைய கெடுபிடிகளை நினைத்து, தனியார் வைத்தியசாலைக்குச்செல்ல நினைத்தபோதும்...
போதனா வைத்திசாலையில் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் என்ற கட் டாயம்...
விதியை நொந்தபடி போதனா வைத்திசாலைக்குச் சென்ற எங்களுக்கு உண்மையிலேயே மிகப் பெரிய ஏமாற்றம் – எங்கள் மதிப்பீடு தவறாய் இருந்தது. சிறியவர், பெரியவர், ஆண், பெண் பேதமேதுமின்றி நோயாளர்கள் கரிசனையோடு கவனிக்கப்பட்டனர்.
வழக்கமாக ஏறிப்பாயும் சுகாதாரப் பரிசாரகர்கள்கூடக் கனிவுடன் நடந்து கொண்டனர்.
அப்பொழுதுதான் அறிந்துகொள்ள முடிந்தது புதிய பணிப்பாளரது நடைமுறைகளை.
ஆங்காங்கே அவரவர்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. சொல்லப்போனால், இப்போது யாழ். போதனா வைத்திசாலையின் மிகச் சிறந்த சேவை என்பதற்கப்பால், நோயாளர் நலனுக்கான முன்னுரிமை பாராட்டப்பட வேண்டியதொன்று.
எவரும் பொழுதைப் போக்குவதற்காக வைத்தியசாலைக்கு வருவதில்லையே? நோய் வாய்ப்பட்டு நொந்துபோய் வருகின்றவர்கள் மீது வைத்திசாலையிலும் பாய்ந்து விழுந்து, ஏனோ தானோ என்று நடந்து கொண்டால் நிலமை என்னாவது? அதுதான் கடந்த கால நிலை.
அந்த நிலைமை யாழ். போதனா வைத்திசாலையில் இப்போது இல்லை.



புதிய பணிப்பாளர் ஏற்கனவே மக்களோடு நின்று மக்கள் மனங்களில் நிறைந்த ஒருவர் என்பதாலோ என்னவோ மக்களுக்கான சேவையில் – நோயாளர்களை அரவணைத்து ஆற்றுப் படுத்துவதில் யாழ். போதனா வைத்திசாலை இப்போது உயர்ந்து நிற்கிறது.
பணிப்பாளர் மாத்திரமல்ல, வைத்திய நிபுணர்களும், வைத்தியர்களும்கூட நேர காலம் பாராது ஒவ்வொரு நோயாளரிலும் தனித்தனியாகக் கவனிப்பைக் காட்டுகின்றமை சிறப்பானதொரு விடயம். குறிப்பாக மருத்துவ விடுதிகள், டெங்கு விசேட கவனிப்பு அலகில் வேறெங்கிலுமில்லாத நோயாளர் கவனிப்பு; தொடர் கண்காணிப்பு. சொல்லும் திறனன்று...
நேர காலத்துக்குத் தங்கள் சாப்பாட்டைக்கூடக் கவனிக்காமல், சரியான தூக்கம்கூட இல்லாமல் நோயாளர்களைக் கவனிக்கின்ற தாதிய உத்தியோகத்தர்களின் சேவையையும் மறந்துவிட முடியாது. ஆனாலுங்கூட தேவையற்ற விதத்தில் நோயாளர்களோடும், அவர்களைப் பராமரிக்கின்ற – பார்க்க வருகின்றவர்கள் மீது தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கின்ற தனியார் பாதுகாப்புச் சேவையினரையும் கொஞ்சம் கவனித்துக் கொண்டால் யாழ். போதனா வைத்தியசாலையில் குறையேதுமிருக்காது.
பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களின் சேவை தொடர பொது மக்கள் என்ற வகையில் எங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும் இருக்கும்.

> "எவரும் பொழுதைப் போக்குவதற்காக வைத்திய சாலைக்கு வருவதில்லையே? நோய் வாய்ப்பட்டு நொந்துபோய் வருகின்றவர்கள் மீது வைத்திசாலையிலும் பாய்ந்து விழுந்து, ஏனோ தானோ என்று நடந்து கொண்டால் நிலமை என்னாவது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ எழுச்சியைத் தவறவிட்டுவிட்ட யாழ். பல்கலை மாநாடு

என்.பி.ஸ்ரீந்திரன்

ஈழத்திருநாட்டில், யாழ். மண்ணில், யாழ். பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 41 வருடங்களின் பின், அனைத்துலகச்சைவமாநாடு நடந்தேறியிருப்பது, தமிழ் கூறும் நல்லுகமெங்கும் வாழும் சைவத்தமிழ் மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய, பெருமைப்படத்தக்க. பாராட்டத்தக்க விடயம்.

மேற்படி மாநாடு பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றிருந்தது. பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனின் அயரா முயற்சியினாலும் அவர் தம் துறைசார் விரிவுரையாளர்களினாலும் இந்த மாநாடு சிறப்புற நடைபெற்றிருந்தது.

யாழ். பல்கலைக்கழக வளாகமெங்கும் மாவிலை தோரணம் தொங்க நந்திக் கொடிகள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த காட்சி கண்கொள்ளாதது. பெப்ரவரி 12ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன் மாநாடு ஆரம்பமாகியது. விருந்தினர் சமயத் தலைவர்கள் கொடி, குடை, ஆலவட்டம் சககிதம் கைலாசபதி கலையரங்குக்கு அழைத்துவரப்பட்டனர். பின்னர் சமயத் தலைவர்களதும் பேராசிரியர்களதும் தொடக்கவுரைகளுடன் அன்றைய மாலை நிகழ்வுகள் நிறைவுற்றிருந்தன.

“சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப்பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்” எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வரங்கு இந்த மாநாட்டின் முக்கிய நிகழ்வு. ஐந்து ஆய்வரங்குகளில் காலை, மாலை அமர்வுகள் என 78 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டிருந்தமை பாராட்டத்தக்க, பயன் மிக்க நிகழ்வு. மகுடமாக, ஆய்வரங்கக் கட்டுரைகள் மாநாட்டு மலராக வெளிவந்துள்ளமை அடுத்த சந்ததிக்கு இம்மாநாட்டுச் செய்தியை எடுத்துச் செல்லும்.

இந்தக் கட்டுரைகள் யாவும், பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர்.பொன்.இராமநாதன், சுவாமி விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் ஆகிய சைவப் பெரியார் பெயர்களைக் கொண்ட ஆய்வரங்குகளில் வாசிக்கப்பட்டிருந்தன. ஈழத்தில் சைவம் வளர்த்த பெரியார்களின் பெயர்களில் ஆய்வரங்குகள் அமைத்து, நினைவு கூர்ந்திருப்பது சைவத்தின் தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் சான்று; போற்றுதற்குரியது.

ஆய்வரங்குகளில் கட்டுரைகளை வாசித்தவர்களில் பெரும்பாலானவர்கள் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களுமே. இந்தக் கட்டுரைகளைச் செவிமடுத்தவர்களான சொற்ப தொகையினரும் பல்கலைக்கழக மாணவர்களும், பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களுமே. சைவ அபிமானிகள் சிலரது தலைகளையும் காண முடிந்தது. ஆய்வு நிலை மாணவர்களுக்கும், சைவ ஆர்வலருக்கும் பயனளிப்பவையாக ஆய்வுக் கட்டுரைகள் அமைந்திருந்தன.

எனினும் சைவத்தின் எதிர்கால நிலை பற்றியோ! இன்று சைவத் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பிலோ ஆய்வரங்கில் சிந்தனை எதுவும் வெளிப்படவில்லை. இது பெரும் குறைபாடே.

அதுமட்டுமன்றி, ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்ட “சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்க சிந்தனைகளும்” எனும் கருப்பொருளில் “சமூக நல்லிணக்கம்” பற்றியும் ஆய்வாளர்கள் கவனத்தில் கொண்டிருக்கலாம்.

அனைத்துலக சைவமாநாடு காலத்தின் தேவையறிந்து நடத்தப்பட்டிருப்பினும், இந்த மாநாடு ஈழத்தில் சைவத்தமிழ் மக்களை விழிப்படைய எழுச்சி கொள்ள வைக்கத் தவறியுள்ளது. இது பெருங் குறை. ஏதோ புலமைசார் மக்களுக்கான மாநாடு என்ற ரீதியில் நடந்து முடிந்திருக்கிறது. ஒரு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஏற்படுத்திய எழுச்சியை இந்த சைவ மாநாட்டில் குறைந் தளவில்கூட காணமுடியாமற் போனமை வருத்தம் தருவது.

மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் விருந்தினர்கள் ஆற்றியிருந்த உரைகளில் இருந்தும், முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளிலிருந்தும் இதனை உணர முடிந்தது. யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் உரை யாற்றும்போது, “இந்த மாநாடு இந்தப் பிரதேச மக்களுக்கு எழுச்சி மாநாடாக அமைந்திருக்க வேண்டும். சாதாரண மக்களும் பங்கு பற்றியிருக்கவேண்டும். இதனையே! சேர்.பொன.இராமநாதன் விரும்பியிருந்தார்” எனக் கூறினார்.

பேராசிரியர் பொன். பாலசுந்தரம் வாழ்த்துரை வழங்கும்போது, “ஈழத்திருநாட்டில் 14% மாகவிருந்த இந்துத் தமிழர்கள் இன்று 12%மாகக் குறைந்துள்ளனர். இதற்குக் காரணம் என்ன? தீர்வு என்ன என்பது பற்றி இந்த மாநாடு சிந்தித்திருக்க வேண்டும். மத மாற்றத்தால் இந்துத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இந்த நிலையை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என வலியுறுத்தினார்.

பொதுவாகச் சமயஞ்சார் மாநாடுகள், அந்தச் சமயம் சார் சாதாரண மக்களிடத்தில் சமயம் தொடர்பான அறியாமையை அகற்றி, சமய அறிவையூட்டி, சமய உணர்வை ஏற்படுத்தி, எழுச்சி கொள்ளச் செய்யவேண்டும். இதற்காகவே மாநாட்டைத் திட்டமிடுவார்கள். மாநாட்டின் ஒரு பகுதியாக எழுச்சிமிக்க வீதி ஊர் வலங்களையும், சமயம்சார் கண்காட்சியையும் நடத்தியிருக்கவேண்டும். இவையே சாதாரண சைவ மக்களிடத்தில், தன் சமயம் பற்றி அருமை, பெருமைகளை அறியச் செய்து, விழிப்புணர்வையும், எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கும். அனைத்துலகச் சைவ மாநாட்டில் பிற நாட்டுத் துறவிகள், சமயத் தலைவர்கள் போதியளவு அழைக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் ஒரு குறைபாடு. இது மாநாட்டு தலைப்பை ஏற்பாட்டாளர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்ற குறையையும், ஏற்படுத்தியது.

> ஈழத்திரு நாட்டின் எண்திசையிலும் உள்ள இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்கள், ஆசிரமங்களை, சுவாமிகளை ஒன்றிணைத்து, ஒரு திறந்த வெளியரங்கில் சாதாரண மக்களும் ஆய்வரங்கு நிகழ்வுகளைக் கண்டு பயன்பெற ஏற்பாடு செய்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

பிறநாட்டில் வசிக்கும் எம்மவர்களுடன் தஞ்சாவூர் பல்கலைக்கழகப் பேராசிரியர் க.பாஸ்கரன் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தமை இந்தக் குறைபாட்டைச் சுட்டி நிற்கிறது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, இந்த மாநாடு பல்கலைக்கழக மட்டத்தில் உயர்ந்தோரான பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களுக்காக மூடிய அரங்குகளில் நடத்தப்பட்ட ஒரு மாநாடு போன்றே நடந்து முடிந்திருக்கிறது. ஈழத்திருநாட்டின் எண்திசையிலும் உள்ள இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்கள், ஆசிரமங்களை, சுவாமிகளை ஒன்றிணைத்து, ஒரு திறந்த வெளியரங்கில் சாதாரண மக்களும் ஆய்வரங்கு நிகழ்வுகளைக் கண்டு பயன்பெற ஏற்பாடு செய்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். அத்துடன் குறைந்த பட்சம் வடமாகாணத்திலுள்ள சமய பாட ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களையாவது ஒன்றிணைத்து மாநாட்டை நடத்தியிருப்பின் ஒரு சமய மாநாட்டின் நோக்கமும், சேர்.பொன்.இராமநாதன் பல்கலைக்கழகத்தை (பரமேஸ்வராக்கல்லூரி) அமைந்ததன் நோக்கமும் நிறைவேறியிருக்கும்.

எது எவ்வாறாயினும், இத்தகைய மாநாடுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர வேண்டும். நன்கு திட்மிட்டு, மாநாட்டின் பொருளுணர்ந்து அவை நடத்தப்படவேண்டும். சேர் பொன்.இராமநாதனின் இந்துப்பல்கலைக்கழகக் கனவு நனவாக வேண்டும். இனிவரும் மாநாடுகள் சைவமக்கள்மயப்படுத்தப்பட்ட மாநாடுகளாக அமைய வேண்டும். பிற மத மாநாடுகள் போல் பிரமாண்டமான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு சைவமக்களை எழுச்சி கொள்ள வைக்க வேண்டும். சைவத்தின்பால் பற்றுக் கொள்ள வைக்க வேண்டும்.

இன்னும் 20,30 ஆண்டுகளின் பின் சைவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற நோக்கில் மாநாடுகள் திட்டமிடப்பட வேண்டும். இதுவே எதிர்கால சைவ இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்ற அபிப்பிராயங்களையும், கோரிக்கைகளையும் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்த ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் முன்வைத்திருந்தார். அது உண்மைதான்.

*(கட்டுரையாளர் யாழ். கல்விப் புலத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிபவர்)*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இன்றைய தினம்

1576 - ஸ்பானிஷ் கண்டுபிடிப்பாளர் டியாகோ கார்ஸியோ டி பலாசியோ அவர்களால் கோபன் மாயன் நகர் அழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1702 - இரண்டாம் மேரியின் சகோதரி ஆன் ஸ்ருவாட் இங்கிலாந்து ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்தின் உயர் அரசியானார்.

1924 - உட்டா, கஸில்கேற் சுரங்க பேரழிவில் 172 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

1942 - இரண்டாம் உலக மகா யுத்தம் கொவாவில் ஜப்பானிய படைகளிடம் ஒல்லாந்து படைகள் சரணடைந்தன.

1957 - சுயஸ் நெருக்கடிகளுக்குப் பின், சுயஸ் கால்வாய் மீண்டும் எகிப்தால் திறக்கப்பட்டது.

1965 - வியட்நாம் போரில் 3,500 அமெரிக்க கடற்படை தாக்குதல் படையாக தரையிறங்கியது.

1979 - இறுவட்டு முதன் முதலாக பிலிப்ஸ் நிறுவனம் பொதுமக்களுக்கு இயக்கிக் காட்டப்பட்டது.

1995 - பல்கலைக்கழக அனுமதி முறைமை வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட்ட விதம் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியென பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழில் பேரணி; ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகஜர்

2004 - ஈராக் ஆட்சி சபையால் புதிய அரசியலமைப்பு ஒப்பமிடப்பட்டது.

2014 - கோலாலம்பூரிலிருந்து பீஜிங்குக்கு புறப்பட்ட மலேசிய விமானம் 370, 239 பேருடன் காணாமற் போனது.

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



# விடுகதைகள்

1. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம், கண்மூடிக் காணும் காட்சிப்படம் அது என்ன?
   - கனவு

2. மென்மையான உடம்புக் காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன் – அது என்ன?
   - நத்தை

3. மூன்றுகால் குள்ள அக்கா, பாரம் தாங்கி, நெருப்பை சுமந்து சோறு சமைப்பாள் அவள் யார்?
   - அடுப்பு

4. பட்டனைத் தட்டினால் சட்டென விரியும் – அது என்ன?
   - குடை

5. நீரிலும், நிலத்திலும் வாழ்வான், பாறைக்குள்ளும் பதுங்கி வாழ்வான் அவன் யார்?
   - தவளை

6. கையளவு உடம்புக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன் அவன் யார்?
   - பூட்டு

7. மேகத்தின் பிள்ளை அது, தாகத்தின் நண்பன் அது என்ன?
   - மழை

8. முற்றத்தில் நடக்கும் மூலையில் படுப்பான் அவன் யார்?
   - துடைப்பம்

9. முன்னும்பின்னும்போவான், ஒற்றைக்காலிலே நிற்பான் யார் அவன்?
   - கதவு

10. மேல் பலகை, கீழ் பலகை நடுவில் நெளி பாம்பு அது என்ன?
    - நாக்கு

# உணவளிக்கும் தேனீக்கள்

ஐப்பசியில் அடைமழை அன்று பெய்யவில்லை. கொஞ்சம் வாய்ப்பு கிடைத்தால் போதுமே! பசுமைப் பாடசாலைச் சிறுவர்கள் வெளியே ஆட்டம் போட்டார்கள். இதமான வெப்பத்துடன் இளமஞ்சள் வெயில். அந்த மஞ்சள் நிறத்துக்குப் போட்டியாகப் பூத்திருக்கும் பீர்க்கம் பூக்கள். அந்தப் பூக்களில் தேன் உறிஞ்சும் தேனீக்கள். தட்டாமாலைச் சுற்றிக்கொண்டிருந்த பாடினி தேனீக்களைப் பார்த்து விட்டு அதனிடம் "தேனீக் களே! மழைக் காலத்தில் உங்களுக்கு சிரமம் தானே?" எனக் கேட்டாள்.

ஒரு தேனீ பதில் சொன்னது. "நீ சொல்வது உண்மை தான் பாப்பா. இருந்தாலும் தினமும் ஆயிரம் பூக்களுக்கு மேல் தேனெடுத்து, எங்களுக்குப் பழகிவிட்டதே?" என்றது.

'ஆயிரம் பூக்களா?!' என்று வியந்தபடியே அனைத்து சிறுவர்களும் குழுமினார்கள்.

தொடர்ந்து தேனீ பேசியது.

"இதற்கே பாராட்டுகிறீர்களே, தேனீக்கள் அனைத்தும் ஒரு கிலோ தேன் சேமிக்க அலையும் தொலைவு எவ்வளவு தெரியுமா? அது பூமியை மூன்று முறை சுற்றி வருவதற்கு சமம்".

வியப்பில் பிளந்த வாயை, சிறுவர்கள் மூடவில்லை. "அப்படி அலைவதால் தான் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. நாங்கள் இல்லாவிட்டால் உங்களுக்குப் பல பழங்கள், பருப்புகள், காய்கறிகள், ஏன் விதைகள் கூடக் கிடைக்காது".

"எப்படி?" என்றாள் பாடினி.

"நீங்கள் உண்ணும் ஒவ்வொரு மூன்று வாய் உணவிலும், ஒரு வாய் உணவை நாங்கள் தான் கொடுக்கிறோம். அதாவது, நீங்கள் பயிர் செய்யும் 100 உணவுப் பயிர்களில் 70 பயிர்களில் நாங்கள் தான் மகரந்தச் சேர்க்கையை நடத்துகிறோம்".

"பூச்சிகளிலேயே மனிதருக்கு அதிகம் உதவும் பூச்சி நீங்கள் தானோ?"

"ஆமாம். அது மட்டுமல்ல, உலகின் முதல் இயற்கை உணவை அளித்ததும் நாங்கள் தான்"– "தெரியும். அது தேன் தானே? அது எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்று குதித்தாள் பாடினி. ஆனால், தேனீயின் முகமோ வாடியிருந்தது.

"என்ன தேனீ ரொம்ப சோகமாய் இருக்கிறாய்?" என்று கேட்டனர் சிறுவர்கள்.

"ஒன்றுமில்லை, சிறுவர்களே! நீங்கள் தான் பெரியவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் செய்யும் தவறால் எங்கள் இனமே அழியும் ஆபத்தில் உள்ளது".

"எப்படி?"

"அவர்கள் பயிர்களுக்குப் பூச்சிக்கொல்லிகளைத் தெளிப்பதால் மண் புழுக்களைப் போலவே, மனிதர்களுக்கு நன்மைச் செய்யும் பூச்சியினமான நாங்களும் பாதிக்கப்படுகிறோம். எங்கள் எண்ணிக்கை குறைந்துக்கொண்டே வருகிறது. உங்களுக்கு உணவு அளிப்பதற்காக, நீங்கள் காட்டும் நன்றி இதுதானா?"

சிறுவர்களுக்கு வெட்கமாகிவிட்டது. தேனீக்களைப் பற்றி சூழலியலாளர்கள் பலர் சுட்டிக்காட்டியதாக, அவர்களுடைய ஆசிரியர் சொன்ன ஒரு கூற்று நினைவுக்கு வந்தது. 'தேனீக்கள் உலகிலிருந்து மறைந்து விட்டால், அதன் பின்னர் நான்கே ஆண்டுகளில் மனித இனமும் உலகிலிருந்து மறைந்துவிடும்".

ஆக, மனிதர்களுக்கு இந்தத் தேனீக்களே துணை. குழந்தைகள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். நமது பெற்றோர் செய்த தவறை நாம் செய்யக் கூடாது. இனி தேனீக்களைப் பெருக்கும் வகையில் அதிகமாகத் தேன் சுரக்கும் மலர்ச் செடிகளை நட்டு வளர்ப்போம் என.

வானில் மழை மேகம் திரள்வதால் தேனீ விடைபெற்றது. சிறுவர்கள் சிந்தித்தனர். 'பிறருக்காக உழைக்கும் இந்தத் தேனீக்களுக்கு நான்கறிவு என்கிறார்கள்.

நான்கறிவு மனிதருக்கா?

இல்லை தேனீக்களுக்கா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பாவங்களை நீக்கும் மகா சிவராத்திரி

கதிரவேலு



மாதந்தோறும் அமாவாசை நாளில் இருந்து வரும் 14 ஆவது திதியன்று சிவராத்திரி அல்லது பிரதோச நாள்களாக வழிபாடு செய்யப்படுகின்றது இந்த நாளில் சிவன் கோயில்களுக்குச் சென்று ஈஸ்வரனை வழிபட்டால் மன அமைதி, வாழ்க்கையில் முன்னேற்றம், தீய சக்திகள் வேரோடு அகலுதல் போன்ற நன்மைகள் உண்டாகும்.

மாசி மாதத்தில் அமாவா சையில் இருந்து 14ஆவது சதுர்த்தசி யன்று வருவதே மகா சிவராத்திரியாகும். இந்த நாளின் சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்த புராணம், பத்ம புராணம், அக்னி புராணம் போன்ற பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரி நாளில் விரதம் இருப்போருக்கு கிடைக்கும் மகத்துவங்கள் என்ன என்பது பற்றியும் அவற்றில் கூறப்பட்டுள்ளன.

**சிவராத்திரி வரலாறு**

மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாலேயே இந்த நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது.

பிரளய காலத்தில் பிரம்மனும், அவரால் உருவாக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்டநிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்துப் பூசை செய்தாள். நான்கு சாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூசையின் முடிவில் அம்பிகை ஈஸ் வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும் மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே - அதாவது 'சிவராத்திரி' என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள். சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் - மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை தங்களை (சிவனை)ப் பூசை செய்பவர்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும் அருள்புரியுங்கள் என்று அன்னையானவள் வேண்டினாள்.

சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே சிவராத்திரி என வழங்கப்பட்டு அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

**விரதமுறை**

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம், இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம்.

பிரம்மதேவன், திருமால், குபேரன், இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி பகவான் உள்ளிட்ட தேவர்கள் பலரும் சிவராத்திரி விரத்த்தைக் கடைப்பிடித்து உயர்ந்த நிலையை அடைந்தார்கள். பூமி தானம், தங்க தானம்,கோடிக்கணக்கான பசுக்கள் தானம், புராணங்களில் சொல்லப்பட்ட மற்றைய பல விரதங்களை நெடுங் காலம் கடை பிடிப்பது, நூறு அசுவமேத யாகம் செய்வது,பல முறை கங்கா ஸ்நானம் செய்வது ஆகிய அனைத்தையும் மேற்கொண்டாலும் ஒரு சிவராத்திரி விரதம் இருப்பதற்கு ஈடாகாது.

சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். சிவராத் திரி அன்று அதிகாலை யிலேயே எழுந்து குளித்து விட்டு, சூரிய உதயத்தின் போது காலையில் வீட்டில் செய்ய வேண்டிய பூசையை முடிக்க வேண்டும். அதன் பின் சிவன் கோவிலுக்குப் போய் முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும்.

பூசை செய்யும் இடத்தை மலர்களால் அலங்கரித்து நண்பகலில் குளித்து மாலையில் சிவ அர்ச்சனைக்கு உரிய பொருள்களோடு சிவன் கோவில் சென்று ஏற்பாடுகளைச் செய்யலாம். மாலையில் மீண்டும் குளித்து வீட்டில் சிவபூசை செய்ய வேண்டும். வீட்டிலேயே இரவின் நான்கு சாமங்களிலும் முறைப்படி பூசை செய்தலும் நலம். வில்வ இலைகளால் அர்ச்சனை செய்தல், கூடுதல் உத்தமம்.

சிந்தையில் அமைதியுடன் சிவ புராணத்தை பாடிக் கொண்டிருக்க வேண்டும். பற்றற்று இருப்பதுடன் பேராசைகளைக் கைவிட்டு பிறருக்குத் தீங்கிழைக்காமல் இருத்தல் வேண்டும்.

மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து, கையில் உருத்திராட்ச மாலையுடன் வீடுகளில் சிவபூசை செய்தோ அல்லது கோயில்களுக்குச் சென்றோ சிவனை வழிபடுதல் வேண்டும். கோயில்களிலும் சிவபூசை செய்யலாம். ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்ற சொல்லை உச்சரித்துப் பூசிக்க வேண்டும். கலச பூசையுடன் லிங்கத்தை வைத்தும் பூசை செய்யலாம். பூக்கள் மற்றும் அபிசேகப் பொருள்களைக் கோயில்களுக்கு வாங்கிக் கொடுத்தல் நலம். வில்வ இலைகளைக் கொண்டும் பூசை செய்யலாம். வில்வ இலைகளை கோயில்களுக்கும் வழங்கலாம்.

பின்னர் நைவேத்தியம் படைத்து வழிபட வேண்டும். சிவ, ருத்ர, பசுபதி, நீலகண்டா, மகேஸ்வரா, ஹரிகேசா, விரு பாக்ஷா, சாம்பு, சூலினா, உக்ரா, பீமா, மகா தேவா ஆகிய 12 பெயர்களை உச்சரித்து பூக்களால் அர்ச்சிக்க வேண்டும். கோயில்களில் பிரதட்சிணமாக வந்து சிவபெரு மானின் மூல மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்ய வேண்டும்.

அன்று இரவு நான்கு சாமங்களிலும்தூங்காமல் பூசை செய்து,மறுநாள் விடியற் காலையில் நீராடி, காலை அனுஷ்டானத்துடன் உச்சிக்கால அனுஷ்டானத்தையும் அப்போதே முடிக்க வேண்டும். அதன் பின் தீட்சை தந்த குருவைப் பூஜை செய்து விட்டு, உடைகள் மற்றும் உணவை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும்விதமாக உணவு உண்ண வேண்டும்.

சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு சாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்கள்ள உண்ணலாம்.

பூசை செய்ய முடியாதவர்கள் நான்கு ஜாமத்திலும் சிவபுராணம் கேட்டும்,சிவத் துதிகளைச் சொல்லியும், சிவன் கோயிலுக்குச் சென்று இரவைக் கழித்தும் சிவனை வழிபடலாம். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். பிறகு மாலை நெருங்கியதும் மாலை அனுஷ்டானங்களை முடித்து, அன்றிரவும் எதுவும் உண்ணாமல் இருந்து உறங்க வேண்டும்.

சிவ்ராத்திரி தினத்தன்று முழு உபவாசத்தைக் கடைபிடித்தால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என்பது நம்பிக்கை. தவிர மகா சிவராத்திரி விரதம் இருப்போருக்கு நற்கதி கிடைப்பதுடன் இப்பூத உடல் மடிந்த பின் சொர்க்கத்தையும் இறைவன் அளிப்பான் என்பதே பின்னணித் தத்துவம்.

**சிவராத்திரி வகைகள்**

[illegible] தேய்பிறைச் சதுர்த்தசி அன்று வருவது மகா சிவராத்திரியாகும்.

சூரிய உதயம் முதல் இரவு முழுவதும் (பகல் இரவு 60 நாழிகையும்) அமாவாசை இருந்தால், அன்று யோக சிவராத்திரி. திங்கட்கிழமை அன்று சூரிய அஸ்தமனம் முதல், அன்றிரவு நான்கு ஜாமமும் தேய்பிறைச் சதுர்த்தசி இருந்தால் அன்றைய தினமும் யோக சிவராத்திரி. திங்கட்கிழமை அன்று இரவு நான்காம் ஜாமத்தில், அமாவாசை அரை நாழிகை இருந்தாலும் யோக சிவராத்திரியாகும். திங்கட்கிழமை இரவு நான்காம் ஜாமத்தில், தேய்பிறைச் சதுர்த்தசி அரை நாழிகை இருந்தாலும் யோக சிவராத்திரியாகிறது. இப்படி யோக சிவராத்திரி திங்கட்கிழமை சம்பந்தமாய் வருவது நான்கு வகைப்படும். ஒரு யோக சிவராத்திரி விரதம் இருந்தால் அது மூன்று கோடி மற்றைய சிவராத்திரி விரதம் இருந்த பலனைத் தரும் என்பது நம்பிக்கை.

பன்னிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறைச் சதுர்த்தசி 12, வளர்பிறைச் சதுர்த்தசி 12. இந்த இருபத்து நான்கும் நித்திய சிவராத்திரியாகும்.

தை மாதம் தேய் பிறைப் பிரதமை தொடங்கிப் பதின்மூன்று நாள் வரையில்,நியமத்துடன் ஒரு பொழுது உணவு உண்டு பதினான்காவது நாளான சதுர்த்தசி யன்று விதிப்படி விரதம் இருப்பது பட்ச சிவராத்திரி ஆகும்.

மார்கழி மாத வளர்பிறைச் சதுர்த்தசி திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடி வந்தாலும் மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமையுடனோ அல்லது ஞாயிற்றுக் கிழமையுடனோ கூடி வந்தாலும் அந்த ஒரு சிவராத்திரி, மூன்று கோடி சிவ ராத்திரிகளுக்கு இணையானதாகும் என்று அறியப்படுகிறது. சிவராத்திரியில் பூசை செய்தால் கிடைக் கும் பலன்களுக்குச் சான்றாக பழங் காலக் கதை ஒன்றும் கூறப்படுகிறது.

ஒருமுறை சுந்தர சேனகன் என்ற மன்னன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வெகுநேரமாகியும் வேட்டையாட விலங்குகள் கிடைக்காததால் அன்றைய தினம் இரவில் காட்டிலேயே தங்குவதற்கு முடிவு செய்தான். ஒரு மரத்தின் மேல் ஏறுவதற்கு முன் அந்த இடத்தைச் சுத்தம் செய்வதற்காக தண்ணீர் எடுத்து வந்து ஊற்றினான். மரத்தின் மீது ஏறி தூங்கினான்.

அந்த மரம் வில்வ மரம் என்றோ, தான் ஊற்றிய தண்ணீர் கீழே உள்ள சிவலிங்கத்துக்கு அபிசேகமாக அமைந்தது என்றோ சுந்தர சேனகனுக்குத் தெரியாது. நள்ளிரவில் காட்டு மிருகங்களின் சத்தம் கேட்டுதிடுக்கிட்டு விழித்த மன்னன்,வில்வ மரத்தை சற்றே கெட்டியாகப் பிடித்து குலுக்கியதால் அந்த மரம் ஆடியது. அதிலிருந்து வில்வ இலைகள் கீழே உள்ள லிங்கத்தின் மீது அர்ச்சனை போல விழுந்தன. அன்றைய தினம் மகா சிவராத்திரியாக அமைந்தது.

மன்னன் தான் அறியாமலேயே சிவ பூசை செய்து உள்ளான். பின்னர் அடுத்த நாள் வீடு திரும்பிய சுந்தர சேனகன் சிறிது காலத்தில் இறந்துபோனான்.

மன்னனை எமதர்மன் நரகத்திற்குக் கொண்டு சென்றான். ஆனால் சிவபெருமானின் ஆள்கள் சுந்தர சேனகனை எமதர்மனிடம் இருந்து மீட்டு சொர்க்கலோகத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சிவபெருமான் மன்னனைத் தன்னுடன் வைத்துக் கொண்டாராம்.

மகா சிவராத்திரி என்று தெரியாமல் பூசை செய்த மன்னனுக்கே இந்த அளவு சிவபெருமானின் அனுக்கிரகம் கிடைத்தது என்றால், முறையாக விரதம் இருந்து மகா சிவராத்திரி நாளில் பூசை செய்வோர் எந்த அளவுக்கு பேறு பெறுவர் என்பதை கூறத் தேவையில்லை.

இன்று சிவராத்திரி விரதம் இருந்தால் 3 கோடி சிவ ராத்திரிக்கு விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. சைவ மதத்தில் சிவனை வேண்டியிருக்கும் விரதங்களில், மகா சிவராத்திரி விரதமே அதிக சிறப்புடையது. சிவராத்திரி விரதம், உத்தமம், மத்தியமம், அதமம் என மூன்று வகைப்படும்.

சிவராத்திரி அன்று இரவில், நிசியில் சதுர்தசி திதி இருப்பது முக்கியம் என பல ஆகமங்கள் கூறுகின்றன. சிவராத்திரி அன்று திரியோதசி திதியும், அன்று இரவே சதுர்தசி திதியும் இருப்பது உத்தம சிவராத்திரி என்பதாகும்.

அந்த நாள் இந்த ஆண்டு மார்ச் 7ஆம் திகதி வருகிறது. அன்று திரியோதசி திதி பகலிலும், சதுர்தசி திதி இரவு முழுவதும் மறுநாள் காலை 9 மணி வரையிலும் இருப்பதால் இது உத்தம சிவராத்திரி ஆகும். உத்தரகாரண ஆகமத்தில் உள்ளபடி திங்கட்கிழமையும், சிவ ராத்திரியும் ஒன்று சேர்ந்தால் அது 3 கோடி சிவராத்திரிக்குச் சமமாகும்.

இந்த ஆண்டு மார்ச் 7ஆம் திகதி திங்கட்கிழமை, சதுர்தசி திதியும் சேர்ந்துள்ளதால் 3 கோடி சிவராத்திரி விரதம் இருந்தால் என்ன பலனோ, அந்தப் பலன், அன்று விரதம் இருந்தால் கிடைக்கும். அனைவரும் அவரவர் வழக்கப்படி இந்தச் சிவராத்திரி விரத நாளில், கோவிலுக்குச் சென்று வழிபடுவதும், இரவு முழுவதும் கண் விழித்து, சிவ நாமத்தை உச்சரித்தும், சகல சௌபாக்கியங்களையும் அடைய வேண் டும் என்று காஞ்சிபுரம், கைலாச நாதர் கோவில் மற்றும் ஏகாம்பரநாதர் கோவில் ஸ்தானி கர் ராஜப்பா குருக்கள் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மெத்த விட்டான்** @HAJAMYDEENNKS

வசதி என்பது அவரவர் மன நிலையைப் பொறுத்து மாறுபடுகிறது... ஏழைகளுக்கு இரண்டு மாற்றுத் துணிகள் அதிகமாக இருப்பது கூட வசதிதான்...!

கிறுக்கன் follows



**ராஜ்மோகன்...** @billumohan83

பெண்கள் அதிகமாக பேசினா ''வாயாடி'' ஆண்கள் அதிகமாக பேசினா வாயுள்ள பிள்ளை பிழைச்சிக்குவான் ஆணாதிக்க சமூகம்!




# ஆங்கிலத்தில் கால்பதிக்கும் அபிநயா



சமுத்திரக்கனி இயக்கத்தில் வெளியாகி பெரும் வெற்றிபெற்ற "நாடோடிகள்" படம் மூலம் நடிகையாக அறிமுகமானார் அபிநயா. இந்தப்படத்தில் சசிக்குமாரின் தங்கையாக நடித்து பிரபலமாகப் பேசப்பட்ட புதுமுக நடிகையான அபிநயா தொடர்ந்தும் சசிக்குமார் இயக்கத்தில் வெளியான "ஈசன்" படத்தில் நடித்ததன் மூலம் திரையுலகில் கால்பதித்தார்.

தெலுங்கு, தமிழ், மலையாளப் படங்களில் நடித்துவரும் மாற்றுத்திறனாளியான இவர் தற்போது "அடிடா மேளம்" என்ற நகைச்சுவை படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் அபிநயாவுக்கு ஹொலிவூட்டில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பிரபல ஹொலிவூட் இயக்குநரும், கின்னஸ் சாதனையாளருமான ரூபம் சர்மா இயக்கவுள்ள "தி லிட்டில் பிங்கர்" என்ற ஆங் கிலப் படத்தில் மொத்தம் 56 மாற்றுத் திறனாளிகள் நடிக்கவுள்ளதாகவும், அவர்களில் அபிநயாவும் ஒருவர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மாற்றுத்திறனாளிகள் தங்கள் ஊனத்தை பெரிதாகக் கருதாமல் சாதனை செய்வதை விளக்குவதே இந்தப் படத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது. இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்த வருட இறுதியில் தொடங்கவுள்ளதாகவும், தற்போது படத்தில் பணியாற்ற இருக்கும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கான தேர்வு நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நேர்மை குணத்துடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். பெண்கள், கணவரின் அன்புக்குரியவராவர்.

**இடபம்:** குடும்ப சூழ்நிலையில் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனத்தைச் செலுத்தவும்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பெண்கள், செலவுக்கு சேமிப்பைப் பயன்படுத்துவர். வாகன போக்குவரத்தில் கவனம் வேண்டும்.

**கடகம்:** உற்சாகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். குடும்பத்தில் சுப விடயப் பேச்சு நடக்கும். பிள்ளைகள், பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர்.

**சிங்கம்:** சொந்த நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கு புதிய முயற்சியில் ஈடுபடுவது அவசியம். மிதமான இலாபம் கிடைக்கும். உணவு ஒவ்வாமையால் அஜீரணம் ஏற்படலாம்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

**துலாம்:** உங்களின் செயற்திறன் கண்டு, பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். பணியா ளர்கள், பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** சிறிய விடயத்தில் அதிக கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு அவசியம். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பெண்கள் கௌரவத்துக்காகப் பணம் செலவழிக்க நேரிடலாம்.

**மகரம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். வருமானம் உயரும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கும்பம்:** எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள், சகோதரர்களிடம் உதவி கேட்டுப் பெறுவர். ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | 9 | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 1 | 3 | 6 | 8 | 2 | 5 |
| 1 | 3 | 2 | 7 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 8 | 5 | 6 | 2 | 4 | 9 | 1 | 3 | 7 |
| 4 | 9 | 5 | 8 | 2 | 1 | 7 | 6 | 3 |
| 6 | 2 | 3 | 5 | 7 | 4 | 9 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 6 | 9 | 3 | 5 | 4 | 2 |
| 3 | 8 | 1 | 9 | 6 | 7 | 2 | 5 | 4 |
| 2 | 4 | 9 | 3 | 8 | 5 | 6 | 7 | 1 |
| 5 | 6 | 7 | 4 | 1 | 2 | 3 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).


இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பஸை விட்டு இறங்கியதும் ஓட்டோ வேணுமா என்னு கேட்டார் ஓட்டோகாரர்...



ஓட்டோவை என்கிட்ட கொடுத்துட்டு

காதலர் தினத்தில் குழப்பம் விளைவித்தேன். காதலர்களை கலாய்த்தேன். குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன் இப்படியெல்லாம்



ஏன்..
அவள் செல்லுக்கு ரிசார்ஜ் போட ஓடினேன்...
அவளுக்கு பசித்தால் KFC, Pizza hut க்கு ஓடினேன்...
அவளுக்கு டிரைவர் ஆகி தினமும் பைக் ஓடினேன்...
கடைசியில் கந்து வட்டிக்கு கடன் வாங்கி
ஊரை விட்டு ஓடினேன்..
ஆனால் அவளோ அமெரிக்கா மாப்பிளையுடன் ஓடினாள்...
"ஓடினேன் ஓடினேன் மதுக்கடையின் ஓரத்துக்கே ஓடினேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 650 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 600 | 450 | 400 | 500 | 450 | 400 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 450 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 350 | 400 | – | – | 200 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 300 | 250 | 350 |
| நகரை | 150 | 300 | – | 250 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 250 | 150 | 250 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 120 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 280 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 400 | 250 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 350 | 200 | 200 |




## மரக்கறி வெட்டும் சாதனம்

மரக்கறி வெட்டும் சாதனம் அறிமுகமாகியுள்ளது. மின்சாரத்தில் இயங்கும் இந்தச் சாதனம் சில நொடிகளில் மரக்கறி வகைகளை சிறிய துண்டுகளாகவும், அழகாகவும் நறுக்க வல்லது. இதன் விலை 3,300 ரூபாவில் இருந்து 4,000 ரூபா வரை யாகும்.

## பொரிவிளாங்காய் உருண்டை



### தேவையானவை:

கடலைப் பருப்பு ஒரு சுண்டு
பயற்றம் பருப்பு - ஒரு சுண்டு
உளுந்தம் பருப்பு - கால் சுண்டு
சம்பா கோதுமை - ஒரு சுண்டு
அரிசி - முக்கால் சுண்டு
தேங்காய் மூடி - ஒன்று
சுக்கு - சிறு துண்டு
ஏலக்காய் - பதினைந்து
நெய் - ஒரு கரண்டி
வெல்லம் - (தூள் செய்தது)

### செய்முறை:

- தேங்காயை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொண்டு ஏலக்காயை உரித்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.
- அடுப்பில் சட்டியை வைத்து பருப்புகள், கோதுமை, அரிசி, தேங்காய்த் துண்டுகள் எல்லாவற்றையும் வறுத்து மாவாக அரைத்துக் கொள்ளவும்.
- சுக்கை லேசாக சுட்டுப் பொடி செய்தும், ஏலக்காயையும் பொடி செய்தும் சேர்க்கவும்.
- தூள் செய்த வெல்லத்தை பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி சூடாக்கி இளம் பாகு பதத்தில் வந்ததும், மாவைக் கொட்டி கம்பால் கிளறி விடவும்.
- நன்கு கலந்ததும், கை பொறுக்கும் சூட்டில் கையளவு மாவை எடுத்து உருண்டைகளாகப் பிடிக்கவும்.
- இதில் வறுத்த கடலைப் பருப்பும், முந்திரிப் பருப்பும் கூட போட்டுப் பிடிக்கலாம். மேலும் சுவையாக இருக்கும்.

## சமையலறை இரகசியம்

- பருப்பு போட்டு செய்யும் சமையல் நம்மூரில் அதிகம். அதனை குக்கரில் போட்டு விட்டால் எளிதில் வெந்து விடும்.
- குக்கர் இல்லாமல் பாத்திரத்தில் வேக வைக்கும்போது அதிக நேரம் எடுக்கும். அதனை சமாளிக்க, பருப்பு வேக வைக்கும் போது ஒரு காய்ந்த மிளகாயை கிள்ளிப் போடவும். சீக்கிரம் வெந்து விடும்.
- வெண்ணெயை முட்டையில் கலந்து நன்றாக கலக்கி ஒம்லெட் செய்தால் ருசியாக இருக்கும்.
- குழம்பில் உப்பு கூடிவிட்டால் சிறு வாழைத்தண்டு அல்லது உருளை சாதத்தை போட்டு கொதித்ததும் எடுத்து விடவும்.
- இறைச்சி போன்ற அசைவ உணவுகளை அரைக்க மிக்ஸி பயன்படுத்தப்பட்டால் அதில் அசைவ வாடை இருக்கும்.
- அதனைப் போக்க மிக்ஸி ஜாரில் 2 பாண் துண்டுகளைப் போட்டு அதனுடன் சிட்டிகை மஞ்சள் தூளையும் போட்டு அரையுங்கள். பிசுக்கும் வாடையும் போய்விடும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 25 | 60 | 40 | 40 | 20 | 60 | 25 | 30 |
| கத்தரி | 80 | 80 | 100 | 80 | 80–100 | 60 | 70 | 45 |
| கரட் | 100 | 160 | 100 | 140 | 100–120 | 160 | 120 | 130 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 80 | 140 | 60 | 70 | 80 |
| பாகல் | 100 | 80 | 70 | 100 | 140 | 140 | 70 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 70 | 60 | 60 | 140 | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 70 | 70 | 80 | 70 | 100 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 70 | 80 | 80 | 100 | 70 | 60 |
| பூசணி | 70 | 50 | 50 | 50 | 40 | 120 | 35 | 40 |
| தக்காளி | 30 | 40 | 35 | 30 | 40 | 30 | 25 | 30 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 60 | 40 | 35 | 35 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 20 | 30 | 10 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 150 | 140 | 120 | 140 | 200 | 110 | 130 |
| புடோல் | 60 | 80 | 40 | 50 | 60 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 60 | 60 | 60 | 60 | 80 | 35 | 45 |
| வெண்டி | 100 | 80 | 50 | 60 | 100 | 80 | 70 | 60 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 120 | 140 | 160 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 110 | 100 | 120 | 120 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 75 | 80 | 70 | 80 | 65 | 100–120 |
| தேசிக்காய் | 60 | 60 | 100 | 50 | 60 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 150 | 120 | 140 | 140 | 200 | 120 | 120 |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 140 | 160 | 150 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 300 | 400 | 200 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 02.50 | – |

### நாளை

மாசி-25
செவ்வாய்க்கிழமை
08.03.2016
திதி: சதுர்த்தசி
மு.ப.10.22 வரை
நட்சத்திரம்: சதயம்
ந.இ.12.02 வரை
ராகுகாலம்:
03.24-04.54 வரை
சுபநேரம்:
10.54-12.24 வரை
அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிகரமான சமையலை வழங்குகின்றது அபான்ஸ்

பைரெக்ஸ் தனது அல்ட்ரா டச் சமையல் சாதனங்கள் மற்றும் பேக் செய்வதற்கான சாதனங்களை அறிமுகப் படுத்தும் வரையில் நவீன சமையலை இலகுவாக செய்வதென்பது சௌகரியமான விடயமாகக் காணப்படவில்லை. நேரடிச் சுவாலை, பரிமாறுதல், உறையச்செய்தல், மீள் சூடாக்குதல் மற்றும் மீண்டும் பறிமாறுதலுக்கு ஏற்ற தன்மை போன்றவற்றை புதுமைமிக்க வின்ஸ் மற்றும் கோர்னிங் வகைகளில் காண முடியும். பல்வகை சமையல் செயன்முறைகளை ஒரே பாத்திரத்தினூடாகச் செய்ய முடிவதனால் பெண்கள் கழுவுதல் மற்றும் சுத்தம் செய்தல்போன்றவற்றிற்காக அதிகளவாகச்செலவிடும்நேரத்தை விரயம் செய்யாது குறைக்க முடியும். அவன் மற்றும் மைக்ரோவேவ் அவனிலான சமையலைப்போன்று, பைரெக்ஸ் பேக் செய்யும் சாதனங்களானது பேக்கிங் தேவைகளுக்கான முன்னணித் தெரிவாகக் காணப்படுவதோடு, வெப்ப எதிர்ப்பு கிளாஸால் தயாரிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான வடிவமைப்புகள் மற்றும் ஸ்டைலோடு மேலதிக சிறப்பம்சமாகக் காணப்படும் கோர்னிங் சமையல் சாதனங்கள் மேசைக்குப் பொருந்தும் விதத்திலான அழகிய வடிவமைப்பையும் வனப்பையும் தருகின்றன கொரெல் மேசை சாதனங்கள். கொரெல்லானது சிப் மற்றும்உடைதல்எதிர்ப்புசெரமிக்கினால்தயாரிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக அபான்ஸ் (பிரைவேற்) லிமிட் ஆனது இலங்கையின் அதி நம்பகமான சமையல் சாதனங்கள் மற்றும் சமையலறைக்கான சாதனங்களின் விற்பனையாளர் எனும் ரீதியில் பரந்தளவான அங்கீகாரத்தைக் கொண்டுள்ளது. உலகத் தரம் வாய்ந்த வர்த்தக நாமங்களான அமெரிக்காவின் பைரெக்ஸ், வின்ஸ், கோர்னிங் சாதனங்கள் மற்றும் கொரெல் ஆகியவற்றின் குறியீட்டிடமாக இலங்கையில் திகழ்வதோடு, சிறந்த சமையல் அனுபவத்தை வழங்குவதில் ஒருங்கிணைந்த செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றது.

புதுமை மிக்க ஸ்டைல் மற்றும் நேர்த்தியுடன் சிறந்த சமையல் செயற்திறன் மற்றும் பேக்கிங்கினையும் வழங்குவதன் மூலமாக பேக் செய்யும் சாதனத்தோடு பைரெக்சானது சிறப்பான விதத்தில் தனது வெளித்தோற்றத்தையும் மாற்றிக் கொண்டுள்ளது. பைரெக்ஸ் பேக்கிங் செய்யும் செயல்முறையை கண்காணிக்கக் கூடிய விதத்தில் காணப்படும் வசதியானது உயர் பிரபல்யம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அனைத்து பைரெக்ஸ் உற்பத்திகளும் ப்ரீர்கள், மைக்ரோவேவ் அவன்கள் மற்றும் டிஸ்வொஸ்ஸர்களில் பாதுகாப்பாக உபயோகப்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள சாதனங்கள் அனைத்தும் சமையல் மற்றும் கழுவுதல் போன்ற நேரங்களில், பயன்படுத்துபவருக்கு இலகுவானதும் அதிக சூட்டின் போது எரிபடுவதைத் தடுக்கும் விதத்திலான கைப்பிடியையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுயர் நீடித்ததன்மை வாய்ந்த உற்பத்தி பரந்த வகையிலான வடிவங்கள் மற்றும் அளவுகளி லிருந்து கறை மற்றும் துர்நாற்றம் தடுப்பைக் கொண்டுள்ளதுடன் வட்ட வடிவ கிண்ணம், செவ்வக வடிவ தட்டுகளையும் வழங்குகின்றது.



இதே போல் வின் சாதனங்களும் சமையலறையில் பல்வகை செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாகவும், குறிப்பாக நீர் நிறைந்த உணவுகளைச் சமைப்பதற்கும் மிக உகந்ததாகக் காணப்படுகின்றது.சிறிது தாமதப்படுத்தி சமையல் செய்யும் சந்தர்ப்பங்களில் சிறந்த வித்தில் வெப்ப தடுப்பினை மேற்கொள்ளவும் ஆற்றல் செயல் திறன் நிறைந்ததாகக் காணப்படுவதிலும் பிரபல்யம் பெற்றதாக வின் சாதனங்கள் காணப்படுகின்றன. வின் சாதனங்கள் நேரடி வெப்பம், குளிர்சாதனப் பெட்டிகள், ப்ரீசர்ஸ், அவன்ஸ், மைக்ரோவேவ்ஸ், ஸ்டவ்டொப்ஸ், ஹலோகன்ஸ் மற்றும் டிஸ்வொஸ்ஸர்ஸ் போன்றவற்றுக்கு மிக பொருத்தமானதாக காணப்படும். அழகான வடிவமைப்புகளை உடையதாக காணப்படுவதால் இதனை பாவனைக்குட்படுத்துபவர்கள் சமைத்த உடனேயே பரிமாறவும் முடியும். எல்லா சாதனங்களிலும் அதிக வெப்பத்தைக்கொண்டும் சமைக்க முடியும் அதே சாதனத்தில் குறைந்தளவான வெப்பத்தை ஏற்படுத்திச் சமைக்கவும் ஏற்ற அளவுகளை கொண்டுள்ளது. துருப்பிடிக்காத்தன்மை, துர்நாற்றத்தை தடுக்கும் தன்மை, சமையல் செயல்முறைகளை இலகுவாக அவதானிக்கக் கூடிய தன்மை என்பன இச் சாதனத்தின் சிறப்பம்சங்களாகும்.

கோர்னிங் சாதனங்களானது அதன் வெவ்வேறு செயல்திறன் மற்றும் நேர்த்தி என்பனவற்றால் அனேக வருடங்களாக வாடிக்கையாளர்களைக் கவரும் சாதனமாகத் திகழ்கின்றது. இவ்வுற்பத்தியானது முக்கிய மாக ஆசியா சார்ந்த சமையலை மேற்கொள்ளும் விதமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் சிறப்பம்சங்களில் மற்றொன்று ஸ்டவ் அல்லது மைக்ரோவேவ் போன்ற நேரடி வெப்பம் வெளியேறும் பொருள்களினுள்ளும் வைக்க முடியும் அதேநேரம் அதிக குளிரை வெளியிடும் குளிர்சாதனப்பெட்டிக்குள்ளும் வைக்கக் கூடிய வித்தில் விரைவான சீதோஷ்ண நிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்க கூடிய விதத்தில் காணப்படுகின்றமையாகும். கோர்னிங் சாதனங்கள் உயர் நீடித்த தன்மை மற்றும் பல வருடங்களான பரந்தளவாக உபயோகப்படுத்திய பின்னரும் அதன் கவர்ச்சிகரமான தோற்ற பராமரிப்பு என்பனவே பலரும் விரும்புவதற்கான காரணங்களாக அமைகின்றன. நிறங்களின் வகைகள் மற்றும் வெவ்வேறு வடிவங்களினாலான வேலைப்பாடுகள் மற்றும் அளவுகள் என்பனவற்றில் காணப்படுவதால் கொள்வனவாளர்களுக்கு பிடித்த நிறத்தில் மற்றும் வடிவமைப்பில் விநியோகம் செய்ய இலகுவாகக் காணப்படுகின்றது.

தனித்துவமான வடிவமைப்புகளையுடைய கோர்னிங் வெயார் சமையல் சாதனம் திருப்திகரமான உணவு அனுபவத்தை வழங்குகின்றது. நாளாந்த உபயோகத்தின் போது ஏற்படும் கறைகள், உடையக்கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் சிதைவுகள் என்பனவற்றிலிருந்து பாதுகாப்பு அம்சங்களுடன் குறைந்தளவான பாரத்தை உடையதாகவும் காணப்படுகின்றது. உறுதித்தன்மை மற்றும் நீடித்த தன்மை என்பனவே கொரலினை உலகளாவிய ரீதியிலான பிரபல்யம் பெற்ற உற்பத்தியாக நிலைக்கச்செய்துள்ளது.

பல்வகை நிறங்கள் மற்றும் வித்தியாசமான வடிவமைப்புடனான உணவு சாதனங்கள் மறக்க முடியாத உணவு அனுபவத்தை வழங்குகின்றன. அத்தோடு, இதன் சுகாதாரத் தன்மையை ஆராயும் போது, உணவு துகள்கள் தேக்கி வைத்தல், துர்நாற்றம் மற்றும் கறை படிதல் என்பவற்றிலிருந்தான பாதுகாப்பை வழங்கும் பொருட்டு துகள்கள் தங்காத அமைப்பைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அது மைக்ரோவேவ் மற்றும் டிஸ்வொஸ்ஸர்களின் உபயோகத்திற்கு பாதுகாப்பு வழங்கக்கூடியது, இதனால்தான் குறுகிய காலத்தில் தயாரித்தல், சமைத்தல் மற்றும் கழுவுதல் போன்றவற்றில்செயல்திறன்மிக்க நேரத்தை ஏற்படுத்துகின்றது. இச்சாதனம் குறைந்தளவான பாரமுடையதாக வடிவமைக்கப்பட்டிருப்பதால் வீட்டின் உட்புறத்தில் நேரத்தியாக மற்றும் சீராக வைத்திருக்க கூடியதாகவும், இலகுவாக செயற்படுத்தக்கூடிய விதத்திலும் காணப்படுகின்றது.

வெவ்வேறுப்பட்ட செயற்பாடுகளையும் நீடித்த தன்மையையும் இச்சாதனம் கொண்டுள்ளமையால் எந்தவொரு தொந்தரவும் அற்ற இலகு உபயோகத்தை இச்சாதனம் ஏற்படுத்துகின்றது.ஏனைய பொருள்களோடு ஒப்பிடும்போது அச்சாதனத்தின் உடையும் தன்மை யானது மிக மிக குறைவு என்றே கூறுதல் வேண்டும். கொள்வனவு செய்வோர் மேலதிகமான எந்தவொரு பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் மேற்கொள்ளாது உபயோகிக்க முடியும். காரணம் என்னவென்றால் இச்சாதனமானது வடிவமைக் கப்படும் போதே பாதுகாப்பு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளமையே.

இச்சாதனத்தை நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.மேலும் அபான்ஸ் எலைட் காட்சியறையில் நடைபெற்ற சமையல் செயல்விளக்க நிகழ்வில் நேரடியாக இச்சாதனத்தின் சிறப்புத் தன்மைகள் செயல்முறைப்படுத்திக்காட்டப்பட்டன. இலங்கையில் வீட்டுச்சாதனங்களுக்கான முக்கிய நாமமாக அபான்ஸ் விளங்குவதோடு, தொடர்ச்சி யாக சிறந்த தரம் வாய்ந்த பொருள்கள் மற்றும்வாடிக்கையாளர்சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழ்கின்றது. இலங்கையில் வீட்டுச்சாதனங்களுக்கு முன்னோடியாகவும் பிரத்தியேக விநியோகஸ்தராகவும் அபான்ஸ் திகழ்வதால் உங்கள் வீட்டைப் பூரணப்படுத்த உலகின் முதல் தர உற்பத்திகளை மிகக் கவனமாகத் தெரிவுசெய்து உங்கள் தேவைக்கேற்ப வழங் குகின்றது.பண்டிகைக்காலம் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் அபான்ஸிலிருந்து நீங்கள் கொள்வனவு செய்யும் வீட்டுச்சாதனங்களுக்கு 30% விலைக்கழிவும் உண்டு. (தி)

வணிகம்

# நுட்பம்



## தண்ணீரில் நீந்தும் கலக்ஸி

சாம்சுங் கலக்ஸி எஸ் 7 மற்றும் சாம்சுங் கலக்ஸி எஸ் 7 எட்ஜ் ஆகிய இரண்டு கைபேசிகளும் தண்ணீரில் விழுந்தாலும் எவ்வித தொழில்நுட்ப பிரச்சினைகளும் இன்றிச் செயற்படும் என்பதற்கான சோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

சாம்சுங் கலக்ஸி எஸ் 7 கைபேசியை ஒரு கிண்ணத்தில் தண்ணீருக்குள் வைத்துவிட்டு சில நிமிடங்கள் கழித்து அது செயற்படுகிறதா என்பது சோதனை செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நீச்சல் குளத்துக்குள் நீந்த விட்டு சோதனை செய்யப்பட்டது. இந்தக் காணொலிகள் தற்போது வெளியிடப் பட்டுள்ளன.

## பிளக்பெரியின் மெசஞ்சர்

இந்த ஆண்டோடு பிளாக்பெரி தொடுதிரைக் கைபேசி ஆதரவை விலக்கிக் கொள்வதாக வாட்ஸ்அப் நிறுவனம் அறிவித்திருந்ததையடுத்து பிளாக்பெரி நிறுவனம் தனது மெசேஜிங் செயலியான பிபிஎம்ஐ மேம்படுத்த ஆரம்பித்துள்ளது.

பிளாக்பெரியை பயன்படுத்துவோர் வாட்ஸ் அப்பைப் பயன்படுத்த முடியாத சூழல் உருவாகிவிடும் என்ற காரணத்தால், இதை கருத்தில் கொண்டு, பிளாக்பெரி நிறுவனம் தனது மெசேஜிங் சேவை அளிக்கும் செயலியான பிபிஎம்மை மேம்படுத்த ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது.



அதில் பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் மேம்படுத்தப்படும் என்றும், பயனர்களை கவரும் வண்ணம் வடிவமைக்கப்படும் என்றும் பிளாக்பெரி தனது வலைப்பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

பிளாக்பெரி மெசஞ்சர் (பிபிஎம்) அண்ட்ரொய்ட், ஐ.ஓ.எஸ், மைக்ரோசாஃப்ட் உள்ளிட்ட செல்பேசி இயங்குதளங்களிலும் இயங்கக் கூடியதாகும்.

## பேஸ்புக்கில் நேரலை

முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக்கில் நேரலையாக காணொலியை ஒளிபரப்பும் வசதி விரைவில் உள்ளடக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்ரொய்ட் பயனாளர்கள் பெரும்பாலும் நேரலை காணொலிகளைப் பார்க்கின்றனர். இதையொட்டி நேரலை காணொலிகளை பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்யும் வசதி இந்த வாரத்துக்குள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வசதி ஏற்கனவே அமெரிக்காவில் உள்ள அப்பிள் கைபேசிகளில் வழங்கப்பட்டது. தற்போது அண்ரொய்ட்டிலும் அறிமுகம் செய்துள்ள ஃபேஸ்புக், அமெரிக்கா தவிர மேலும் 30 நாடுகளில் உள்ள பயனர்களுக்கும் விரிவுப்படுத்த திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக நேரலை வசதி அண்டிராய்ட் கைபேசிகளில் செயற்படும் விதமாக அறிமுகம் செய்யப்படும் என்று பேஸ்புக் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பேஸ்புக்கில் நியூஸ் பீட் என்றழைக்கப்படும் பதிவு ஊட்டங்களில் நேரலை காணொலிகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும் என்று பேஸ்புக் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி யோகீஸ்வரி
செல்வராசா
(லிகிதர் - கமநல சேவை
நிலையம் - கைதடி)
திதி : அபரபக்க சதுர்த்தசி
ஏழாம் ஆண்டதனில் உமை
நினைந்து ஆறாத்துயருடன்
ஆத்மா சிவன் பாதத்
திருவடி நிழலை அடைய
பிரார்த்திக்கின்றோம்

அன்னை மடியில் 28.12.1953
ஆண்டவன் திருவடியில் 23.02.2009

அன்புக்கணவர்
குடும்பத்தினர்.
கைதடி தெற்கு,
கைதடி.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கந்தன் - குணம்
(குலசேகரம்)
(ஓய்வுபெற்ற ஆய்வு கூட
உதவியாளர் - யாழ் இந்துக்
கல்லூரி)



தோற்றம் 24 . 06 . 1933
மறைவு 18 . 02 . 2015

கண்ணீரால் அர்ச்சித்தோம்!

விண்ணுலகில் நீர் புகுந்து ஓராண்டு ஆனதையா
விதி செய்த சதியாலே வித்தகரே உமையிழந்தோம்
கண்போல நீர் காத்து வளர்த்த இரு புதல்விகளும்
அவர்களது பதிகளும் பேரருடன் பேர்த்திகளும்
புண்பட்ட நெஞ்சுடனே உமையெண்ணிப் புலம்புகின்றோம்
புவியினிலே நாமுயர துணியென ஆனவரே
மண்ணுலகில் குணமென்ற பெயருடனே வாழ்ந்த நல்ல
குணக்குன்றாய் நிமிர்ந்த உம்மை அர்ச்சித்தோம் கண்ணீரால்
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

28, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
021 221 6158, 023 2250585

வைத்திய கலாநிதி
Dr.S. லோகநாதன் பாமினி குடும்பம்.
கா. ஜெயராஜசிங்கம் சாந்தினி குடும்பம்

(69778) (12,13,18,19)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
சுந்தரம்பிள்ளை
கோபாலசிங்கம்
(பிரபா ரக்ரர் உரிமையாளர்)

தோற்றம்:
18.03.1947

மறைவு
06.02.2016

கடந்த 06.02.2016 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் நலன் விசாரித்தவர்கள், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், அவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப்பிரசுரம், பத்திரிகை பதாகைகள் வாயிலாகவும் இணையத்தளம் ஊடாகவும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிநிகழ்வு மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (07.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்

"பிரபா இல்லம்"
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.
021 320 1401

(69891)(11,17,18)


# சிவனுடைய விரதங்களில் சிறந்தது மகாசிவராத்திரி

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சிவனுடைய விரதங்களில் மிகவும் சிறந்தது மகாசிவராத்திரி ஆகும். இந்த விரதமானது மாசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தசி திதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது என சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை மகாசிவராத்திரியை முன்னிட்டு சிவராத்திரி பற்றியும், சிவராத்திரி கால அபிசேக நியமங்கள் பற்றியும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிவராத்திரி விரதம், நித்ய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என 5 வகைப்படும்.

மாசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியில் நடுநிசியில் நள்ளிரவு 12 மணிக்கு இறைவன் ஜோதி வடிவமாக தோன்றிய நேரமே லிங்கோற்பவ காலமாகும்.

சிவராத்திரி தினத்தில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை முதலாம் சாமப் பூசையும், இரவு 10 மணி முதல் 12 மணி வரை 2 ஆம் சாமப்பூசையும், இரவு ஒரு மணி முதல் 3 மணி வரை 3 ஆம் சாமப் பூசையும், பின்னிரவு 4 மணி முதல் 6 மணி வரை 4 ஆம் சாமப் பூசையும் நடைபெறும்.- என்றார்.(ற-ஜ-ரி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 . 11 . 1954



இறப்பு 10 . 03 . 2015

அமரர் சிவசிவாப்பிள்ளை ரவீந்திரதாஸ்
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் தரம் 1)

ஓராண்டு போனாலும் நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனுடனும் கலந்திட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

(69745)(11,19)


## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிராம மட்ட மக்கள் சந்திப்புக்கள்

கொழும்புத்துறை, மார்ச் 7

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிராம மட்டத்திலான மூலக்கிளைக் கூட்டங்களும், மக்கள் சந்திப்புக்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாக நடைபெற்று வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை கிராம மூலக்கிளைக் கூட்டமும் கலந்துரையாடலும் மூலக்கிளைத் தலைவர் அ.சொர்னேயஸ் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.தொகுதிக் கிளையின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சொலமன் சூ.சிறில் விருந்தினராகக் கலந்துகொண்டு மூலக்கிளைகளின்செயற்பாடுகள், அவற்றை விஸ்தரித்து கட்சியைப் பலப்படுத்த வேண்டிய தேவை போன்ற கருத்துக்களைமுன்வைத்து உரையாற்றினார்.

அங்கத்தவர்களால் தெரிவிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி, மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை தீர்க்கும்வேலைவாய்ப்பு கட்சியின் ஒற்றுமை போன்ற விடயங்களைவலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலக்கிளைச்செயலாளர் எஸ்.ஜேசுதாஸால் கட்சியின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது.

(ற-ஜ-135)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் வீரவாகு
கனகசுந்தரசுவாமி
(முன்னாள் கிராமசேவையாளர் – புதுக்குடியிருப்பு,
வடமாகாண சபை உறுப்பினர் – முல்லை மாவட்டம்)

தோற்றம்
1948.06.30

மறைவு
2015.02.17



முழுநிலவு மறைந்து
ஒருவருடமானது
பழுவிலா தலைவரை நாள் பூராய்
நினைக்கின்றோம்
அழுதாலும் தீராது தொழுதுதான்
வாழ்கின்றோம்
எழு சூரியனாய் அப்பா எழுந்து வர
வேண்டும்

கடந்த வருடம் சிவராத்திரி நன்நாளில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வீரவாகு கனகசுந்தர சுவாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு எமது இல்லத்தில் இன்று (07.03.2016) திங்கட்கிழமை இடம்பெற இருக்கின்றது. இந்த நிகழ்வில் நண்பர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சக மாகாண சபை உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள், பிரதேச செயலக ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறும், அன்று இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

(#29632)(11,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk

# அனைவரையும் கவர்ந்துள்ள யாழ்.சேதனப்பயிர்ப் பண்ணை

## பெருமளவானோர் பார்வையிடுகின்றனர்

அச்சுவேலி, மார்ச் 7

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சேதனப்பயிர்ப் பண்ணையை வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், உள்ளூர் மக்களும் பெருமளவில் பார்வையிடுகின்றனர்.

அத்துடன் சேதனப்பயிர்ப் பண்ணையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு முறைகளைப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் நேரில் பார்வையிட்டு மேலதிக விளக்கங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் வருகை தரலாம். விடுமுறை தினங்களில் பார்வையிடுவதற்கு முன் அனுமதியை பெறுவது வசதியாக இருக்கும். உரிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீ பாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது-

எந்த விதமான கிருமி நாசினி மற்றும் உரப்பசளையைப் பயன்படுத்தாமல் முற்று முழுதாக எமது சூழல் சுற்றாடலில் கிடைக்கும் கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தி தாவரவளமாக்கிகள், பயிர் போசனைகள் ஹோர்மோன்கள், நொதிய ஊக்கிகள், மண்திருத்திகள் பீடை நாசினிகள் என்பவற்றை தயாரித்து பயன்படுத்துவதோடு, கலப்பு பயிர்ச்செய்கை முறையில் இயற்கைச் சூழலில் சேதனப் பயிர்ச்செய்கை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

வெப்பவலய மற்றும் ஈரவலயச் சூழலில் வளரும் சகல பயிரினங்களும் இயல்பு நிலையில் வளர்ந்து பூத்து காய்த்துள்ளன. சாதாரண பயிர்ச் செய்கையில் கிடைக்கக்கூடிய விளைச்சல் அறுவடையிலும் கூடிய விளைச்சல் அறுவடையைப் பெறக் கூடியதாகவுள்ளது.

பார்வையிடுபவர்கள் அதே மாதிரி முறைகளைக் கையாண்டு தமது வீடுகளிலும் வீட்டுத் தோட்டத்தை அமைத்துப் பராமரிப்பதோடு இரசாயனத் தாக்கம் எந்த விதமான பக்க விளைவுகளும் இல்லாத மரக்கறி வகை மற்றும் பழ வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அண்மையில் பேராதனையில் இருந்து வருகை தந்துள்ள விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் குழு சேதனப்பயிர்ப் பண்ணையைப் பார்வையிட்டு பாராட்டியதோடு, ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லும் போது யாழ். மாவட்ட பண்ணையை நேரில் பார்வையிட்டு அதே முறைகளைப் பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.- என்றார்.

(ற-ஐ-11)

# இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 7

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

தலைமன்னார் கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

றோலர் படகு மூலமாக மீன் பிடித்துக்கொண்டிருந்த போது கடல் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் இவர்களைக் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்று பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

(ற-ஐ-4,56)

## சம்பந்தனை

கருத்தறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினர், நாளை மறுதினம் புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்திக்கவுள்ளனர்.

இதன்போது, தமது குழுவின் செயற்பாடுகள் குறித்தும், இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள மக்கள் கருத்துக்ஷ்;கள் தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலை வருக்கு விளக்கமளிக்கப்படும் என்று மேற்படி குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க தெரிவித் தார்.

அத்துடன், எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவுள்ளதாகவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடனும் கலந்துரையாடுவதற்கு நேரம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து பொதுமக்களிடம் கருத்தறிவதற்கான குழுவொன்றை, அரசு நியமித்தது. இதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் அமைப்பினரும் உறுப்பினர்களுமாக 20 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறை வடையவுள்ளது. இந்த நிலையில் ஆரம்பக்கட்டப் பணிகளை அது நிறைவுசெய்துள்ளது. 25 மாவட்டங்களுக்கும் நேரில் பயணம் செய்து மக்களின் கருத்துக்களைப் பதிவு செய்ததுடன், மனுக்களையும் கையேற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாவட்டங்களுக்கு மீண்டும் குறித்த குழு செல்லவுள்ளது. அதன் பின்னர் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று, ஏப்ரல் மாத இறுதிக்குள் அது ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## 7 கிலோ

தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.சுங்கத் திணைக்களத்தினர் உறுதிப்படுத்தினர்.

இளவாலையிலிருந்து இந்தியாவுக்கு அதிவேக வலு இயந்திரம் பொருத்தப்பட்ட பிளாஸ்ரிக் படகில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் தங்க பிஸ்கட்டுக்கள் கடத்தப்பட்டுள்ளது. அவ்வாறு கடத்தப்பட்ட போது, கடற்படையினர் அவர்களைக் கைது செய்து விசாரித்துச் சோதித்தபோதே, அவர்களிடம் தங்க பிஸ்கட்டுக்கள் இருந்தமை தெரியவந்தது.

இந்த நிலையில் கடற்படையினரால், கைது செய்யப்பட்ட இருவரையும் தங்க பிஸ்கட்டுகளையும் யாழ்.சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைச் சுங்கப் பிரிவினரும் உறுதிப்படுத்தினர்.


கைது செய்யப்பட்டவர்கள் மாதகல் மற்றும் இளவாலை சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் விசாரணை தொடர்வதாகச் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

(த-வ-4)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் பரராச்சிங்கம்

தோற்றம்:1935.03.09 மறைவு:2016.03.06



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பரராசசிங்கம் நேற்று (06.03.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் மல்லிகாதேவி, அருளானந்தராசா (சுவிஸ்), சிவனேஸ்வரிதேவி (ஜேர்மனி), சுபேந்திராதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு தகப்பனும் இராஜேஸ்வரி, வளர்மதி, சிவபாலன், கிருஷ்ணராஜா, ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தவமணிதேவி, சரஸ்வதி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தனபாலசிங்கம் மற்றும் தபேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவதர்சினி - அகிலன், சிவகஜனி - கிருபாமூர்த்தி, சிவசுஜனி - பார்த்தீபன், சிவகஜந்தன், கீர்த்திக் (ஜேர்மனி), ஹரிஸ் (ஜேர்மனி), அபிர்தன் (சுவிஸ்), சிந்துஜா (டென்மார்க்), அனித்தா (டென்மார்க்), நிலானி (ஜேர்மனி), லவாணி - ஜெயந்தன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற ஆர்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் குகேந்தினி, திவ்யா, விதுஜா, தீபிகா, பிரவீன், நிதுஷன், அபிநயன், தனுசியன் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் பிள்ளையான் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வசாவிளான். (69899)(15.17) தகவல்: குடும்பத்தினர்.

# வெப்பமான காலநிலை தொடரும்

நாட்டில் தற்போது காணப்படும் வறண்ட - வெப்பமான காலநிலை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் வாரங்களில் பருவபெயர்ச்சி காலநிலை நிலவுவதால், இதன்போது மாலை நேரங்களில் நாட்டில் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது என்று திணைக்கள அதிகாரி மலித் பிரனாந்து தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் வறட்சியான - வெப்ப காலநிலையால் இரத்தினபுரி மாவட்டத்தில் அதி கூடிய வெப்பநிலை 36 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் 31 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதுடன், நுவரெலிய மாவட்டத்தில் வெப்பநிலையாக 22 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகின்றது என வளி மண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (வ-ஐ-5)

## மரண அறிவித்தல்கள்

### புலவர்மணி விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அம்மையார்

அன்னை மடியில்
12 . 11 . 1931



ஆண்டவன் அடியில்
05 . 03 . 2016

ஈழத்தின் மூத்த ஆன்மீகவாதியும் குப்பிளான் தந்த பெண் புலவருமான புலவர்மணி விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அம்மையார் தனது 84ஆவது வயதில் நேற்று முன்தினம் (05.03.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் சின்னையா - உமையாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், பொன்னம்மா கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற சிவத்தொண்டன் சி.நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவராசா (லண்டன்), தேவராசா (லண்டன்), விக்கினேஸ்வரி (குப்பிளான்), சரோஜாதேவி (நந்தினி - ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சிவயோகன் (பிரான்ஸ்), சிவகண நாதன் (கணன் - பிரான்ஸ்), சிவாஜினி (பிரான்ஸ்), சிவகௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (07.03.2016) திங்கட்கிழமை சிவராத்திரி நன்னாளில் குப்பிளானிலுள்ள அவரது உறவினர் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு. தகவல்: க.தேவராசா
ஏழாலை. (69896)(15.17) (பெறாமகன் - லண்டன்)

தொடர்புகளுக்கு:
க.தவராசா - 00443330113809
க.தேவராசா - 00447574266308
சிவகணநாதன் (கணன்) - 0033148808901
சி.ஆனந்தன் (குப்பிளான்) - 021 205 9361

### கிருஸ்ணபிள்ளை இராசநாயகம்



ஓடை அல்வாய் தெற்கை பிறப்பிடமாகவும் கோட்டத்தெரு வதிரியை வசிப்பிடமாகவும் மாத்தளையை தற்காலிகவசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை இராசநாயகம் நேற்று (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பிள்ளையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் பூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக்கணவரும் வனஜா, அருட்செல்வம், அனுசா, பத்மஸ்ரீ, ஸ்ரீராஜமனோகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகராஜா, சிவச்செல்வி பரஞ்சோதி, ஷோபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சபாநாய கம் மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜரத்தினம் காலம்சென்ற பாலசிங்கம் மற்றும் மகேஸ்வரன், பரமேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் கஜாயினி, செந்தூரன், சரணியன், ஹருணியா, பபா, சந்தோஸ், ஜனனி, ஸ்ரீசஜித், மர்னா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வதிரிச்சந்தி வதிரி கரவெட்டியில் உள்ள ச.சுப்பிரமணியம் (மகான்) அவர்களது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரிச்சந்தி, தகவல்: குடும்பத்தினர்.
வதிரி கரவெட்டி. 0212264825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்த்த நாடுகளும் இப்போது பலமாகவுள்ளன இலங்கைக்கு

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7
முன்னைய அரசு பதவியில் இருந்த போது, இலங்கையை எதிர்த்த நாடுகள் உள்ளடங்கலாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் அனைத்தும் தமக்குப் பக்கபலமாக இருப்பதாக, அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள, நிதி இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க,
சில நாடுகளுடன் மட்டும் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொண்டு இலங்கையினால் முன்னேறிச் செல்ல முடியாது.

புதிய அரசு கடந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பதவிக்கு வந்த பின்னர், இலங்கையின் சர்வதேச உறவுகள் முன்னேற்றமடைந்துள்ளன. அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் உதவிகளை இலங்கையினால் இப்போது பெற முடிகிறது.

கடந்த காலங்களில் சீனா வழங்கிய உதவிகளை இலங்கையினால் மறந்து விட முடியாது. ஆனால், சீனாவின் பின்னணியுடன் மட்டும் முன்னேறி விட முடியாது என்று இலங்கை உணர்ந்து கொண்டுள்ளது.

இந்தியாவுடனும் மிக நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டியது முக்கியமானது என அரசு கருதுகிறது.

சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றினாலும், இறைமையுள்ள நாடு என்ற வகையிலேயே முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(வ-5)

# இந்தியாவுடன் எட்கா உடன்பாடு; எச்சரிக்கை அணுகுமுறை தேவை

## என்கிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 7
இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டை (எட்கா) செய்து கொள்ளும் விடயத்தில் எச்சரிக்கை அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்.



இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

குறித்த உடன்பாட்டு வரைவின் உள்ளடக்கம் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கோ அல்லது பொது மக்களுக்கோ அதிகார பூர்வமாக தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவுடன்எட்காஉடன்பாட்டுக்குள் நுழையும் போது படிப்படியான அணுகு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

முதற்கட்டமாக, இந்தியாவுடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவதில் உள்ள தடைகளை இந்தியா நீக்க வேண்டும். இந்தக் கட்டத்தில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இதன் மூலம் இருநாட்டு மக்களிடையேயும் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், சுதந்திர வர்த்தக உடன்பாட்டை நடைமுறைப்படுத்தல், இலங்கையின் பங்காளர்களுக்கு திருப்தியை ஏற்படுத்தினால், அடுத்த கட்டத்துக்குள் நுழையலாம்.

தற்போது, ஆண்டுதோறும் 4 ஆயிரம் மில்லியன் டொலருக்கு இந்தியப் பொருள்களைச் சந்தைப்படுத்த இலங்கை வாய்ப்பை அளித்துள்ளது. ஆனால் சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு அமைய இருதரப்பு வர்த்தகத்தில் சமநிலை பேணப்படவில்லை.

இந்தியாவுக்கு எமது ஏற்றுமதிகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படவில்லை என்று இலங்கையர்கள் உணர்கின்றனர். ஆடை, தேயிலை போன்ற எமது முக்கிய உற்பத்திகளை கட்டுப்பாடுகளின்றி இந்தியா திறந்து விட வேண்டும்.

தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்க்காமல், இந்தியாவுடன் பரந்தளவிலான வர்த்தக உடன்பாடுகளை செய்து கொள்ள முயன்றால், பொதுமக்களின் எதிர்ப்பு இயல்பாகவே அதிகரிக்கும் என்றும் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். (வ-5)

# விபத்தில் சாவடைந்தவர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்.ஸ்ரான்லி வீதியில் டிப்பர் விபத்தில் சாவடைந்த முதியவர் நேற்று அடையாளம் காணப்பட்டார். திருகோணமலையிலிருந்து உறவினரைப் பார்வையிட யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தவரே விபத்தில் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் திருகோணமலை சின்னக்குளம் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் (வயது-69) என்பவரே கொல்லப்பட்டார். ஸ்ரான்லி வீதியில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த அவரை அவருக்கு பின்னால் சென்ற டிப்பர் வாகனம் மோதியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் கால் முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காது பின்னர் உயிரிழந்தார்.

எனினும் அவர் முதலில் அடையாளம் காணப்படாது உறவினர்களால் பொறுப்பேற்கப்படாது இருந்தார். அது தொடர்பில் தகவல் வழங்கிய பொலிஸார் அடையாளம் காணுமாறு கோரியிருந்தனர்.

இந்தநிலையில் நேற்று அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்ற பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். டிப்பர் சாரதி வழக்கை எதிர்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஜ-4)

# நடிகர் கலாபவன் மணி நேற்றுக் காலமானார்



கொழும்பு, மார்ச் 7
பிரபல நடிகர் கலாபவன் மணி கேரளாவில் நேற்று தனது 44 ஆவது வயதில் காலமானார்.

உடல்நிலை மோசமாகி, கொச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று மாலை 6 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

மலையாள நடிகரான கலாபவன் மணி தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளில் நடித்திருக்கிறார். மலையாளத்தில் நாயகனாவும், தமிழ், தெலுங்கில் குணச்சித்திரம் மற்றும் வில்லனாகவும் நடித்திருக்கிறார்.

தமிழில் ஜெமினி, மழை, வேல், ஆறு உள்ளிட்ட பல படங்களில் நடித்திருக்கிறார். சமீபத்தில் கமல் நடிப்பில் வெளியான பாபநாசம் படத்தில் பொலிஸ் கதாபாத்திரத்தில் அவரின் நடிப்பு, அனைவராலும் பாராட்டப்பட்டது.

(வ-5)

# சனசமூக நிலையங்களின் சமாசத் தெரிவு

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலக எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களின் சமாசத் தெரிவு கடந்த திங்கட்கிழமை உப பணிமனையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் அ.வினோராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமாசத்தின் தலைவராக பொ.வல்லிபுரநாதன், செயலாளராக இ.சுதாகரன் மற்றும் பொருளாளராக கா.இராஜ்மோகன் மற்றும் உபதலைவராக சி.அருணாசலம், உபசெயலாளராக செ.செல்வநாயகம் ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக சகல சனசமூக நிலையங்களில் இருந்தும் தலா ஒரு பிரதிநிதி என்ற வகையில் 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். வரணி உப பணிமனையின் கீழ் 24 சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன.

(ற-ஜ-122)

# நண்டு வலையில் மாட்டிய முதலை



யாழ்ப்பாணம், மார்ச் 7
அச்சுவேலி வல்லை பரவக் கடலில் மீனவர் ஒருவர் நண்டு பிடிப்பதற்கு விரித்திருந்த வலையில் முதலை மாட்டியது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. வல்லைப் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தினமும் இரவில் நண்டுக்கு வலை விரித்துகாலையில் அதனை எடுப்பதை, வழமையாக் கொண்டு வருகின்றார்.

அன்றைய தினம் போட்டிருந்த வலையையெடுக்க முயற்சி செய்த போது, 6 அடி நீளமான வெண் முதலை ஒன்று மாட்டியுள்ளது. கயிற்றினால் கட்டி அதனை கரைக்கு எடுத்து வந்த அவர், இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

(வ-107)

பதினைந்தாவது அகவைப் பிறந்தநாளில்
ஆறாத நினைவுகளுடன்



தாயின் மடியில்
07 . 03 . 2001

தாயக மண்ணில்
10 . 04 . 2009

செல்வி
டக்சாயினி சத்தியநாதன்
(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி - 2009 ஆம் ஆண்டு)

கண்ணே! நீ பிறந்தபோது உன்தாய்
களிப்புடனே திளைத்தாள்
கற்பகமே! உன் செயல்
கண்டு தந்தை ஆச்சரியப்பட்டார்
காலன் உன்னை அழைத்து
காலங்கள் பல சென்றாலும்
கண்ணே! உன்னை எண்ணுகையில்
கண்களில் நீர் வழியுதடி எம்
கண்ணீர் துடைக்க நீ வருவாயென
காலமெல்லாம் காத்திருக்கின்றோம்.

உன்நினைவில் வாழும்

A9 சாலை,
கந்தசாமி கோவில் முன்பாக,
கிளிநொச்சி.

அம்மா, அக்கா,தம்பி, அம்மம்மா,
மாமாமார், அத்தைமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

(69897)(15,17)

**விற்பனைக்கு**

வியாபார நிலையத்தின்
காகிதாதிகள்.பாடசாலை
உபகரணங்கள்.தளபாடங்கள் என்பன மலிவு
விலையில் உடன் விற்பனைக்கு உண்டு.
(க-29561)(2,18,20)
தொடர்பு: பஸ் நிலையம், சுன்னாகம்
077 853 5599

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள கடை ஒன்றில்
விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்
தேவை. சம்பளம் 18000/=
தொடர்புக்கு :0217912997

**அச்சக பணியாளர் தேவை**

★ புத்தகம் கட்டுநர்.ஸ்கிறீன் பிறிண்டிங் - பெண்(அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும்)
★ அலுவலக சுத்திரிப்பாளர்- பெண்.
(68549)(2,19,20)
தொடர்பு: 077 203 3097

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைக்

ஏனையவர்கள் வெள்ளைக் கொடியுடன் முன்னே சென்றனர். அவர்கள் படையினரால் ஒரு பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதன்போது, விடுதலைப் புலிகளை முன்னே வருமாறு இராணுவத்தினர் கூறினர். சரணடைந்த விடுதலைப் புலிகள் தனியாகக் கொண்டு செல்லப்படுவதால் எனது கணவர் சரணடைவதற்கு அஞ்சினார். ஆனால், சரணடைபவர்களை ஐந்து நிமிடங்கள் சோதனையிட்ட பின்னர் விடுவிப்போம் என்று இராணுவத்தினர் கூறினர். அப்போது எனது கணவரும், ஏனைய 35 பேரும் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

அவர்கள் கைவிடப்பட்டிருந்த வீடு ஒன்றுக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் பின்னர் அவரைக் காணவில்லை. என்னை வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமுக்குக் கொண்டு சென்றதால் கணவர் பற்றிய மேலதிகமாக, எந்தத் தகவலையும் பெற முடியவில்லை. முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் கணவரைத் தேடித் திரிந்தபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் உயிருடன் இருப்பார் என்று நம்புகிறேன். என்றும் அந்தப் பெண் சாட்சியம் அளித்திருந்தார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## உங்கள்

வேண்டுகோள் முன் வைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று, எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்பே கூட்டமைப்பு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

நீண்டகாலமாக விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி, கொழும்பு - மகசின் சிறைச்சாலையில் நேற்று 13 ஆவது நாளாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடரும் 14 தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பில் நீண்ட நேரமாக ஆராயப்பட்டது.

இறுதியில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை துரிதப்படுத்தப்படவுள்ள நிலையில், மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் இருக்கும் கைதிகள் தமது போராட்டத்தை உடன் கைவிடவேண்டும், என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கையில், நாளை மறுதினம் (நாளை) செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் காணாமற்போனோர் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான கூட்டமைப்பின் சபை ஒத்திவைப்புப் பிரேரணை விவாதிக்கப்பட்ட பின்னர் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, விரைவில் முடிவொன்று எட்டப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, நீண்ட காலமாக விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை உடன் கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயவாகக் கேட்டுக் கொள்கின்றது - என்றார். (த-வ-5)

## நாவற்குழியில்

பேச்சாளருடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவர் பதிலளிக்கவில்லை.

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில், சிங்கள மக்கள் குடியமர்ந்திருக்கின்றனர். இதற்கு அருகில் தமிழ் மக்களும் குடியமர்ந்துள்ளனர். இந்தக் குடியிருப்புகளுக்கு அருகில், விசேட அதிரடிப் படையினரின் முகாம் அமைந்திருக்கின்றது.

குறித்த முகாம் அமைந்துள்ள காணியை தமக்கு வழங்குமாறு விசேட அதிரடிப் படையினர் கோரினர். இதற்கு அமைவாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 5 ஏக்கர் காணியை படையினருக்கு வழங்குமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைய விசேட அதிரடிப் படையினருக்கான காணி அளவீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இன்னமும் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்படவில்லை.

இந்த நிலையில், விசேட அதிரடிப் படையினருக்கு ஒதுக்கிய காணியிலிருந்து சிறிது தொலைவில், புதிதாக நேற்று முன்தினம் தமிழ் மக்கள் கொட்டில்கள் அமைத்து குடியிருப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதனையே சீருடையினர் பிடுங்கி எறிந்துள்ளதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த பகுதியில், கடந்த நான்கு வருடங்களாகக் குடியிருக்கும் சின்னையா முத்தையா என்பவர் தெரிவிக்கையில், இன்று (நேற்று) காலையில் தமது குடியிருப்புக்குள் வந்த விசேட அதிரடிப் படையினர் பிரதீஸன் வதீஸா, தர்மகுலசிங்கம் வரதா, குணரத்தினம் அனீத்தா ஆகியோரின் வீடுகளைப் பிடுங்கிவிட்டு, தற்போது அங்கு வீடு அமைத்துக் கொண்டிருக்கும் அருண் கமலேஸ்வரன், ராஜ்குமார் சுஜீதா ஆகியோரின் வீட்டு வேலையை நிறுத்துமாறும் குறிப்பிட்டனர்.

மேலும் கந்தையா சுதாகரன், சின்னையா முத்தையா, கிருஷாந்த் சுஜீதா ஆகியோரின் வீடுகளை மாலைக்குள் பிடுங்கவேண்டும் என்றும் தெரிவித்தனர். குறித்த காணி தமக்கு வழங்கப்பட்டதெனவும் விசேட அதிரடிப்படையினர் எம்மிடம் குறிப்பிட்டனர்.

விசேட அதிரடிப் படையினரின் இந்தச் செயற்பாடு தொடர்பில் கந்தர்மடத்தில் உள்ள இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் அலுவலகத்துக்குத் தெரிவிக்கச் சென்றோம். அவர் லண்டனுக்குச் சென்றுவிட்டதாகவும் ஒன்பதாம் திகதிதான் வருவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் இன்று (நேற்று) மதியம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்றபோது, இன்று (நேற்று) மாலைக்குள் குடியிருப்புக்களைப் பிடுங்கிக் கொண்டு வெளியேறவேண்டுமெனத் தெரிவித்து எம்மிடம் கையெழுத்துப் பெற்றனர், எனவும் சின்னையா முத்தையா குறிப்பிட்டார்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸாரின் கருத்தை அறிவதற்காக, பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்குப் பலமுறை அழைப்பு மேற்கொண்டபோதும் அவர் பதிலளிக்கவில்லை.

இதேவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நேற்று மாலை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையினருக்கு எதிராக முறைப்பாடு செய்தனர். அத்துடன் தாம் குடியமர்ந்த காணிகளிலேயே நேற்று இரவு குறித்த குடும்பங்கள் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5-4-9)

## கைதிகளில்

13 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இன்றும் தொடரும் என்று அவர்களது உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

மகசின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் 14 பேர் கடந்த 22 ஆம் திகதியிலிருந்து, உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் பலர் மயங்குவதும் பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலைக்குச் செல்வதும், பின்னர் சிறைக்குத் திரும்பி மீண்டும் உணவு தவிர்ப்பில் ஈடுபடுவதுமாக இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், அகஸ்ரின் ஞானசீலன், பாலசுந்தரம் மனோகரன், மார்க்கண்டு நேவிநாதன் ஆகியோர் நேற்று மயக்கமடைந்து விழுந்துள்ளனர். குறித்த கைதிகளை மருத்துவ சிகிச்சைக்காக சிறைச்சாலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது, அவர்கள் மருத்துவ சேவையையும் புறக்கணித்திருந்தனர். அதனால் அவர்கள் கட்டாயப்படுத்தி மருத்துவ சேவைக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும் அவர்களின் உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவை அவர்களுக்குக் கட்டாயம் தேவைப்படுகின்றபோதும் அதனையும் புறக்கணிக்கும் அளவுக்கு அவர்கள் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதனால் தான் அவர்கள் நேற்றுக் கட்டாயப்படுத்தித் தள்ளுவண்டிலில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை வைத்தியசாலைக்குப் போக மறுத்த கைதிகள் சிறைச்சாலை ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றைக் கொடுத்துள்ளனர். அதில், நல்லாட்சி அரசுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகிறது.

எனினும் அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லாட்சி அரசு தொடர்ந்தும் பொய் வாக்குறுதிகளைத் தந்து, எமது மக்களையும், எம்மையும் ஏமாற்றி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்? எமது மக்களையும், எம்மையும் தொடர்ந்தும் இந்த நல்லாட்சி அரசு ஏமாற்றுமாக இருந்தால், நல்லாட்சி அரசுக்கு, எமது மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் கூறியுள்ளனர். (த-வ-4)

## ஒரு வீட்டுக்கு

திட்டம் அமைக்கப்படவுள்ளது. இதில் ஒவ்வொரு வீட்டுக்கும் 21 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுத் திட்ட ஒப்பந்தத்தை முன்னெடுக்கும் பொறுப்பு பிரான்ஸைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுக்கான மதிப்பீடு 21 லட்சம் ரூபா என்பது மிக அதிகம் என்று, தேசிய வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார். அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்திருந்தார். இந்தச் செலவு மதிப்பை மீள் மதிப்பீடு செய்யவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய, இந்த வீட்டுத் திட்டத்துக்கான செலவு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு இந்த வீட்டுத் திட்டத்துக்கான செலவை மதிப்பீடு மேற்கொண்டு விரைவில் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரே, இந்த வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## வடக்கு

இரா.சம்பந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சிறிகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் மற்றும் ஆர்.ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் பிற்பகல் ஒரு மணி வரையிலான மூன்று மணி நேரம் நடைபெற்றுள்ளது. இதில் அதிகளவிலான நேரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பிலேயே பேசப்பட்டுள்ளது.

இதன் பின்னர், வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், இந்த விடயம் தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனை விட, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நாடாளுமன்றத்தை, அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றும் யோசனைக்கு ஆதரவாக வாக்களிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசுடன் பேசப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (த-வ-5)

## எவ்வளவு

வட்டவளை ரொசல்ல கிளிஸ்ன் தோட்டத்தில் ஸ்ரீ கணேசர் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தோட்டத்தொழிலாளர்கள் கடவுளின் மக்கள் என்று கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். ஆம். ஆன்மிகம் மீது அதிக பற்றுவைத்துள்ளனர். ஆலயங்களைப் பராமரிக்கின்றனர். இவ்வாறு பல நற்பண்புகள் இருக்கின்றன.

எமது ஆட்சியின்போது மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம். பாடசாலை அமைப்பு, வீதி அமைப்பு என திட்டங்களைப் பட்டியலிட்டுக் காட்டலாம். தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுத்தோம். ஆனால், சிலர் சூழ்ச்சிகள் ஊடாக மக்களைத் திசை திருப்பி விட்டனர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றார்கள். இரண்டாயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தனர். இவை நடந்துள்ளனவா?

தோட்டத்தொழிலாளர்கள் உட்பட தமிழ் பேசும் மக்களுக்கு அன்று சுதந்திரமாக நடமாடமுடியாத சூழ்நிலை இருந்தது. கொழும்புக்கு வருவதாக இருந்தால் கடும் பாதுகாப்பு நெருக்கடி இருந்தது. காலி வீதியில் மாத்திரம் 25 இடங்களில் சோதிக்கப்படும் நிலை இருந்தது. போரை முடித்து இந்த நிலையை மாற்றியமைத்தோம். வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மக்களுக்கும் சுதந்திரத்தை வழங்கினோம்.

இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள், பெரும்பான்மை இனத்தவர்கள் என்று எவரும் இல்லை. நாட்டை நேசிப்பவர்கள், நேசிக்காதவர்கள் என்ற தரப்பினரே இருக்கின்றனர். எம்மிடம் இனவாதம் இல்லை. நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்.

வடக்கு, கிழக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தேன். இன்று பல்கலைக்கழகத்துக்கு வடக்கிலிருந்தே கூடுதல் மாணவர்கள் தெரிவாகின்றனர். ஆனால், வடக்கு, கிழக்கு மக்களின் இதயங்களை வெற்றிகொள்ள முடியாமல் போனது - என்றார். (த-வ-சி)

## இரத்தினபுரியில்

நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை. இருப்பினும், மக்கள் மத்தியில் சிறு அச்சம் ஏற்பட்டது.

இந்த நில அதிர்வு தொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் விசாரணைகளைத் தொடங்கி யுள்ளது.

பலாங்கொடை நகரை மையமாகக் கொண்டு இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பல்லேகலையில் அமைந்துள்ள புவியியல் ஆய்வு மையத்தின் கட்டமைப்பில் சிறிய அளவிலான அதிர்வு பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க ஆழப்படுத்தல் பணியகம் தெரிவித்துள்ளது. (த-வ)


## மரண அறிவித்தல்

### திருமதி மேரிராணி கிறிஸ்தோப்பர்

பிறப்பு 1938 . 10 . 21



இறப்பு 2016 . 03 . 03

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிராணி கிறிஸ்தோப்பர் 03.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யோசவ்கிறிஸ்தோப்பரின் மனைவியும் றொகான், நேசன், நாதன் (நோர்வே), செல்வினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யூலி (ஜேர்மன்) காலஞ் சென்றவர்களான அன்ரன் தவசிங்கம், கனிஸ்ரா, ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் துளசி, ராணி, யோகேஸ்வரி, மகிழ்ராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தன், தாமரை,அஜய், கௌரி, அனோஜன், கனோஸின், கிறிஸ்டி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுகனியா, லிங்கா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33/21, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(69454)(12.18.20)

021 221 9625, 077 624 4514


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



வல்வை சிதம்பராக் கல்லூரியின் கால்பந்தாட்ட அணிக்காக சீருடைகள் சில புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் தேவ சிகாமணி சங்கர் என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ம-108)

# மைக்கலை வீழ்த்தி சம்பியனானது டயமன்ஸ் கரவெட்டிப் பிரதேச செயலக கால்பந்தாட்டத்தில்

கரணவாய், மார்ச் 7

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து நடப்பு வருடத்தின் சம்பியனாகியது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று குறித்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்துடன் இணைந்து டயமன்ஸின் ஆதிக்கமும் ஆரம்பமானது. நான்காவது நிமிடத்தில் டயமன்ஸின் வீராங்கனை சிந்துஜா தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்ய அந்தக் கோலே முதல்பாதியில் பதிவான ஒரே கோலாகவும் அமைந்தது.

தளராத போராட்டத்தின் மத்தியில் அரங்கேறியது இரண்டாம் பாதி. கோல் கணக்கில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது டயமன்ஸ். (ம-422-108)



## விடைபெறுகிறார் மோர்ரசா

ரி-20 உலகக்கிண்ணத் தொடருடன் பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்ரசா சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளுக்குத் தலைவராக இருக்கும் மோர்ரசா, பங்களாதேஷ் அணிக்காக 15 ஆண்டுகளுக்கு மேல் விளையாடி வருகிறார். இந்த நிலையில் அவர் உலகக் கிண்ண ரி-20 தொடருடன் ஓய்வு பெறுவார் என்று தெரிகிறது.

இது குறித்து மோர்ரசா தெரிவிக்கையில்:- இன்னும் சில ஆண்டுகள் விளையாடும் எண்ணம் இல்லை. இறைவன் மனது வைத்தால் இந்த ஆண்டு முழுவதும் விளையாடலாம். அனேகமாக நடப்பு வருடத்தின் ரி-20 உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளேன். மேலும், 2017 ஆம் ஆண்டு நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலும், 2018 ஆம் ஆண்டின் ரி-20 உலகக்கிண்ணத் தொடரிலும் பங்கேற்கும் எண்ணமில்லை-என்றார். (ம)

# கிளிநொச்சி வலய மட்டத்தின் சதுரங்கத் தொடரின் முடிவுகள்

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கத் தொடரில் 15வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயமும், 15வயது பெண்கள் பிரிவில் பளை மத்திய கல்லூரியும், 19 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயமும் 19 வயது பெண்கள் பிரிவில் உருத்திரபுரம் மகா வித்தியாலயமும் கிண்ணங்களைக் கைப்பற்றின.

இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. இதன்படி 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை பளை மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை இராமநாதபுரம் மகாவித்தியாலயமும் தமதாக்கின.

15 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பளை மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை தருமபுரம் மத்திய கல்லூரியும் கைப்பற்றியுள்ளன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைகிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மகாவித்தியாலயமும்,மூன்றாம் இடத்தை வட்டக்கச்சி மத்திய கல்லூரியும் கைப்பற்றின.

19 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை உருத்திரபுரம் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை தருமபுரம் மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை வட்டக்கச்சி மத்திய கல்லூரியும் தமதாக்கின. (ம-405)



## ஸ்கந்தா எல்லேயில் அசத்தல்

மாங்குளம், மார்ச் 7

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான எல்லே தொடரில் ஆண்கள், பெண்கள் இரு பிரிவிலும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இறுதியாட்டங்கள் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4:3 என்ற ஓட்டங்களில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. மூன்றாமிடத்தை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணி தனதாக்கியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டு இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 5:1 என்ற ஓட்டங்களில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. மூன்றாமிடத்தை மானிப்பாய் பெண்கள் பாடசாலை அணி தனதாக்கியது. (ம-23-422)

# டயமன்ஸ், சிவகுமரன் சம்பியனாகின கரவெட்டிப் பிரதேச எல்லே தொடரில்





கரணவாய், மார்ச் 7

கரவெட்டிப் பிரதேச எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் நடப்பு வருடத்தின் பிரதேச சம்பியன்களாகின.

**சிவகுமரன் - டயமன்ஸ்**

இறுதியாட்டங்கள் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிவகுமரன் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலக்ஷனா 3 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 6 ஓட்டங்களை இலக்காக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய டயமன்ஸ் அணி 4 ஓட்டங்களை மட்டும் பெற்று வெறும் ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

**டயமன்ஸ் - மனோகரா**

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இரண்டு இன்னிங்ஸைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா அணி 50 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரதீப் 2 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து முதல் இன்னிஸில் துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் அணி 7 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துஸி 2 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இன்னிஙஸில் துடுப்பெடுத்தாடிய மனோகரா அபாரமாக துடுப்பெடுத்தாடி 8 ஓட்டங்களை விளாசி எதிரணிக்கு அதிர்ச்சி கொடுத்தனர். அதிகபட்சமாக சனுஜன் 3 ஓட்டங்களையும் பிரதீப் 2 ஓட்டங்களையும் பெற்றனர். 6 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த டயமன்ஸ் அணி 37 ஆவது பந்தில் இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அரவிந்தன் 3 ஓட்டங்களைப் பெற்றார். (ம-108)

## ஹரிஸின் ஆசை

அண்மையில் ஓய்வுபெற்ற வேகப்பந்து வீச்சாளரான ஆஸ்திரேலிய அணியின் நியன் ஹரிஸ், ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுப் பயிற்றுநர் பதவியை ஏற்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (ம)

# கரைதுறைப்பற்று கோட்ட மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு, மார்ச் 7

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள கரைதுறைப்பற்றுக் கோட்ட மட்ட எல்லேத் தொடர் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. எல்லே தொடரைத் தொடர்ந்து சில முக்கியமான பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன்படி எல்லேத் தொடர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. கால்பந்தாட்டத் தொடர் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதன்படி 17, 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அளம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்திலும் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஆட்டமும், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஆட்டம் உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

வலைப்பந்தாட்டத் தொடர் வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பூப்பந்தாட்டத் தொடர் 12 ஆம் திகதி சனிக்கிழமை கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. துடுப்பாட்டத் தொடர் 12 ஆம் திகதி சனிக்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் பெரும் போர் வியாழனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடர் எதிர்வரும் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வடக்கின் போர் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. ஆட்டத்தில் கனவான் தன்மையைப் பேணும் விதத்தில் இந்த முறை சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன்படி சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் சுப்பிரமணியம் பூங்கா பக்கமாக உள்ள நுழை வாயில் ஊடாகவும், பழைய மாணவர்களும் அலுவலர்களும் மேற்கு பக்கமாக உள்ளநுழைவாயில் ஊடாகவும் மைதானத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் தம்பர் மண்டபத்தின் பக்கமாகவுள்ள வாயில் ஊடாகவும் ஆசிரியர்களும் மாணவர்களும் கிழக்கு பக்க வாயில் ஊடாகவும் மைதானத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
கல்லூரிச் சீருடையுடன் எந்த மாணவனும் வீதிகளில் உலா வருதலோ அல்லது பணம் சேகரிப்பில் ஈடுபடுதலோ முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆட்டமிழப்பு ஏற்பட்டாலோ அல்லது வீரர்கள் 50, 100 ஓட்டங்களைப் பெற்றலோ ஆதரவாளர்கள் மைதானத்துக்குள் செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறுவோர் தண்டனைக்குரியவர்களாக கணிக்கப்படுவார்கள். மைதானத்துக்குள்ளும் வெளியும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முழு அதிகாரமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-23)



## கிண்ணம் வென்றது கொக்குவில் இந்து நல்லூர் கல்விக் கோட்ட கால்பந்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 7
நல்லூர் கல்விக் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது கொக்குவில் இந்து. இரண்டாம் பாதியிலும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியால் ஈடுகொடுக்க இயலவில்லை. மேலும் இரு கோல்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சார்பாக பதிவாக,முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது அந்த அணி.மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இரு அணியினரும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிபட்டது. சமநிலைத் தவிர்ப்பில் யாழ். இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

## கே.ஸி.ஸி.ஸியினது துடுப்பாட்டத் தொடர்

மாங்குளம், மார்ச் 7
கே.ஸி.ஸி.ஸிவிளையாட்டுக் கழகம் நடப்பு வருடத்துக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொடரில் கலந்து கொள்ள விருப்பமுடைய யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னதாக தொடருக்கான தமது பதிவு களை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறி வித்துள்ளனர். (ம-422)

## பாரதி, ஐக்கிய அணிகள் சம்பியனாகின

யாழ்ப்பாணம், மார்ச் 7
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நாயன்மார்க்கட்டு பாரதி அணியும் பெண்கள் பிரிவில் அரியாலை ஐக்கிய அணியும் சம்பியனாகின.
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய கரப்பந்தாட்ட திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நாயன்மார்க்கட்டு பாரதி அணியை எதிர்த்து சித்தி விநாயகர் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நாயன்மார்க்கட்டு பாரதி அணி 25:12 25:15 25:14 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து அரியாலை சிறி கலைமகள் அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய அணி 25:16 25:14 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியனாகியது. (ம-23)

## தெல்லிப்பழை யூனியன், இளவாலை கன்னியர்மடம் கிண்ணங்களைக் கைப்பற்றின வலிகாம எறிபந்தில்





யாழ்ப்பாணம், மார்ச் 7
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியும் கிண்ணங்களைச் சுவீகரித்துள்ளன.
இறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணி 25:8, 25:10 என்ற நேர் செற்கணக்கில் சம்பியனாகியது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி 28:18, 25:23 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. 3ஆம் இடத்தை மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை அணி பெற்றது. (ம-422)

## தேவிபுரம் அ.த.க., புதுக்குடியிருப்பு மத்தி. வலைப்பந்தாட்டத் தொடரில் சம்பியனாகின

மாங்குளம், மார்ச் 7
புதுக்குடியிருப்பு கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 15வயது, 17வயதுப் பிரிவுகளில் தேவிபுரம் அ.த.க.பாடசாலையின் அணிகளும், 19வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் சம்பியனாகின.



விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. இதில் 15வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முதலாமிடத்தை தேவிபுரம் அ.த.க.பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயமும், மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும் பெற்றன.
17வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முதலாமிடத்தை தேவிபுரம் அ.த.க.பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அணியும் பெற்றன.
19வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முதலாமிடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை தேவிபுரம் அ.த.க.பாடசாலை அணியும் , மூன்றாமிடத்தை வள்ளிபுனம் பாரதி வித்தியாலய அணியும் பெற்றன. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியக் கிண்ணம் இந்திய அணியின் வசம்

# ஒரு ஆட்டத்திலேனும் தோல்வியடையாமல்




பங்களாதேஷ்அணியை 8 இலக்குகளால் வீழ்த்தி ஆசியக்கிண்ணத்தை ஆறாவது முறையாகக் கைப்பற்றியது இந்திய அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மழை பெய்ததன் காரணத்தினால் ஆட்டம் 15 பந்துப்பரிமாற்றங்களாக மட்டுப்படுத் தப்பட்டிருந்தது. பங்களாதேஷின் ஆரம்ப வீரர்களாக இக்பால் மற்றும் சர்கர். முதல் பந்துப் பரிமாற்றமே அஸ்விணிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்பாலின் ஆட்டத்தில் திருப்தியில்லை. இக்பால் மூலம் வீணடிக்கப்பட்ட பந்துகளை சரிசெய்தார் சர்கர். இருவரையும் நீடிக்க விடவில்லை. இக்பாலை வெளி யேற்றினார் பும்ரா. சர் கரை வெளியேற்றினார் நெக்ரா. ரகுமான், சகிப் அல்கசன் இணைந்து பங்களாதேஷின் சராசரியை உயர்த்தினர். ஜடேயா, நெக்ரா இருவரின் பந்துப்பரிமாற்றங்களுக்கும் முறையாகக் கவனிக்கப்பட்டது. பங்களாதேஷ் 64 ஓட்டங்களுடன் இருந்த வேளையில் 21 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார் சகிப் அல் கசன். ரகிம், மோர்ரசா இருவரும் அடுத்தடுத்து ஆட்டமி ழந்தனர். முகமதுல்லா, ரகுமான் இருவரும் இணைந்து முழங்கித்தள்ளினர். பாண்டியா, தான் வீசிய மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தில் 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். 13 பந்துகளில் 33 ஓட்டங்களைக் குவித்தார் முகமதுல்லா. முடிவில் பங்களாதேஷ் 120-5. பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக அஸ்வின், நெக்ரா, ஜடேயா, பும்ரா நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கியது இந்திய அணி. முதல் இரண்டு பந்துப்பரிமாற்றங்கள் வரை இலக்கை எட்டும்படியான சராசரி இருக்கவில்லை. ஒரு ஓட்டத்துடன் ரோகித்தை வெளியேற்றினார் அல்அமின் கொசைன். இதுவும் இந்திய அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. கோக்லி, தவான் இணைய முதல் 5 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் இந்திய அணி 24 ஓட்டங்களையே பெற்றிருந்தது. ஆனால் ஒரேயொரு இலக்கு மட்டுமே வீழ்த்தப்பட்டிருந்தது. பவர்பிளே முடிந்த கையுடன் விளாசலை ஆரம்பித்தார் கோக்லி. சிறிது நேரத்திலேயே தவானும் தொடங்கினார். அவ்வப்பொழுது சிக்சர்களும் இருந்தன. 35 பந்துகளில் அரைச்சதம் கடந்து 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். களமிறங்கி னார் டோனி. இறுதி இரண்டு பந்துப்பரிமாற்றங்களில் 19 ஓட்டங் களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. அல் அமினின் பந்துப்பரிமாற்றத்தில் 104 மீற்றருக்கு இமாலய சிக்சர் ஒன்றை விளாசினார் டோனி. அதே பந்துப்பரிமாற்றத்தில் மேலும் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் டோனியின் துடுப்பில் இருந்து பறக்க 7 பந்துகள் மீதமிருக்க வென்றது இந்திய அணி.

பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக ரஸ்கின் அகமட், அல் அமின் கொசைன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக தவானும் தொடராட்ட நாயகனாக ரகுமானும் தெரிவானார்கள். (ம)




# இமாலய இலக்கை நிர்ணயித்தது தெ.ஆபிரிக்கா இறுதிப்பந்தில் எட்டிப் பிடித்தது ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இறுதிப்பந்துவரை போராடி 5 இலக்குகளால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. வில்லியர்ஸ் எட்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் துள்ளிக்குதித்தனர் ஆஸ்திரேலிய வீரர்கள். ஹொக், பிளாசிஸ் இணைய ஆஸ்திரேலியாவின் கொட்டம் அப்படியே அடங்கியது. ஆறாவது பந்துப் பரிமாற்றத்திலேயே 50 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. ஹொக்கை போல்ட்டாக்கினார் பல்க்நெர். டுமினி 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மில்லர், பிளாசிஸ் இணை சிறிதுநேரம் மிரட்டியது. அரைச்சதம் கடந்தார் பிளாசிஸ். 150 இற்கும் அதிகமான சராசரியில் வெளுத்து வாங்கினார் மில்லர். 33 ஓட்டங்களுடன் மில்லரை வெளியேற்றினார் அகர். பெக்கார்டின், மொறிஸ் அடுத்தடுத்து ஆட்டமி ழந்தாலும் மறுமுனையில் சிக்சர் மழை பொழிந்தார் பிளாசிஸ். கஸ்ரிங்ஸ் வீசிய இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் மட்டும் இரண்டு பவுண்டரிகளையும் இரண்டு சிக்சர்களையும் தொடர்ச்சியாக விளாசி 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிளாசிஸ். இறுதிப்பந்தும் சிக்சராக மாற்றப்பட முடிவில் தென்னாபிரிக்கா 204-7.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக பல்க்நெர் 3 இலக்குகளையும், கஸ்ரிங்ஸ் 2 இலக்குகளையும், மார்ஷ், அகர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாக பின்ஞ் மற்றும் வற்சன். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே பின்ஞ்சை போல்ட் ஆக்கினார் ரபாடா. வற்சன் 9 ஓட்டங்களுடனும் சிமித் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா 32-3 என்ற நிலையில் இருந்தது. வோர்ணர், மக்ஸ்வெல் இருவரும் இணைந்து தென்னாபிரிக்காவின் பிடியில் இருந்த ஆஸ்திரேலியாவை படிப்படியாக மீட்டெடுக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினர். ஆரம்பத்தில் நிதானித்து பின்னர் தமக்கே உரிய அடையாளமான அதிரடிக்குத் திரும்பினர். வெற்றிக்காற்று ஆஸ்திரேலியாவின் பக்கமும் திரும்பியது. மக்ஸ்வெல் 26 பந்துகளிலும், வோர்ணர் 25 பந்துகளிலும் தமது அரைச்சதங்களைப்பூர்த்தி செய்தனர். 15ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 150 ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. இறுதி 30 பந்துகளில் 55 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற நிலைமை. ஆஸ்திரேலியா 193 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மக்ஸ்வெல் 75 ஓட்டங்களுடனும், 194 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் வோர்ணர் 77 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இருப்பினும் மிச்செல் மார்ஷ், பல்க்நெர் இருவரும் இணைந்து இறுதிப்பந்துவரை போராடி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா, ஸ்ரெயின் இருவரும் தலா இரு இலக்குகளையும், மொறிஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக வோர்ணர் தெரிவானார். (ம)

இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை

நீங்கள் தற்சமயம் 18 வயதிற்கு மேற்பட்ட தொழில் வாய்ப்பற்ற சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு தயாராக உள்ளவரா?

இவ்வாய்ப்பு உங்களுக்குரியதே!

விண்ணப்ப முடிவு திகதி - 15.03.2016

பயிற்சிப்பட்டறை செயற்படுத்தும் முறைமை

+ பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ள நாள்கள்: 02 (சனி, ஞாயிறு நாள்கள்)
+ நேரம்: மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை.
+ பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ள காலப்பகுதி: சித்திரை மற்றும் வைகாசி 2016.
+ வளவாளர்கள்: வழிகாட்டல் வல்லுநர்களும் மற்றும் யாழ்ப்பாணத்தில் தொழில் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களும் பங்குபற்றுவர்.
+ ஏனைய வசதிகள்: மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும்.

யார் யார் விண்ணப்பிக்கலாம்?

- தொழில் வாய்ப்பற்ற இளைஞர்கள்
- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்து பல்கலைக்கழகத் தெரிவிற்கு உட்படாத மேலதிக கல்விக்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கும் இளைஞர்கள்
- க.பொ.த (சாதாரணம்) அல்லது க.பொ.த (உயர்தரம்) படித்தவர்கள் ஆனால் சித்தி பெறாதவர்கள் மற்றும் பாடசாலையில் இருந்து இடை விலகிய மற்றும் இளைஞர்களின் பெற்றோர்கள்.
- இச்செயற்பாடுகள் தொழில் வழிகாட்டல் நிகழ்வுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள ஆசிரியர்கள்.

விண்ணப்பங்கள் படிவம் மற்றும் மேலதிக தகவல்களுக்கு

IMS
The Director,
Institute of Medical Sciences,
Green Memorial Hospital, Manipay,
Tel.: 021 225 6335/0777286164
Email: theimsjaffna@gmail.com
Website: www.theims.net

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org